# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (12.03. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தி நாள் (130) அன்பளிப்பு 60 p


பெண்கள் சமஉரிமை பெற்று, சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று, ஆண்களுடன் சமத்துவமாக, கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாக தமிழீழம் அமைய வேண்டுமென்பதே எனது ஆவல்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

# சீனன்குடா - வவுணதீவில் விடுதலைப் புலிகள் வெற்றிகரத் தாக்குதல்கள்

✳ விமானத் தளத்தின் பிரதான பகுதி தரைமட்டம்
✳ வை–12 சீனத் தயாரிப்பு விமானம், விமான எதிர்ப்புப் பீரங்கிகள் அழிப்பு
✳ உதவிக்கு விரைந்த புக்காரா விமானம், எம்.ஐ.–24 உலங்குவானூர்தி சேதம்
✳ விசேட பயிற்சி பெற்ற இராணுவத்தைக் கொண்ட முகாம் முற்றாகத் தாக்கியழிப்பு
✳ 150 இற்கும் மேற்பட்ட படையினர் பலி, பலர் காணாமல் போயினர்
✳ முகாம் தாக்கியழிப்பில் 84 போராளிகள் வீரச்சாவு

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மற்றுமிரு மகத்தான அரசியல் - இராணுவப் பரிமாண வெற்றிகள் - திருகோணமலையிலுள்ள சீனன்குடாவிலும், மட்டக்களப்பிலுள்ள வவுணதீவிலும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் இம் மாதம் 06 - 03 - 97 அன்று அதிகாலை ஈட்டப்பட்டுள்ளது.

சிறிலங்கா விமானப் படையின் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட தளமாக வர்ணிக்கப்பட்ட திருகோணமலை சீனன்குடா விமானத் தளத்தின் பிரதான பகுதி - 5ஆம் திகதி நள்ளிரவில், பாதுகாப்புத் தடைகளை ஊடறுத்து நுழைந்த கரும்புலிகளின் வீரம் செறிந்த அதிரடித் தாக்குதலில் தகர்க்கப்பட்டுள்ளது.

இச்சமயம் சீனத் தயாரிப்பு விமானமான வை–12 மற்றும் இரண்டு விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் அழிக்கப்பட்டன.

தொடர்ச்சி 4 ம் பக்கம்...




## சொந்த நிலத்தில் அந்நியராகும் தமிழர்கள்

சிங்களப் படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தில் வாழும் மக்கள் தமது சொந்த மண்ணிலேயே அந்நியராகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது உத்தியோகபூர்வ மொழியாக சிங்கள மொழியே பாவிக்கப்படுகிறது. தமிழர்களின் வரலாற்றுப் பிரதேசமாகத் திகழும் யாழ்ப்பாண மண்ணில் இவ் அந்நிய மொழியே முற்று முழுதாக எல்லா அலுவலகங்களிலும் அமுல்படுத்தப்படுவதால், அங்கு வாழும் தமிழர்கள், இந்தப் புரியாத மொழியால் பெரும் சிக்கலான சூழ்நிலையை எதிர்கொண்டு வருகின்றனர். தம்முடைய பிரச்சினைகளை வெளிப்படுத்த முடியாத கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தை விட்டு வெறியேற விரும்பினும், அதற்குரிய விண்ணப்பத்தைச் சிங்களத்திலேயே கொடுக்க வேண்டும்.

இவ்வாறு சிங்களப் பேரினவாதம்...

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## "விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளென அழைக்கமுடியாது தமிழர்களின் தலைவிதிதான் தண்டு விடுகிறது"

"தமிழீழ விடுதலைப் புலிகளை நாம் பயங்கரவாதிகளென அழைப்பதில்லை. 'அரச எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்' என்றே அழைக்கிறோம். தமிழீழ விடுதலைப் புலிகளைப் 'பயங்கரவாதிகள்' என அழைப்பதாயின் அரச இராணுவத்தையும் பயங்கரவாதிகள் என்றே அழைக்க வேண்டும். ஏனெனில் அவர்களும் உயிர்ச் சேதம், பொருட் சேதம் விளைவிக்கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளென அழைத்துக்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

### உள்ளே... ☞


- அப்பாவில் சிறுமைப்படுத்தப்படும் பெண்கள்
- பரந்தன் - ஆனையிறவு சமரில் வீரமரணமடைந்த போராளிகள் விபரங்கள்...
- "சத்ஜய"படை பெறிபடும்...
- கடை (நீதிமன்ற) வழக்கு...
- நந்திக் கடலோரம் (கவிதை)...
- திடலங்கள் தண்டிக்கப்பட... (சிறுகதை)
- தமிழீழச் செய்திகள்...
- மக்கள் பணியில் த.பு.க (TRO)
- போரும் பொருளியலும் (TEEDOR)...
- மீண்டாடிய தென்னாடின்...


## என்றுமில்லாத அளவில் போராட்டத்தில் இணையும் இளவயதினர்

தமிழீழ விடுதலைப் போரின் இம் முக்கியமான காலகட்டத்தில், அதனை வழிநடாத்திச் செல்லும் சுதந்திர இயக்கத்தோடு நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் என இளைஞர்கள் முழுமையாகத் தம்மை இணைத்து வருகின்றனர். தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் வழிநடாத்தலில் வீறுநடை போடும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நாளாந்தம் இளையதினர் இணைவது தற்போது உயர்நிலையை அடைந்துள்ளது. தமிழீழ சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இந் நிகழ்வு, ஓர் உயர்ந்த தன்மான உணர்வின் மேலோங்கத்தைக் காட்டி நிற்கின்றது.

தாயகப் பிரதேசங்கள் சிங்கள அந்நியப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதை யதார்த்தமாகக் கண்டுகொள்ளும் தமிழர்கள், தமது இன்னுயிரைக் கொடுத்தாவது தமது இனத்திற்கு விடுதலையைப் பெற்றுக்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# 09, 10 ஜனவரி 97 பரந்தன் -ஆனையிறவுச் சமரில் வீரகாவியம் படைத்த மாவீரர்களின் மிகுதி விபரம்



**வீரவேங்கை ஜெகநாதன்**
தம்பிராஜா உதயதாஸ்
பாலமோட்டை, வவுனியா.

**லெப். நீலவாணன்/அப்பு**
கருப்பையா நாகராஜா
பூம்புகார், கல்மடு.
த/மு தாண்டிக்குளம், வவுனியா.

**லெப். கதிர்ச்செல்வன்**
சதானந்தம் புஸ்பராஜா
வோட் இல.05, முள்ளியவளை.

**லெப். விதுஷன்**
மரியதால் பரேரா சுதர்சன் (பரேரா)
அரிப்புத்துறை, முருங்கன், மன்னார்.

**லெப். சுபதீபன்**
அன்ரனிசாமி அன்ரன் ஜெறோம்
குச்சவெளி, திருகோணமலை.
த/மு 76, கார்த்திட்டம், மாங்குளம்,
உடையார்கட்டு.

**2ம் லெப். தேவதீபன்**
சிவராஜா சிவஞானமூர்த்தி
யோகபுரம், மல்லாவி.

**லெப். சேது**
யோகரதன் ரவிக்குமார்
முத்தமிழ் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

**கப்டன் தாசன்**
திருகோணலிங்கம் சுதாஸ்கரன்
407, திருநகர், கிளிநொச்சி.

**கப்டன் கௌசிகன்**
சுப்ரமணியம் ஞானசுந்தரம்
வட்டாரம் -05,
சாம்பல்தீவு, திருகோணமலை.

**கப்டன் நிதர்சன்/நிக்ஷன்**
கணபதிப்பிள்ளை செல்வராஜா
இல-15, 3ம் குறுக்குத்தெரு, கட்டை 08,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

**2ம் லெப். சிவஞானம்**
ஆறுமுகம் கண்ணன்
தச்சன்குளம், வவுனியா.

**லெப். மலரவன்**
வைரமுத்து செல்வன்
கொண்டையன்கேணி,
வாழைச்சேனை, மட்டக்களப்பு.

**லெப். வேங்கைவேந்தன்**
கணபதி ரதீஸ்வரன்
சில்லாலை தெற்கு,
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

**வீரவேங்கை கலையரசன்/சுதந்திரநாயகம்**
பாலசிங்கம் நக்கீரன்
மீசாலை வடக்கு, கொடிகாமம்.

**லெப். ஆனந்தன்**
மகேந்திரன் விமலேந்திரன்
இலந்தபுரம், முறிகண்டி,
த/மு இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி.

**மேஜர் தியாகு/வெற்றிவேல்**
அந்தோனி பிரான்சிஸ்
தாமரங்குளம், ஜெகோபுரம், வவுனியா.

**2ம் லெப். சதாசிவம்**
லக்ஸ்மணன் சந்திரசேகரம்
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

**கப்டன் தென்றல்மாறன்/மாறன்**
கந்தசாமி மயில்வாகனம்
அளவெட்டி தெற்கு, அளவெட்டி, யாழ்ப்பாணம்.

**கப்டன் நரேந்திரன்/ நரேந்தி**
பாஸ்கரன் விஜயகாந்தன்
திருகோணமலை,
த/மு புளியங்குளம்,
ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு.

**2ம் லெப். பூவரசன் /தாசன்**
[illegible]
முருகன் கோவிலடி,
பேசாலை, மன்னார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**வீரவேங்கை ஈழமுதன்**
இராமலிங்கம் கிருஷ்ணராஜா
6 ஜோன்ஸ் றோட் பழைய பஜார், கண்டி வீதி,
நுவரெலியா.

**வீரவேங்கை செல்வா**
மாணிக்கராஜா நிரஞ்சன்
L V3 கிளிவெட்டி, மூதூர்.

**வீரவேங்கை சுதர்சன்**
மரியதாஸ் அன்ரனி உடிக் செல்வசுதாகரன்
கனல் வீதி, மாதகல், யாழ்ப்பாணம்.
த/மு: புதுக்குடியிருப்பு அருகில் முல்லை–
துயிலுமில்லம்.

**வீரவேங்கை சுதர்சன்**
சிவப்பிரகாசம் பத்மநாதன்
பெரிய மடு, நெடுங்கேணி,
முல்லைத்தீவு.

**வீரவேங்கை விமலன்**
செல்வரத்தினம் ஜெயரூபன்
12, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

**வீரவேங்கை தமிழ்முத்தன்**
நடேசன் தமிழ்வேந்தன்
புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

**திருத்தம்-**

சென்ற களத்தில் இதழில், 10ஆம் பக்கத்தில் வெளிவந்த மாவீரர் பெயர் பட்டியலில் 140ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்ட,

**மேஜர் வாணன்**
வீரகத்திப்பிள்ளை இரஞ்சிதமலர்
பழைய தோட்டம்–முரசுமோட்டை
த/மு பரந்தன், கிளிநொச்சி
என்பதை,

**மேஜர் வேணன்**
வீரகத்திப்பிள்ளை இரஞ்சித்குமார்
பழைய கமம்–முரசுமோட்டை
த/மு பரந்தன், கிளிநொச்சி

என எடுத்துக் கொள்ளவும்.
இத்தவறுக்கு மனம் வருந்துகின்றோம்.

பரந்தன்-ஆனையிறவுச் சமரில் வீரகாவியம் படைத்து, தாயக மீட்புப் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துவிட்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கங்கள்.

## எடிபல ஆக்கிரமிப்புப் போரினால் முருங்கன் நானாட்டன் வைத்தியசாலை மூடல்

சிறிலங்காப் படைகள் நடாத்திய எடிபல எனும் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கையினால் மன்னார் நானாட்டான் வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. குண்டுத் தாக்குதல்கள் மூலமும், எறிகணை வீச்சினாலும் இவ் வைத்தியசாலைக் கட்டிடங்களுக்கும் பலத்த சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளதினால் வைத்தியசாலை ஊழியர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ✱

## மீண்டும் நூல் நிலையம் - பேரூந்து சேவை விஸ்தரிப்பு

முல்லை மாவட்டத்தில் மாவீரர் ஞாபகார்த்த நூல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இந் நூல் நிலையத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் - ஆங்கிலப் புத்தகங்கள் வாசகர்களின் சேவைக்கு என வைக்கப்பட்டுள்ளன. முன்னர் கோண்டாவிலில் இயங்கிவந்த இந் நூல் நிலையம், சிறிலங்காப் படைகளின் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பின்போது மூடப்பட்டது. அங்கிருந்த நூல்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளினால் பத்திரமான முறையில் முல்லை மாவட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ✱

## 16,000 ரூபா தங்கச் சங்கிலி போட்டிருந்ததாகக் கைது

மாத்தறையில் [illegible] பயணம் செய்து கொண்டிருந்த ராஜேந்திரம் மகேந்திரன் என்பவரை வீதியில் வைத்துக் கைது செய்த சிறிலங்காப் படையினர், அவர் 16,000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி போட்டிருந்தார் எனவும், ஆனால் அவர் பயணம் செய்த வண்டி சவாரிக்கு உகந்ததல்ல எனத் தொண்டிச் சாட்டுக் கூறி அவரைக் கைது செய்துள்ளனர். பின்னர், அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகக் கூறி அவரைச் சிறை வைத்துள்ளது. இதேபோன்று வீரகெட்டிய என்ற இடத்தில் 24 வயதுடைய தமிழ்ப் பெண் ஒருவரை அவர் வீட்டுப் பணியாளராக கடமையாற்றுவதன் [illegible] பொருட்படுத்தாது கைது செய்த சிறிலங்காப் பொலிசார், அவர் புலிகள் இயக்கத்தில் இருப்பதாக உண்மைக்கு மாறான செய்திகளைப் பரப்பியுள்ளனர். ✱

## சிங்களவர்களின் வன்முறைத் தாக்குதலைத் தாங்க முடியாமலே தமிழர்கள் அகதியாகின்றனர்

### - ஜெயின் ஆணைக்குழுவில் தமிழக முதலமைச்சர்

"சிங்களவர்களின் வன்முறைத் தாக்குதலைத் தாங்க முடியாமலேயே தமிழர்கள் அகதிகளாகத் தமிழகம் வருகின்றனர். இலங்கைத் தமிழர்கள் ஆரம்ப காலத்தில் தம் எதிர்ப்புக்களை அமைதியாகவே வெளிக் காட்டினர். ஆயினும், இலங்கை அரசின் பொறுப்பில் இருப்போரில் பெரும்பான்மையானோர் சிங்களவர் என்பதனால் அவர்கள் சிங்களவர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து ஆட்சி நடத்தினர். இவ்வாறான அணுகுமுறைகளால் இலங்கைத் தமிழர்கள் வீடுவாசல்களை இழந்து நிர்க்கதியாக வீதிக்குத் தள்ளப்பட்டுள்ளனர்" இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், ஜெயின் ஆணைக்குழு விசாரணையில் சாட்சியம் அளிக்கையில் தெரிவித்தார்.

இந்திரா காந்தி பிரதமர் பதவியில் இருந்த காலத்தில் இருந்தே தமிழகத்தில் புலிகளின் தகவல் தொடர்பு மையங்கள் இருந்து வந்ததாகக் கூறிய கருணாநிதி அவர்கள், 1990ஆம் ஆண்டில் இந்தியக் கப்பல் படை பார்போ துறையில் இருந்தவாறு புலிகளின் இரகசியத் தகவல் பரிமாற்றங்களை ஒட்டுக் கேட்டதோ, ரோ அமைப்பும் இதேபோல் தகவல் சேகரித்ததோ தமக்குத் தெரியாது எனவும் கூறினார். ✱

## வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலகத்தில் ஐந்து மாவீரர்களுக்கு நினைவு நடுகல்

பெப்ரவரி 6ஆம் திகதி மன்னார்க் கடலில் எதிரிப் படையுடன் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்த லெப். கேடயன் (ராமலிங்கம் தமிழ்வாணன், யாழ்.) ஜனவரி 9இல் பரந்தன் - ஆனையிறவுச் சமரில் வீரச்சாவடைந்த வீரவேங்கை சீலன் (தவத்திரவியம் மாதன், யாழ்.), லெப். இளவேனில் (கஜனி ரெட்ணம், யாழ்.) வீரவேங்கை மாங்கனி (கௌரியா இளையகுட்டி, யாழ்.), மணலாற்றில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் தமிழ்நெஞ்சன் (வில்வலிங்கம் கமலநாதன், யாழ்.) ஆகிய மாவீரர்களுக்கு 03-03-97 அன்று வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் மக்கள் வணக்கத்துடன் நினைவு நடுகற்கள் நாட்டப்பட்டன. ✱



# இராணுவத் தீர்வு இராணுவ இழப்பாகிறது

தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு 'இராணுவத் தீர்வு' காண முயன்ற சந்திரிகாவின் அரசுக்கு, இராணுவத் தீர்வு அணுகுமுறை – இராணுவ இழப்புகளுக்கே இட்டுச்செல்லும் என்ற உண்மையை சீனன்குடா – வவுணதீவு இழப்புக்கள் மீண்டும் உறுதி செய்துள்ளன.

சீனன்குடா சிறிலங்காவுக்கு மட்டுமல்ல தெற்காசியாவிற்கே முக்கியமான விமானத் தளம். நடந்து முடிந்த உலகப் போர்களில் சர்வதேசக் கவனத்தைக் கவர்ந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளம். பிரித்தானியர் காலத்தில் புவியியல் பாதுகாப்பான முறையில் நிறுவப்பட்ட இத் தளம், சிறிலங்கா அரசால் காலத்துக்குக் காலம் நவீனமயப்படுத்தப்பட்டு சிறிலங்கா வான் படையின் முக்கிய தளமாக பலத்த பாதுகாப்புடன் திகழ்ந்தது. இதனை ஊடுருவித் தாக்கும் வலிமை புலிகளுக்கு உண்டென்றால் – சிறிலங்காவின் எந்தப் பாதுகாப்பு வலயத்தையும் நொறுக்கும் பலம் அவர்களுக்கு உண்டென்பதே பொருள்.

இதனை உறுதி செய்வதுபோல் ஒரே நாளில் நிகழ்ந்தது மற்றைய தாக்குதல். முந்நூறுக்கும் மேற்பட்ட சிறப்புப் பயிற்சி பெற்ற இராணுவத்தினரைக் கொண்டிருந்த வவுணதீவு இராணுவமுகாம், சீனன்குடா பிரதான பகுதி தகர்க்கப்பட்ட அதேநேரத்தில் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான இனஅழிப்பை மேற்கொள்ளும் படையினருக்கு, விடுதலைப் புலிகள் இன்னொரு பாடம் புகட்டியுள்ளனர்.

சந்திரிகாவும் அவரது அமைச்சர்களும் "வடக்குடன் தான் போர்" என்ற உண்மைக்கு மாறான தோற்றத்தை உலகுக்கு அடிக்கடி கூறிக் கொண்டிருக்கும்போதே – வடக்கு மட்டுமல்ல கிழக்கும் சிறிலங்காவின் ஆக்கிரமிப்பை ஒவ்வொரு நிமிடமும் எதிர்த்துக் கொண்டே இருக்கும் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தியுள்ளது வவுணதீவு – சீனன்குடா தாக்குதல்கள்.

ஏற்கனவே 142 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய 13 விமானங்களை 32 மாதங்களில் இழந்து பரிதவிக்கும் சிங்கள வான்படை, மிகுதியாக உள்ளவற்றையும் பாதுகாக்கும் நிலையை இழந்து வருகின்றது என்பதை சீனன்குடா மேலும் தெளிவாக்கியுள்ளது. கடைசியாக இடம்பெற்ற இரத்மலானை 'அன்ரனோவ்' விமான விபத்துடன், 'அன்ரனோவ்' விமானங்களையே பறக்கவிடாது 'தரையிறக்கம்' செய்து மிகுதியான மூன்று விமானங்களையும் சிறிலங்கா தக்கவைக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. இந்நேரத்தில் சீனன்குடாவில் வை–12 விமான அழிப்பும், உலங்கு வானூர்தியும் உதவிக்கு விரைந்த புக்காராவும் பாதிப்புற்ற சம்பவமானது, சிறிலங்கா வான்படையினால் வடக்கு – கிழக்குப் போருக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியாது என்பதை நன்கு தெளிவாக்குகிறது. இதனை சிறிலங்கா வான்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்காவே ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில், இராணுவ முகாம்களைத் தக்கவைத்துக் கொள்ளவும் இயலாத நிலை சிறிலங்கா இராணுவத்திற்கு விரைந்து கொண்டிருக்கிறது என்பதை வவுணதீவு இராணுவ முகாம் வீழ்ச்சி மேலும் உறுதியாக்குகிறது. இது சிறிலங்கா அரசுக்கு "வெந்த புண்ணில் வேல் பாய்வது போல்" ஆகிவிட்டது.

"புலிகளை காட்டுக்கு அனுப்பிவிட்டோம்" என்று கொக்கரித்த சந்திரிகாவின் படையினர்கள் காட்டுக்குள் ஓடி உயிர்களைத் தக்கவைக்கும் யதார்த்த நிலையினை எய்தியுள்ளனர். "போரினூடாக அரசியலை மேற்கொள்ள நினைத்த அரசு, தோல்வியைத் தழுவுகிறது" என சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக தெரிவித்து வருகிறார்.

ஆயினும், சந்திரிகா அரசு இன்னமும் தமிழின அழிப்பினால் தங்கள் அரசியல் தீர்வுகளைத் தமிழீழ மக்கள் மேல் திணிக்கலாம் எனும் நப்பாசையுடன் 3 கடற்படைக் கப்பல்களை வாங்குவதற்கு சீனாவிடமும், உக்ரேனிடமும் வர்த்தகப் பேச்சில் ஈடுபட்டுள்ளது. அதேவேளை, இராணுவத்தினர் ஒருவருக்கு 10,000 ரூபாவுக்கும் அதிகமான சம்பளம் வழங்கப்படும் என்ற பசப்பு வார்த்தையுடன் ஆட்சேர்ப்பு முயற்சிகளை முடுக்கிவிட்டுள்ளது. "குடாநாட்டுக்கும், மட்டக்களப்பிற்கும் போக சிங்கள இளைஞர்கள் அஞ்சுகிறார்கள் என்பதினால் திருகோணமலையில் கடமையில் அமர்த்தப்படுவர்" எனச் சந்திரிகா அரசு உத்தரவாதம் வழங்கி விளம்பரம் கொடுத்தநிலையில் திருகோணமலை சீனன்குடாத் தாக்குதல் திருகோணமலையின் நிலையையும் தெளிவாக்கியுள்ளது.

இந்நிலையில், தமிழ்ப் பொதுமக்கள் மீதான குண்டுவீச்சு – எறிகணைத் தாக்குதல்களையும் வகைதொகையற்ற காரணமில்லாக் கைதுகளையும்தான் சிறிலங்கா அதிகரிக்கச் செய்யும். இதனை தடுத்து நிறுத்த விடுதலைப் புலிகளுக்கு நிதியும், வளங்கள் அளித்தலும், சர்வதேச உலகுக்கு சிறிலங்காவின் மனிதாயத்துக்கு எதிரான குற்றங்களை எடுத்து விளக்கி தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு உலக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதும் நமது கடமையாக வளர்கிறது. ✳

# எடிபலவும் புதியகளமும்

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க, மீண்டும் ஒரு தடவை யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான காலக்கெடுவை உறுதியளித்துள்ளார். வடக்கு யுத்தத்தை இந்த வருடம் முடிவுக்குக் கொண்டுவந்து, நாடுமுழுவதும் சமாதானம் நிலைநாட்டப்படும் என எம்பிலிப்பிட்டியாவில் அவர் தெரிவித்தார். எடிபல இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்புக்கள் மன்னார் சென்றடைந்துள்ள சூழ்நிலையில், ஜனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கள் சிங்களவர்க்கு அவர்மீது நம்பிக்கையை ஊட்டலாம். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கண்டுவிடலாம் என்பதையும் வலுவடையச்செய்யலாம். இதனால், உள்ளூராட்சித் தேர்தலில் அவருக்கு வாக்குகள் கிடைக்கவும் சாத்தியப்படலாம். ஆனால், எடிபல இராணுவ நடவடிக்கையின் நோக்கம் பற்றி இராணுவ ஆய்வாளர்களிடம் தற்பொழுதும் மாறுபட்ட கருத்துக்களே உள்ளன. அரச தரப்பினர் தள்ளாடி இராணுவத்தளத்துடன் கூடியதாக, மன்னார்த் தீவுக்கு ஒரு தரைவழிப்பாதையைத் திறப்பதே நோக்கம் எனத் தெரிவிக்கின்றனர். இதில் வெற்றி கண்டுவிட்டதாகவும் கூறுகின்றனர். ஆனால், இதனை இராணுவ ஆய்வாளர்கள் ஒப்புக்கொண்டதாக இல்லை. தள்ளாடி முகாமைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென அவர்கள் கருதுகின்றனர். அதாவது, வடக்கில் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக உள்ள தள்ளாடி இராணுவ முகாம் மீது, புலிகள் எப்பொழுதும் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சமும் இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்கின்றனர்.

ஆய்வாளர்களின் இக்கருத்துக்கு ஒப்புதலான கருத்துக்களை அரசாங்கத்தரப்பினர் வெளிக்காட்டாத போதும், இதனை முற்றாகப் புறக்கணித்து விடவும் முடியாது. ஏனெனில், புலிகள் ஏற்கனவே முல்லைத்தீவிலும் பரந்தனிலும் தமது தற்போதைய பலத்தை நிரூபித்துள்ளனர். ஆகையினால், தற்பொழுது ஒதுக்குப்புறமாக உள்ள ஒரேயொரு படைத்தளத்தின் பாதுகாப்புக் குறித்து இராணுவத்தரப்பு அக்கறை கொள்ளாமல் இருக்கமுடியாது. அதிலும் சிறிலங்காவின் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் புலிகள் ஒரு பாரிய தாக்குதலை நடத்தி இராணுவத்திற்குப் பெரும் உயிரிழப்பையும் தளபாட இழப்பையும் ஏற்படுத்துவார்களேயானால், அது தேர்தலில் அரசுக்கு ஓரளவு பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடும். இந்த நிலையில் இதனைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் படை நடவடிக்கை ஒன்றை அரசு நடத்தியுள்ளது என்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஆனால், எடிபல இராணுவ நடவடிக்கையின் நோக்கம் எதுவாக இருப்பினும் இந்த நடவடிக்கையின் அடிப்படையில் ஒரு மதிப்பீட்டுக்கு வருவதோ அல்லது தீர்மானங்களை மேற்கொள்ளுவதோ பெரும் பொருத்தப்பாடான ஒன்றாக இருக்கமாட்டாது. ஏனெனில், இவ் இராணுவ நடவடிக்கையின்போது புலிகள் இராணுவத்தை எதிர்க்கவில்லை என்பது மட்டுமல்ல, இவ் இராணுவ நடவடிக்கையின் பிரதிபலிப்பை அவதானிப்பதற்கு உரிய கால அவகாசமும் இன்னும் போதுமானதாக இல்லை. ஆனால், இவ் இராணுவ நடவடிக்கையானது களத்தில் புதியதொரு போர்ச்சூழலை உருவாக்கியுள்ளது என்பதை மட்டும் துணிந்து கூறமுடியும். ஒரு வகையில் நீண்ட தூரப் பாதையொன்றை இராணுவம் எடுப்பதால் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்படுத்தியுள்ளது எனலாம். அத்தோடு, பெரும் காட்டினூடாக இவ்வேலி அமையவேண்டியுள்ளதால், புதிய போர் யுக்திகளின் களமாகவும் அது மாறுவதற்கான

**ஆசிரிய தலையங்கம் , ஈழநாதம் – தமிழீழம்**

[illegible] துள்ளது. இந்த வகையில் பாதுகாப்பு வலயங்கள் போர் முனையில் இதுவரை இல்லாத அளவிற்கு மிகவும் கஷ்டமான ஒரு நடவடிக்கையில் இராணுவம் இறங்கியுள்ளது என்றே கூறலாம்.

ஏனெனில், இங்கு புலிகளின் உயர்பரப்பிலான கெரில்லாப்போர் யுக்திகளை இராணுவம் சந்திக்க வேண்டிவரும். இது சிறிலங்கா இராணுவத்திற்கு நிச்சயமாகப் பெரும் சேதத்தை விளைவிப்பதாகவே இருக்கும். இதனைத் தடுப்பது என்பது சாத்தியமானதாக ஒருபோதும் இருக்கமாட்டாது. ஆகையினால், எடிபல நடவடிக்கை இராணுவத்திற்கு இரத்தக்களரி மிக்க அதன் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்றை உருவாக்கியுள்ளது என்று மட்டும் துணிந்து கூறமுடியும். ✳

## வாசகர் கவனத்திற்கு !

தியாகச்சுடர் அன்னை பூபதியின் 9ம் ஆண்டு நினைவுதினத்தை (ஏப்ரல் 19) முன்னிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு, அன்னையைப் பற்றிய கவி வரிகளை எட்டுவரிகளுக்கு மேற்படாமல் (தலைப்புடன்) வரையுங்கள்.
உங்கள் ஆக்கங்களை 11 - 04 - 1997 முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**'Kalathil' , Eelam House, 202 Long Lane ,London SE1 4QB, U.K.**

களத்தில் ஆசிரியர் குழு



# சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் - முஸ்லீம் பிரமுகர்கள் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லீம் பிரமுகர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் மட்டக் களப்பு மாவட்டம் இலுப்படிச்சேனையில் விடுதலைப் புலிகளின் செயலகத்தில் 27-02-97 அன்று இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியற் பொறுப்பாளர் கீதன், மட்டு - அம்பாறை மாவட்டத் தளபதி ராம், பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் விசு ஆகியோரும் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் சார்பில் எஸ்.எல்.எம். கனிபா, வர்த்தகர் ஆதம்பாவா, முக்கியஸ்தர்களில் ஒருவரான மார்சல் ஆகியோரும் கலந்து கொண்டனர். இரு மணிநேரம் இச் சந்திப்பு இடம்பெற்றது. இது குறித்து அரசியற் பொறுப்பாளர் கீதன் கருத்துத் தெரிவிக்கையில்,

"மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டுக்குப் பின் இவ்வாறான சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது. தீய சக்திகளினால் தோற்றுவிக்கப்பட்ட முரண்பாடுகளைப் போக்குவது அவசியமாகும். முஸ்லீம் மக்களுக்கு எமது போராட்டத்தைத் தெளிவுபடுத்த வேண்டியது மிக அவசியமாகும். பக்க சக்தியாக அவர்கள் எமக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கையை இத்தகைய சந்திப்புக்கள் ஏற்படுத்தும்.

எமது போராட்டத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தும் அனைவரும் எமது எதிரிகளே. இதில் சிங்களம், தமிழ், முஸ்லீம் என்ற வேறுபாடு கிடையாது. முஸ்லீம் மக்களுடன் ஐக்கியமாக வாழவே விரும்புகிறோம். மூன்றாவது சக்தி இவ் உறவைக் குலைக்க முற்படுவதை அனுமதிக்கக் கூடாது. அவர்களை இனங்கண்டு செயற்பட வேண்டும். நாம் எப்பொழுதும் அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல் நடாத்தவில்லை. பரஸ்பர சந்திப்புக்கள் மூலம் சிறு சிறு பிரச்சனைகளை முடிவுக்குக் கொண்டு வரலாம். கருத்து முரண்பாடுகளைத் தவிர்க்கலாம். தமிழ்ப் பிரமுகர்களைச் சந்தித்து அயற் கிராமங்களில் முஸ்லீம்கள் பாதிக்காதவாறு நடவடிக்கை எடுப்போம். அண்மைக் காலங்களில் தமிழ் - முஸ்லீம் கலவரங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலேயே நடைபெறுகிறது. எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எங்கு பிரச்சினை நடந்தாலும் முஸ்லீம் மக்கள் வந்து தாராளமாக தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்." என்றார். ◆

## விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளென அழைக்கமுடியா...

கொண்டு, அரச படையை நாட்டை மீட்கும் அல்லது காக்கும் படையினர் என அழைக்க முடியாது"

இவ்வாறு கூறியிருக்கிறார் பி.பி.சி. சர்வதேச ஒலிபரப்புச் சேவையின் 'சந்தேசிய' சிங்கள நிகழ்ச்சித் தயாரிப்பாளரான திரு. பிரியந்த வியனகே. ஸ்ரீ லங்கா ரூபவாகினி தொலைக்காட்சிச் சேவையில் 'ஜன மண்டவி' நிகழ்ச்சியில் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் பொழுதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பி.பி.சி. சந்தேசிய சிங்கள ஒலிபரப்பின் முன்னாள் தயாரிப்பாளர் திரு. வசந்த ராஜா, தமிழ் மக்களின் செய்திக்கே முக்கியத்துவம் தந்தார். நீங்களும் அவ்வழியையே தொடர்கிறீர்கள். இது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்" எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த திரு. பிரியந்த வியனகே,

"இக் கருத்தை ஏற்கமாட்டேன். ஏனெனில் வடக்கிலும் கிழக்கிலும் தான் போர் நடக்கிறது. அங்கே தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் தலையில் தான் குண்டு போடுகின்றார்கள். போரைப் பற்றிய செய்திகளை நிச்சயம் சொல்லியே ஆகவேண்டும்." என்றார்.

"தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் அல்லர் என்று சொல்லுகிறீர்கள். இலங்கை மத்திய வங்கி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டபோது அப்பாவி மக்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டனர். இதேபோல இராணுவம் செய்த ஒன்றை உதாரணப்படுத்த முடியுமா?" எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த வியனகே, "வடக்கில் இராணுவம் குண்டு மழை பொழிந்து மக்களைக் கொல்கிறதே" என்றார்.

"தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்திகளை எப்படி விரைவாகத் தருகிறீர்கள்" எனக் கேட்டதற்கு "பாரிஸ், இலண்டன் போன்ற உலகின் பிரதான நகரங்களில் விடுதலைப் புலிகளின் பிரதான செயலகங்கள் அமைந்துள்ளன. அவர்கள் நவீன தொடர்பு சாதனங்கள் மூலம் அந் நகரங்களில் உள்ள செயலகங்களுக்குச் செய்திகளைத் தருகிறார்கள். எமக்கும் அவர்கள் தகவல்கள் வழங்குகிறார்கள். இதனால் நாம் செய்திகளை முதலில் பெற்றுக் கொள்கிறோம். கொழும்பில் பி.பி.சி. செய்தியாளர்களான எல்மோ பெர்னாண்டோ, புனோரா பொட்ஸ்லேர்த் ஆகியோர் இருக்கிறார்கள். இருப்பினும், போர் நடக்கும் பிராந்தியங்களுக்குச் செல்ல செய்தியாளர்களோ, பத்திரிகையாளர்களோ அனுமதிக்கப்படவில்லையே" என்றார். ●

## சீனன்குடா - வவுணதீவில்விடுதலைப் ...

மற்றுமொரு எம்.ஐ.-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்தி கடும் சேதப்படுத்தப் பட்டது. இங்குராகொட எனும் தளத்தில் இருந்தும், அநுராதபுரத்தில் இருந்தும் சிறிலங்காப் படையினருக்கு உதவிக்கு விரைந்த புக்காரா மற்றும் கிபீர் விமானங்கள் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் ஆர்ஜென்டினாத் தயாரிப்பான புக்காரா விமானம் சேதமடைந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் துணிச்சல் மிகு தாக்குதல் குறைந்தது மூன்று மணி நேரமாவது தொடர்ந்ததாக ரொயிட்டர் சர்வதேசச் செய்தித் தாபனம் செய்திகள் வெளியிட்டுள்ளது. இந்தச் சண்டையின் பொழுது பல விமானப் படையினர் கொல்லப்பட்டுள்ளார்கள் எனவும், எனினும் அரச தரப்பு அவைகளை மூடி மறைத்து விட்டது எனவும் செய்திகள் தெரிவிக் கின்றன.

இந்தத் துணிகரமான - வீரம் செறிந்த தாக்குதலில் கரும்புலி கப்டன் நிவேதன், கரும்புலி கப்டன் விஜயரூபன், கரும்புலி மேஜர் சிற்றம்பலம் ஆகியோர் வீரச்சாவை ஏற்று தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் நிரந்தர வாழ்வு பெற்றுள்ளனர்.

திருமலை சீனன்குடா தாக்குதல் நடந்த அதே நள்ளிரவில், ஒரு மணி ஐந்து நிமிடமளவில் மட்டு மாவட்டம் வவுணதீவு எனும் இடத்தில், முந்நூறுக்கும் மேற்பட்ட சிறப்புப் பயிற்சிபெற்ற இராணுவத்தினரைக் கொண்டிருந்த சிறிலங்காவின் கஜபாகு படையணியின் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகளின் தாக்கியழிக்கும் நடவடிக்கை ஆரம்பமானது. வவுணதீவுப் பாலத்தடியில் அமைந்திருந்த இராணுவ முகாம் கைப்பற்றப்பட்டு காலை 7 மணிக்கு பிரதான முகாமும் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இத் தாக்கியழிப்பு நடவடிக்கைகளின் பொழுது சிறிலங்காப் படையினரில் நூற்றி இருபதிக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு மேலும் நூற்றுக்கணக்கில் காயமடைந்துள்ளதாகத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா இராணுவத் தலைமையகம் பலரைக் காணாது தேடிக் கொண்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதான முகாமில் சிக்கிக் கொண்ட படையினரை மீட்கவென புறப்பட்ட படையினரை வவுணதீவுப் பாலத்தைத் தகர்த்துவிட்டு நேரடியாக எதிர்கொண்ட விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில், சிறிலங்கா இராணுவத்திற்குப் பலத்த சேதம் விளைந்துள்ள போதிலும் சிறிலங்கா இராணுவத் தலைமையகம் அது பற்றிய சரியான தகவல்களை வெளியிடாது சிங்கள மக்களை ஏமாற்றி வருவதாக, கொழும்புப் பத்திரிகை வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன. தாக்குதலின் முடிவில் முகாமைப் பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவந்த புலிகள், அங்கிருந்த ஆயுதத் தளபாடங்களை அகற்றிய பின்னர் முகாம் கட்டிடங்களையும் கொண்டு செல்ல முடியாத ஆயுத தளபாடங்கள், வாகனங்களை வெடிவைத்துத் தகர்த்தனர்.

உதவிக்கு விரைந்த புக்காரா குண்டு வீச்சு விமானமும் உலங்கு வானூர்திகளும் விடுதலைப் புலிகளால் விரட்டியடிக்கப்பட்டதை அடுத்து, வவுணதீவில் கைப்பற்றிய முகாமிலிருந்து ஆயுதங்களை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்ட புலி வீரர்கள் மீது மட்டக்களப்பு விமான நிலையத்தில் இருந்தும் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமில் இருந்தும் 'ஆட்டிலறி' எறிகணைகள் சரமாரியாக ஏவப்பட்டன. பதிலடியாக, எறிகணைத் தாக்குதல்கள் வந்த திசை நோக்கி புலி வீரர்கள் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினர். இவ் எறிகணைகள் மட்டக்களப்பு விமான நிலையத்தில் வீழ்ந்து வெடித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வரலாற்று முக்கியத்துவம் மிகு வவுணதீவு தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு - அம்பாறை மாவட்ட மகளிர் படையணி சிறப்புத் தளபதி லெப்.கேணல் மதனா, விநோதன் படையணித் தளபதி லெப்.கேணல் அம்ரோ, மட்டு - அம்பாறை மாவட்ட நிதிப் பொறுப்பாளர் மேஜர் மணிமாறன் உட்பட 84 போராளிகள் தாயக மீட்புப் பணியில் தம்மை ஆகுதியாக்கியுள்ளனர்.

சீனன்குடா - வவுணதீவு, இவ்விரு வெற்றித் தாக்குதலிலும் பங்கேற்று வெற்றியைப் பெற்றுக் கொடுத்துவிட்டு தமது இன்னுயிரை முழுமையாகத் தியாகம் செய்து தமிழீழத் தேசிய மாவீரர்களாகிவிட்ட இவ் வீரவேங்கைகளுக்கு தமிழீழ மக்கள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்து நிற்கின்றனர்.

### பதவியாவிலும் இழப்பின்றி வெற்றித் தாக்குதல்கள்

சீனன்குடா - வவுணதீவு தாக்கியழிப்பு நடைபெறுவதற்கு முதல்நாள் பதவியாவிலும் ஏக காலத்தில் இரு தாக்குதல்களைப் புலி வீரர்கள் நடாத்தி எதுவித இழப்புமின்றி ஐந்து படையினரையும் வீதித் தடை அரண் ஒன்றினையும் இராணுவக் காவலரண் ஒன்றையும் அழித்துள்ளனர். ஆரியகுளம் பகுதியில் இராணுவம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி மேஜர் திலீபன், மேஜர் சிந்துஜன் ஆகிய மாவீரர்களின் நினைவோடு நடாத்தப்பட்ட பதவியாத் தாக்குதலில் பதவியா இராணுவ முகாமுக்கு மிக அண்மையாக இருந்த இராணுவக் காவலரணும் வீதித் தடை அரணுமே தகர்த்தெறியப்பட்டன. விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத இராணுவத்தினர் காயமடைந்த துருப்புக்களுடன் ஓடித் தப்பித்துக் கொண்டனர். ◆

## என்றுமில்லாத அளவில்...

கொடுக்க தாராள மனதுடன் முன் வருகின்றனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் சிங்களப் படையால் அரங்கேற்றப்படும் தொடர் பாலியல் வன்முறைகள், கொலைகள், சித்திரவதைகளிலிருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்க வேண்டும். அவர்களை அந்நிய சக்திகளின் பிடியிலிருந்து விரைவில் மீட்க வேண்டும். தமிழீழ மக்களை இந்த கொடுங்கோலரிடமிருந்து காப்பாற்றிப் பாதுகாக்க வேண்டும். இதற்கு, அதற்குரிய விலையைக் கொடுத்தேயாக வேண்டும். எமது இன்றைய சந்ததி தியாகங்களைச் செய்வதால் மட்டுமே தமிழினத்தின் எதிர்கால சந்ததியைக் காப்பாற்ற முடியும். இது எமது தேசியப் பொறுப்பாக இருக்கிறது. இதனை தற்போது பல தமிழ் இளைஞர்கள் நிதர்சனமாக உணர்ந்து வருவதையே அவர்களின் போராட்ட நீரோட்டத்தில் முழுமையாக இணையும் செயற்பாடு தெளிவாக்கி நிற்கிறது. ❐

## சொந்த நிலத்தில்...

தமிழினத்தை முற்றுமுழுதாக அழிப்பதற்கு பல வழிகளிலும் முயற்சி எடுத்து வருகிறது. அதாவது, அவர்களின் வரலாற்றுப் பெருமைமிகு தாய்மொழியை தடை செய்து தமது மொழியைத் திணித்து தமிழ்த் தேசியத்தின் அடையாளத்தை அழிக்கலாம் என பகற்கனவு காண்கிறது. எப்போதும் பலாத்காரம் ஒருவர் மேல் திணிக்கப்பட்டு நடைமுறைக்கு வருவது சாத்தியமற்ற காரியம். இதனை அனுபவ ரீதியாக உணர்ந்தும், உணராத நிலையில் சிங்களப் பேரினவாதம், தனது இனவெறிச் செயலை தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் செய்து வருகின்றது. ❐

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# ரத்வத்தவின் இராணுவ மூலோபாயமும்

கிளிநொச்சியைக் கைப்பற்றிய கையோடு 2.10.96 அன்று, பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூட்டினார்.

வைத்திருக்க வேண்டும் என்பதுதான், ஐ.தே.கட்சி அரசாங்கங்கள் அமுல்படுத்திய இராணுவ மூலோபாயத்தின் நோக்கமாகும்.

> அரைகுறைத் தீர்வுத்திட்டமொன்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல் வழிமுறைகள் மூலமும், "சமாதானத்திற்கான போர்" என்ற தந்திரோபாயத்தை அடிப்படையாகக் கொண்டு இராணுவச் செயற்பாடுகள் மூலமும் தமிழரின் தேசிய தனித்துவத்தை அழிக்க, தற்போதைய சிங்கள அரசாங்கம் முயல்கின்றது.

கடந்த ஒன்றரை வருட காலமாக தான் நடைமுறைப்படுத்திவரும் இராணுவ மூலோபாயத்தின் (Military Strategy) வெற்றிபற்றி பெருமிதத்துடன் அறிவிக்கவே, பத்திரிகையாளர்களை அழைத்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் கட்டடத்தில் ரத்வத்த தலைமையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் தளுவத்த, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொகான் சமரசேகர, வான்படைத் தளபதி எயார் வைஸ் மாசல் ஒலிவர் ரணசிங்க, பொலிஸ் மா அதிபர் ராஜகுரு மற்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க ஆகியோரும் கூடியிருந்தனர்.

வடக்கைச் சிங்கள இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் கொண்டு வருவதுதான், ரத்வத்த வரைந்த இராணுவ மூலோபாயத்தின் இலக்காகும்.

இதைச் சாதிப்பதற்காகக் கிழக்கைக் கைவிட்டாலும் நட்டம் ஒன்றும் இல்லை என்பது, அவரின் நிலைப்பாடு. ஏனெனில் புலிகள் இயக்கத்தின் உயிர் மையம் வடக்கிலேயே உள்ளது; வடக்கை ஆக்கிரமிப்பதன் மூலம் புலிகள் இயக்கத்தை அழித்துத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒழித்துவிட முடியும் என்று, ரத்வத்த நம்புகின்றார். இதன் அடிப்படையிலேயே, கிழக்கு மாகாணத்தில் இருந்து முன்னர் கணிசமான படையினரை விடுவித்து, சூடா நாட்டுப் படையெடுப்பிற் பங்கேற்க வைத்தார். இப்போது, மேலும் படையினரைக் கிழக்கில் இருந்து

மூன்று இன மக்களும் கலந்து வாழும் கிழக்கில் புலிகளுக்குச் செல்வாக்கு இல்லை என்று காட்டி, "புலிகள் ஒரு அரசியற் சக்தி அல்ல" எனச் சர்வதேசத்திற்கு உணர்த்த, ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம் விரும்பியது. அத்துடன், படிப்படியாகக் கிழக்கைச் சிங்களமயப்படுத்தி–சிங்களதேசத்துடன் அதை ஒன்றாகக் கலக்கச் செய்து, நிரந்தரமாக வடக்கிலிருந்து கிழக்கைப் பிரித்துவிடவும் நினைத்தது. சுருக்கமாகச் சொன்னால், தமிழரின் தாயகத்தைப் பிரித்துச் சிதைத்து–தமிழினத்தின் தேசிய பலத்தை நசுக்கிவிடுவதே, அந்த இராணுவ மூலோபாயத்தின் அரசியல் இலக்கு ஆகும். இதை சாதிப்பதற்காக, ஐ.தே.கட்சி அரசாங்கங்கள், சிங்களப் படைப்பலத்தின் அரைப்பங்கைக் கிழக்கு மாகாணத்தில் நிறுத்தி வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

"சந்திரிகா அரசாங்கம் பதவி ஏற்றபோது (ஆவணி 94) சிங்களப்படையின் மொத்த ஆட்பலத்தில் 45 வீதத்தினர் கிழக்கில் நிறுத்தப்பட்டிருந்தனர்" என, அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில், இராணுவத் தளபதி தகவல் வெளியிட்டார். மேலும் அவர் தகவல் வெளியிடுகையில், "எல்லைப்புறங்களில் 22 வீதப்படையினர் நின்றனர்; கொழும்பில் 12 வீதப் படையினர் நிலைகொண்டிருந்தனர்; வடக்கில் 20வீதப் படையினர் மட்டுமே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்" எனக் கூறினார்.

மொத்தப் படைபலத்தில் அரைப்பங்கைக் கிழக்கில் முடக்கி வைத்திருந்த ஐ.தே.கட்சியின் இராணுவ மூலோபாயம்

நெருக்கடிக் குள்ளாக்குவதற்காக, புலிகள் இயக்கம் கிழக்கில் தாக்குதல்களை அதிகரித்துள்ளது என எடுத்துக்கூறிய ரத்வத்த, புலிகளின் எதிர் மூலோபாயத்திற்குத் தாம் பலியாகிவிடமாட்டார் எனவும் வலியுறுத்திக் கூறினார்.

தனது இராணுவ மூலோபாயம் பெருவெற்றியைப் பெற்றுவருகின்றது என்பதைக்காட்ட, ரத்வத்த அவர்கள், குடாநாட்டு ஆக்கிரமிப்பையும் கிளிநொச்சியைக் கைப்பற்றியதையும் உதாரணம் காட்ட விரும்புகின்றார்.

ஆனால், ரத்வத்தவின் மூலோபாயத்தால், கிழக்கில் அரசுப் படைகள் தமது பிடியை இழந்து வருகின்றன; சிங்களக் குடியேற்ற வாசிகளும், எல்லைப்புறச் சிங்களவர்களும் தமது வீடுகளை விட்டு வெளியேறுகின்றனர். இது சிங்கள இனத்திற்கு பாரிய இழப்பு; ஒரு அரசியல் பின்னடைவு என, சந்திரிகா–ரத்வத்த அரசாங்கத்தின் எதிரிகள் பரப்புரை செய்கின்றனர்.

ஆயினும், வடக்கை ஒருகை

தமிழ் இன அழிப்பை நோக்கமாகக் கொண்ட அரசியல் – இராணுவச் செயற்பாடுகளேயாகும்.

ஐ.தே.கட்சியின் இராணுவ மூலோபாயம், கிழக்குவாழ் தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலையை முதன்மைப்படுத்துகின்றது; ரத்வத்தவின் இராணுவ மூலோபாயம், வடக்குவாழ் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு முன்னுரிமை கொடுக்கின்றது.

இதேவேளை, இரண்டு பகுதியினதும் இராணுவ மூலோபாயங்களின் இராணுவ இலக்கு, தமிழரின் தேசியப் பலத்தைச் சிதைத்து – தமிழ் மக்களை அரசியல், இராணுவ பலமற்ற உதிரி மனிதர்களாக இந்தத் தீவில் உலவ விடுவதுதான்.

இலங்கைத் தீவை சிங்கள – பௌத்த தேசமாக மாற்றி அமைக்கவேண்டும் என்பது, சிங்களப் பேரினவாதத்தின் நீண்டநாளைய இலட்சியமாகும். அரசியல் வழிமுறைகள் மூலமும் இராணுவ அணுகுமுறைகள் வாயிலாகவும் இந்த



முல்லைத்தீவில் உயிரிழந்த ரத்வத்தவின் படையினர்

பார்த்துவிட்டால், பின்னர் கிழக்கைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரத் தனக்கு அதிக நாட்கள் எடுக்காது என்பது– தனது மூலோபாயத்தை எதிர்ப்பவர்களுக்கு–ரத்வத்த கொடுக்க விரும்பும்

இலட்சியத்தை அடைய, பேரினவாதம் முயற்சி செய்கின்றது. அரைகுறைத் தீர்வுத்திட்டமொன்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல் வழிமுறைகள் மூலமும், 'சமாதானத்திற்கான போர்' என்ற தந்திரோபாயத்தை அடிப்படையாகக் கொண்டு இராணுவச் செயற்பாடுகள் மூலமும் தமிழரின் தேசிய தனித்துவத்தை அழிக்க, தற்போதைய சிங்கள அரசாங்கம் முயல்கின்றது.

ஒரு மூலோபாயம் வெற்றி பெறாது விடும்போது, வேறு ஒரு மூலோபாயம் புதிதாகப் பயன்படுத்தப்படுகின்றது. எந்தக்கட்சி அமுல்ப் படுத்தினாலும், இரண்டு மூலோபாயங்களும் சிங்களப் பேரினவாதத்தின் திட்டங்களேயாகும்.

## தமிழரின் விடுதலைப் போராட்டமும்

எடுத்தாவது வன்னிப் பெருநிலப்பரப்பில் இராணுவ நடவடிக்கைகளைச் செய்வது என்று, ரத்வத்த சூளுரைத்துள்ளார்.

இதே வேளை, ஜே–ஆர் அரசாங்கமும் பிரேமதாசா அரசாங்கமும், ரத்வத்தவின் இந்த இராணுவ மூலோபாயத்திற்கு முற்றிலும் நேர்மாறான இராணுவ

எதையும் சாதிக்கவில்லை என, ரத்வத்த கண்டன விமர்சனம் செய்தார்.

"ஐ.தே.கட்சியின் இராணுவ மூலோபாயத்தைவிடப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் இராணுவ மூலோபாயம் சிறந்தது" என்று,

> ஒரு மூலோபாயம் வெற்றி பெறாது விடும்போது, வேறு ஒரு மூலோபாயம் புதிதாகப் பயன்படுத்தப்படுகின்றது. எந்தக்கட்சி அமுல்ப்படுத்தினாலும், இரண்டு மூலோபாயங்களும் சிங்களப் பேரினவாதத்தின் திட்டங்களேயாகும்.

மூலோபாயத்தையே, தமது ஆட்சிக் காலங்களில் செயற்படுத்தி வந்தன.

கிழக்கு மாகாணத்தைச் சிங்கள இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டிற்குள்

இராணுவத்தளபதி தளுவத்த, பத்திரிகையாளர் முன்னிலையில் சான்றிதழ் வழங்கினார்.

தங்களது இராணுவ மூலோபாயத்தை

உத்தரவாதமாகும்.

எனினும், கிழக்கையும் இழந்து–வடக்கையும் பறிகொடுக்கும் இழிநிலைக்கு, ரத்வத்த சிங்கள இனத்தை இட்டுச் செல்லப்போகின்றார் என, சந்திரிகா அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் அபாய எச்சரிக்கை செய்துள்ளனர்.

அதாவது, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகத் தனது அரசாங்கம் உருவாக்கிய இராணுவ மூலோபாயம்தான் அதிக பயன்தரக்கூடியது என ஐ.தே.கட்சியும், பொதுசன ஐக்கிய முன்னணியும் கருத்துப்போர் புரிந்து வருகின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், சிங்கள அரசாங்கங்கள் கடைப்பிடித்த – கடைப்பிடித்துவரும் இந்த இரண்டு விதமான இராணுவ மூலோபாயங்களும்,

ஆயினும், சிங்கள அரசாங்கங்கள் பயன்படுத்திவரும் ஒவ்வொரு அரசியல் மற்றும் இராணுவ மூலோபாயத்தையும் முறியடிப்பதற்கென – காலத்திற்குக் காலம் – தலைவர் பிரபாகரன் அவர்கள், எதிர் மூலோபாயங்களையும், எதிர்த் தந்திரோபாயங்களையும் உருவாக்கிப் பயன்படுத்தி, சிங்களப் பேரினவாதத்தின் நாசகாரத்திட்டங்களை முறியடிக்க முயன்று வருகிறார்!

நன்றி - "விடுதலைப்புலிகள்"

# மீன் பாடிய தேன்னாட்டின்

# இருள் சூழ்ந்த ஒரு பக்கம்

மட்டுநகரின் சிறப்புக்களில் கல்லடிப் பாலப் பகுதிகளில் கேட்கும் சிறு மீன்களின் இசையும் ஒன்று. சூரியன் அஸ்தமிக்கும் மாலை வேளைகளில் கல்லடிப் பாலப் பகுதியில் இந்த இசையைக் கேட்பதற்கு ஏராளமான மக்கள் முன்னர் கூடியதுண்டு. இன்று அந்த மீன்கள் தனது பிராந்தியத்தின் சோக நிலை கண்டு பாடாது மௌனமாகி விட்டனவோ. அல்லது யாருமே பாடல்களைக் கேட்பதில்லையோ.

ஆனால், அண்மையில் பாடும் மீன்களின் வெடியோசைதான் கேட்டது. நீண்ட காலத்தின் பின் விடுதலைப் புலிகளுக்கெதிராக இராணுவ நடவடிக்கை ஒன்றை அரசு ஆரம்பித்தது.

யுத்தம் கிழக்கிற்குப் புதியதல்ல. ஆனால், கிழக்கில் அண்மைக் காலமாக சிறு சிறு தாக்குதல்கள் மாத்திரமே நடந்துள்ளன. இன்று மட்டக்களப்பு, மூன்று வருடங்களுக்கு முன் யாழ் குடா இருந்த நிலையில் இருக்கின்றது. வடக்கு-கிழக்கில் அன்று நிலவி வந்த சாதிய முரண்பாடுகள், சமூக உயர்வு-தாழ்வுகள் போன்றவற்றை விடுதலைப் போராட்டம் இல்லாது செய்துவிட்டது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். ஆனாலும், கிழக்கில் சாதிய வேறுபாடுகள் ஓரளவிற்குத் தீர்க்கப்பட்டாலும் சமூக அமைப்பில் செல்வந்தர், ஏழைகள் என்ற வேறுபாடு இருந்து கொண்டுதான் வந்தது. விடுதலைப் போராட்டத்தில் இணைந்து போராடியவர்களில் கணிசமானவர்கள் நடுத்தர வர்க்க, ஏழைகளின் பிள்ளைகளே என்பதுவும் மறுக்க முடியாதது. இந்த வகையில் கிழக்குப் பிராந்தியம், அதில் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களே கணிசமான தொகையினர் போராட்ட வாழ்வில் தங்களது உயிர்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் இந்த இனப் பிரச்சினைக்கான யுத்தத்தில் சுமார் 10 ஆயிரம் வரையிலானவர்கள் இறந்துள்ளனர். இவர்களில் 1500 வரையிலான பெண்களும் ஏனையோர் இளைஞர்களாகவுமே இருந்துள்ளனர். இந்த யுத்தத்தின் மூலம் குடும்பத்தவர்களை அதாவது, கணவனை இழந்த குடும்பங்கள் ஏராளமாக மட்டக்களப்பு மாவட்டத்தில்தான் உள்ளன. அதிலும் பெரும்பான்மையான குடும்பங்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவைகளே. மிகவும் இளம் வயதில் திருமணம் செய்த நிலையில் பலவித காரணிகளால் கணவர்கள் உயிரிழந்தபோது, இந்தப் பெண்கள் சிறு குழந்தைகளுடன் அனாதைகள் ஆக்கப்படுகின்றனர்.

"எனது கணவரின் பெயர் ஆறுமுகம். 'வெல்டிங்' வேலை செய்து வந்தார். மூன்று குழந்தைகளுடன் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்த எமக்கு, 92ஆம் ஆண்டுதான் மிகவும் மோசமான இந்த நிலை ஏற்பட்டது. ஒரு நாள் காலை வீட்டில் எல்லோரும் இருந்த சமயம் யாரோ எனது கணவரை அழைக்கும் சத்தம் கேட்டது. எழுந்து வந்து பார்த்தபோது, கணவரை மட்டும் வெளியே வருமாறு கூறிய அந்தக் குழுவினர், எம்மை உள்ளே செல்லும்படி மிரட்டினார்கள். நாம் திரும்பிச் சில அடிகள் வைக்கவில்லை. திடீரென வெடிச் சத்தம் கேட்டது. ஓடிச் சென்று பார்த்தபோது, எனது கணவர் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். இப்போது யாருமே துணைக்கு இல்லாத நிலையில் நானும் எனது மூன்று பிள்ளைகளும் அனாதைகளாகி விட்டோம்" என்று கூறினார், கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த 29 வயதான இலட்சுமி. அவர் இளம் வயதிலேயே விதவையானதற்கு இன்று ஜனநாயகம், அரசியல் வழி என்று கூறிக்கொண்டிருக்கும் 'புளொட்' இயக்கத்தினர்தான் காரணம். இலட்சுமி தொடர்ந்து கூறுகையில், "எனது கணவர் ஒரு விவசாயி. அவரது சொந்த ஊரைச் சேர்ந்த ஒருவர் ஏற்கனவே கணவருடன் பிணக்குப்பட்டவர். அவர் 'புளொட்' இயக்கத்துடன் இணைந்து எமது கிராமத்திற்கு வந்திருந்தார். சரியான சந்தர்ப்பம் கிடைத்தபோது, எனது கணவர் விடுதலைப் புலிகளுக்கு உதவுகிறார் என்று காரணம் கூறி சுட்டுக் கொன்றுவிட்டார்.

கொக்கொட்டிச் சோலைக் கிராமத்தில் மாத்திரம் இவ்விதமான கணவனை இழந்த இளம் பெண்கள் 80 பேர் வரை வாழ்கிறார்கள்.





இன்னுமொரு பெண்ணுக்கேற்பட்ட கொடுமை அதிலும் மோசமானது. அவர் தனது கணவன், மகன், மகளின் கணவன் என எல்லோரையும் இழந்து தவிக்கிறார். அவர் பெயர் சண்முகம் சூரியகுமாரி. இவர் கூறுகையில், "1987ஆம் ஆண்டு எனது மகனை இராணுவத்தினர் சுட்டுக்கொன்று விட்டார்கள். அதன் பின்பு 3 வருடங்களில் வயலில் வேலை செய்துவிட்டு வந்து கொண்டிருந்த எனது கணவரும் வேறு நால்வரும் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர். அவரது துவிச்சக்கர வண்டியையும் அவர் அணிந்திருந்த சாரத்தின் ஒரு சிறு துண்டையும் தவிர, வேறு எதனையும் காண முடியவில்லை. அன்றிலிருந்து இரண்டு வருடங்களின் பின் எனது மகளின் கணவன், இராணுவத்துடன் வந்த ஒரு குழுவினால் கடத்திக் கொலை செய்யப்பட்டார். இன்று பேரக் குழந்தைகளுக்காகவே சிறு தேநீர்க் கடை ஒன்றை அமைத்து வாழ்ந்து வருகிறேன்" என்றார்.

வாசலுக்கு வாசல் இன்று கேட்டுக்கொண்டிருக்கும் இந்த சோக கீதம் மட்டக்களப்பில் மாத்திரமல்ல, அம்பாறையிலும் கேட்கத்தான் செய்கிறது. சம்மாந்துறைத் தொகுதியை மையமாகக் கொண்டுள்ள வீரமுனைக் கிராமம் இவ்வகையான சோகங்களால் நிரம்பி வழிகின்றது. வீரமுனைக் கிராமத்தின் தமிழ்க் குடும்பங்களின் எண்ணிக்கையே 800 தான். அவற்றுள் 101 குடும்பங்கள் தலைவர்களை இழந்து தவிக்கின்றனர். அதாவது, எட்டுக்கு ஒன்று என்ற விகிதத்தில் இங்கு குடும்பத்து இளைஞர்கள் அழிக்கப்பட்டுள்ளனர். வீரமுனைக் கிராமத்தில் வாழும் கணவனை இழந்த பெண்களில் இன்று வரை நான்கு பேர்கள் மாத்திரமே மறுமணம் செய்து கொண்டுள்ளனர்.

வாசலுக்கு வாசல் இன்று கேட்டுக்கொண்டிருக்கும் இந்த சோக கீதம், மட்டக்களப்பில் மாத்திரமல்ல அம்பாறையிலும் கேட்கத்தான் செய்கிறது. சம்மாந்துறைத் தொகுதியை மையமாகக் கொண்டுள்ள வீரமுனைக் கிராமம், இவ்வகையான சோகங்களால் நிரம்பி வழிகின்றது.

1990ஆம் ஆண்டு யூன் மாதம் இப்பகுதியில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்பு மோதலாக மாறியது. முஸ்லிம் இளைஞர்களில் சிலர் குழுக்களாகத் தமிழர்களைத் தாக்க முற்பட்ட போது, எல்லோரும் பாதுகாப்புத் தேடி நீலாவணை நோக்கி இடம் பெயர்ந்தோம். மூன்று மாதங்களின் பின் நிலைமை ஓரளவிற்குச் சீர் அடைந்தவுடன் வீரமுனை நோக்கி வந்த போது, மருதமுனையிலுள்ள விசேட அதிரடிப் படையினர் விசாரணைக்காக எனது கணவரைத் தடுத்து நிறுத்திக் கொண்டனர். அவரைக் காட்டிக் கொடுத்தது, முன்னர் என்னுடன் ஒன்றாகப் படித்த ஒரு முஸ்லீம் இளைஞன்தான். ஆரம்பத்தில் முகாமுக்குச் சென்றபோது, எனது கணவர் எனக்குக் காட்டப்படவில்லை. பின்னர் முகாமுக்கு வரவேண்டாம் என்றே கூறிவிட்டார்கள். அன்று முதல் நானும் எனது சிறிய மகளும் அவர் வருவார் என்று காத்திருக்கிறோம். எனக்கு நிச்சயமாகத் தெரியும் அவர் வரமாட்டார் என்று. இருந்தாலும், ஏதோ ஒரு நம்பிக்கைதான்." என்று அழுதபடி கூறினார் 26 வயதே ஆன பவானி.

24 வயதான கமலாவதி கூறுகையில், "எனக்குத் திருமணமான போது வயது 19 தான். திருமணமான சில வாரங்களில் ஒரு நாள், ஏராளமான முஸ்லீம் இளைஞர்கள் எமது கிராமத்தைத் தாக்க ஓடிவந்த போது, நாம் எல்லோருமாக ஊர்ப் பிள்ளையார் கோயிலில் தஞ்சம் அடைந்தோம். அவ்வேளை, இராணுவத்தினரும் முஸ்லீம் இளைஞர்களுமாக வந்து கோயிலுக்குள் இருந்த 57 ஆண்களையும் கைது செய்துகொண்டு போனார்கள். அவர்களுள் எனது கணவரும் இருந்தார். அன்று போனவர் போனவர்தான். இன்று வரை வரவேயில்லை.

இந்தக் குடும்பத்தின் தலைவர்கள் எல்லாம், சிறிலங்கா அரசினால் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டவர்களே. இந்த இளம் விதவைகளின் நிலை பற்றிக் கூறிய ஒருவர், 'இந்து சமூகத்தில் சாதாரணமாக ஒரு பெண் கணவனை இழந்துவிட்டால், அவளைச் சற்றுத் தாழ்த்தியே பார்ப்பார்கள். அவர்களை மறுமணம் செய்து கொள்ளவும் தயங்குகிறார்கள். எமது விடுதலைப் போராட்டம் பல மூடக் கொள்கைகளை மாற்றி உள்ளதுபோல், இதுவும் மாற வேண்டும்.' என்றார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நானும் ஒரு விதவை என்று கூறி, விதவைகளின் சோகத்தை அனுபவித்துள்ளேன். இனியும் விதவைகள் உருவாகக் கூடாது. அப்படியானால், யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறி, விதவைகளின் பேரால் வாக்குப் பெற்று ஆட்சி அமைத்த சந்திரிகா, கடந்த இரண்டு வருடங்களில் மேலும் பல்லாயிரம் புதிய விதவைகளை தெற்கிலும், வட-கிழக்கிலும் உருவாக்கியிருக்கிறார் என்பதுதான் உண்மை. ♦

'ராவய'வைத் தழுவி
- மாந்தன்

இனியும் விதவைகள் உருவாகக் கூடாது. அப்படியானால், யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று கூறி விதவைகளின் பேரால் வாக்குப் பெற்று ஆட்சி அமைத்த சந்திரிகா, கடந்த இரண்டு வருடங்களில் மேலும் பல்லாயிரம் புதிய விதவைகளை தெற்கிலும் வட-கிழக்கிலும் உருவாக்கி இருக்கிறார் என்பதுதான் உண்மை.

# ஆப்கானில் சிறுமைப்படுத்தப்படும் பெண்கள் தலிபான் இயக்கத்தின் புதிய கெடுபிடிகள்

தமிழீழத்திலிருந்து வெளியாகும் "*சுதந்திரப் பறவைகள்*" டிசம்பர் 96 இல் பிரசுரமான இக்கட்டுரை அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி (8-3-97) இங்கு பிரசுரிக்கின்றோம்.

ஆப்கானில் சிறுமைப்படுத்தப்படும் பெண்கள் தலிபான் இயக்கத்தின் புதிய கெடுபிடிகள் நீண்ட கால உள்நாட்டு யுத்தத்தினால் நலிந்து போன ஆப்கானிஸ்தான் மீண்டும் பெரும் அவலத்துக்குள் சிக்கித் திணறிக்கொண்டிருக்கின்றது. பெண்கள் கல்வி கற்கக் கூடாது.

- தமிழவள் - (தமிழீழம்)

வெளியில் சென்று வேலை செய்யக் கூடாது. மத பாரம்பரிய முறையிலான உடல் முழுவதையும் மறைக்கும் உடை தவிர்ந்த வேறெந்த உடைகளையும் அணியக் கூடாது போன்ற சட்டங்களை இயற்றி, பெண்களைப் பெரும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கிவிட்டு, இறுமாந்து நிற்கிறது தலிபான்!

இது இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி; பெண்கள் இரண்டாம் தரக் குடிமக்கள் என்ற மாயை நீங்கி பெண்கள், ஆண்கள் இருபாலரும் சம மதிப்பும் கௌரவமும் கொண்டு வாழ வழி தேடிக்கொண்டிருக்கும் புதிய யுகம். தனது ஆளுமையின் உச்சப் பயன்பாட்டை, உலக வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் வெளிக்காட்டி நிற்பதில் ஒவ்வொரு பெண்ணும் பெருமைப்படும் நேரம் இது. புதியதோர் சமுதாய அமைப்பைக் கட்டி வளர்க்கக் கங்கணம் கட்டி நின்று உலகம் முழுவதுமே பாடுபடும் இந்த வேளையிலும், சில இடங்களில் பெண்கள் தொடர்பான பிற்போக்குத் தனங்கள் ஒழிந்தபாடில்லை. மதத்தின் பெயராலும் பண்பாட்டின் பெயராலும் பெண்களின் ஆளுமைப் பண்பு சிதைக்கப்பட்டு, அவளது வளர்ச்சிப் போக்கு கட்டுப்படுத்தப்படுவது ஆங்காங்கே இடம்பெற்று வருவது உண்மை. எனினும், அவற்றையெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விட்டவர்கள்போல, சட்ட ரீதியாகவே பெண்களை அடிமைகளாக்க தலிபான் முனைந்து நிற்பது உலகையே ஒரு கணம் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பெண்களுக்கான கல்வியை மறுத்தல் பாரிய குற்றம் என்று ஐ. நா. சபையின் சட்டத்தை எடுத்துக் கூறி, ஐ. நா. சபை தலிபான் அமைப்பை எச்சரித்தது. அத்தோடு, அமெரிக்கா போன்ற உதவி வழங்கும் நிலையிலுள்ள நாடுகளும் ஆப்கானுக்கான பொருளாதார உதவிகள் இத்தகைய பிற்போக்குத்தனமான கொள்கைப் பிரகடனங்களால் கிடைக்காமல் போகலாம் என எச்சரித்து அறிக்கை விட்ட வண்ணம் உள்ளன.

புனித குர் - ஆன், பெண்களும் ஆண்களும் சமமானவர்கள் என்றுதான் கூறுகிறதே ஒழிய, இவர்கள் உளறுவதைப் போல எதையும் கூறவில்லை என இஸ்லாமிய மதத்தலைவர் ஒருவர் கண்டித்துள்ளதோடு, இத்தகைய செயல்களைத் தலிபான் கைவிட வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

பெண்களின் பாடசாலைகளை மூடி, வேலைத் தலங்களுக்குச் செல்பவர்களைத் தடைசெய்யும் இந்தத் தலிபானின் சட்டங்களினால் உடனடியான பெரும் பாதிப்பைச் சந்தித்திருப்பவர்கள், கணவனை இழந்து தமது உழைப்பினால் குழந்தைகளை வளர்த்துவரும் விதவைத் தாய்மார்களே. இவர்களுக்கான எந்த மாற்றுத் திட்டங்களுமே தலிபான் அமைப்பினால் முன் வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏதிலிகளாக வெளிநாடுகளில் தங்கி வாழும் ஆப்கான் பெண்கள் இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் செய்வதுடன் நிற்கின்றனர். மீண்டும் தமது மண்ணுக்குத் திரும்புவதை இவர்கள் கொலைக் களத்துக்குப் போவதற்கு ஒப்பாகவே கரு[illegible] நாட்டுக்குத் திரும்புவதை எ[illegible]வே மறுக்கின்றனர்.

இதில் வேதனைக்குரிய விடயம் என்னவெனில், ஆப்கானிலிருந்து எந்தப் பெண்களோ, பெண் அமைப்புக்களோ எதிர்ப்புக் குரல் எதுவும் தெரிவித்ததாக எந்தத் தகவலுமே இல்லை என்பதுதான். சிலவேளை அவர்களது எதிர்ப்புகள் தோன்றியிருப்பினும் அவை ஆயுத முனையில் அடக்கப்பட்டிருக்கலாம்.

நீண்டகால உள்நாட்டு யுத்தத்தினால் சீரழிந்த நாட்டைக் கட்டியெழுப்ப, பெண்களும் ஆண்களும் இணைந்து




சமமாகப் பங்களிக்க வேண்டிய நேரத்தில் இப்படியான சட்டங்கள் நாட்டுக்குப் பெரும் பாதிப்பையே உண்டு பண்ணும் என்ற எந்த எச்சரிக்கைகளையும் தலிபான் இதுவரை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்பதில் விடாப்பிடியாகவே நிற்கின்றது.

கல்வியறிவு என்பது, ஒவ்வொரு மனிதனுக்கும் அத்தியாவசியத் தேவை என்பதோடு, பெண்களுக்கு அதுவே பெரும் பலம் எனவும் உணரப்படும் இந் நாட்களில், பெண்களுக்கான கல்வி மதத்தின் பெயரால் மறுக்கப்படுவது பிற்போக்குத் தனத்திலும் பிற்போக்குத் தனமானது என்பதை, தலிபான் எப்போது புரிந்துகொள்ளும்? நாட்டின் சரி பாதியினரான பெண்கள் வீட்டுக்குள் முடங்கியிருக்கும் வரை, அந்த நாட்டின் விடுதலை சாத்தியமில்லை என்பதை எப்போது அறிந்து கொள்ளும்?

பெண்ணின் கல்விக்கும் அவளது பொருளாதார பலத்துக்கும் ஏனைய அடிப்படை உரிமைகளுக்கும் [illegible] வைத்து, தனது எதிர்கால அழிவுக்கு இப்போதே அடிக்கல்லையும் நாட்டி, வீராப்புடன் நிற்கும் தலிபான் சிலவேளைகளில் நாட்டின் புனர்நிர்மாண வேலைகளுக்காகவும் நிவாரண உதவிகளைப் பெறும் முகமாகவும் பெண்கள் மீதான இந்தக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைத் தளர்த்த முன்வரலாம். அந்தத் தளர்வானது, தமக்குத் தேவையான பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே ஒழிய, வேறெதற்காகவும் அல்ல என்பதை ஒவ்வொரு ஆப்கானியப் பெண்ணும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமது விடுதலைக்கான நீண்ட போராட்டத்துக்கு ஆப்கானியப் பெண்கள் தம்மை இப்போதே தயார் படுத்திக்கொள்ளத் தவறுவார்களாயின், பூட்டிய வீட்டுக்குள் மூடிய உடைக்குள்ளேயே அவர்கள் அழிந்து போவதைத் தவிர வேறெந்த முடிவும் ஏற்படப்போவதில்லை. ❋

---

பெண்கள் கல்வி கற்கக் கூடாது, வெளியில் சென்று வேலை செய்யக் கூடாது, மத பாரம்பரிய முறையிலான உடல் முழுவதையும் மறைக்கும் உடை தவிர்ந்த வேறெந்த [illegible]களையும் அணியக் கூடாது போன்ற சட்டங்களை இயற்றி, பெண்களைப் பெரும் துன்புறுத்தலுக்கு ஆளாக்கிவிட்டு, இறுமாந்து நிற்கிறது தலிபான்!

---

தமது விடுதலைக்கான நீண்ட போராட்டத்துக்கு ஆப்கானியப் பெண்கள் தம்மை இப்போதே தயார் படுத்திக்கொள்ளத் தவறுவார்களாயின், பூட்டிய வீட்டுக்குள் மூடிய உடைக்குள்ளேயே அவர்கள் அழிந்து போவதைத் தவிர வேறெந்த முடிவும் ஏற்படப்போவதில்லை.

---



தலைவிதி என்றும் கர்ம வினை என்றும், தனக்காக விதிக்கப்பட்ட மனுநீதி என்றும், பழமை என்றும், பண்பாட்டுக் கோலம் என்றும், காலங் காலமாக மனவுலக இருட்டுக்குள் முடங்கிக் கிடந்த பெண்ணினம் விழித்தெழ வேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# தேசிய விடுதலை இயக்கம் நடாத்தும் போர்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

## -பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

விசாரணை மீண்டும் ஆரம்பமானபோது பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் அவர்கள் அரசுதரப்புச் சட்டத்தரணி VILLAINCOURT ஆல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

கேள்வி: ஐயா, நான் உங்களைச் சரியாக விளங்கிக்கொண்டேனோ என்பதை அறிய விரும்புகிறேன். நான் எதனையும் பிழையாக விளங்கிக் கொண்டால் நீங்கள் என்னைத் திருத்திக் கொள்ளலாம்.

நீங்கள் தேசிய விடுதலை இயக்கங்கள் அரசபடைகள் தாக்கும்போது தற்பாது காப்புக்காக ஆயுதப்போராட்டத்தில் இறங்கு வதற்கு உரிமை இருக்கிறது என்று சொன்னீர்கள். இதை ஒத்துக்கொள்கிறீர்களா?

பதில்: ஐ.நா. பொதுச்சபை இதனைப் பல தீர்மானங்கள் மூலம் அங்கீகரித்துள்ளது.

மேலதிக ஒப்பந்தம் (Protocol) வாயிலாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அங்கீகாரம் தற்பாதுகாப்புப் பற்றிய கருத்தோடு ஒத்தது.

## இரண்டு நாடுகளுக்கிடையிலான போர் என்றே கணிக்கப்படும்

கேள்வி: தற்பாதுகாப்பு ஆயுதபலம் உபயோகிப்பது பற்றி என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் அல்லது எனது நண்பர் "தற்காப்பு ஆயுதபலம்" என்ற வார்த்தையை ஒரு கட்டத்தில் பாவித்தார்கள்.

ஒரு அரசு சச்சரவுப்பிரதேசத்தை ஆக்கிரமிப்பது பற்றி ஒரு எடுத்துக்காட்டு சொல்லப்பட்டதாக எண்ணுகிறேன். இந்த சூழ்நிலையில் தேசிய விடுதலை இயக்கம் ஆயுதபலத்தை உபயோகித்து குறிப்பிட்ட சச்சரவுப் பிரதேசத்தில் இருந்து மற்றப்பக்கத்தை பின்தள்ள முடியும்.

பதில்: இந்த ஆயுதபலம் மக்களதும் மண்ணினதும் மற்றும் தனது தற்பாதுகாப்புக்கானது.

நீதிபதி: மன்னிக்கவும், தனது மக்களதும், தற்பாதுகாப்பு?

சாட்சி: தனது மக்களது, மண்ணினது தற்பாதுகாப்பு

நீதிபதி: மற்றும் அது என்ன?

சாட்சி: மண்(நிலம்)

நீதிபதி: மண், மன்னிக்கவும்.

சாட்சி: இரண்டு அரசுகளுக்கிடையிலான போரின் போதும், உதாரணத்துக்கு— இந்த விடயத்தை நாம் தொடவில்லைப் போலும், ஆனால் போர் தொடர்பான ஜெனிவா மரபுகள் ஒப்பந்தங்கள் எங்கு பலாத்காரம் உபயோகிக்கப்படுகிறதோ அங்கு அமுல் படுத்தப்படுகிறது.

இது யார் தாக்குதலில் ஈடுபட்டிருக்கிறார்கள், யார் தற்பாதுகாப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள் அல்லது யார் சரி, யார் பிழை என்பதைப் பொறுத்ததல்ல. ஆனால் ஒரு மோதலின்போது பலகாலும் இராணுவங்கள் மற்றய நாட்டுக்குள் தாக்குதல் நோக்கங்களுக்காகவே உட்போகிறது.

உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா குவைத்துக்குள் உள்நுழைந்தபோது நாமும் ஈராக்குக்குள் உள்நுழைந்தோம்.

அப்படி நடந்துகொண்டது சட்டத்துக்கு முரணானது என்றாகிவிடவில்லை.

கேள்வியென்னவென்றால் அந்த நடவடிக்கை, அமெரிக்காவின் நடவடிக்கை, முறையா என்பதுதான் அமெரிக்காவின் [illegible] நடவடிக்கை ஐ.நா.சாசனத்தின் பகுதி 51 இன் கீழும், தற்பாதுகாப்புக்காகவுமாக எடுக்கப் பட்டது.

ஆனபடியால் ஒரு மோதல் வெடித்தவுடன் இரு பக்கத்துச் சண்டைக்காரர்களும் சில சமயம் தற்பாதுகாப்பாகவும், சிலசமயம் தாக்குதலிலும் ஈடுபடுகிறார்கள். கேள்வி என்னவென்றால் ஒரு உள்நாட்டு ஆயுதப்போராட்டம் தொடங்கிவிட்டதா? அப்படியென்றால் எப்போது?

திரு: Villaincourt

கேள்வி: ஆனால் நாங்கள் இரண்டு அரசுகளுக்கிடையில் அல்லாமல், நீங்கள் விபரிக்கின்ற தேசிய விடுதலை இயக்கத்திற்கு ஒரு அரசுக்கும் இடையிலான சண்டையைப் பற்றிப் பேசுவோம்.

தன்னை, மக்களை, மற்றும் நிலத்தைப் பாதுகாப்பதென்பது—

பூகோள ரீதியாக, சச்சரவுக்கான நிலத்தை மட்டும் உள்ளடக்கும்.

பதில்: இல்லை. அப்படியிருக்கத் தேவையில்லை.

கேள்வி: மெத்தச்சரி.

பதில்: முறையான இராணுவ இலக்குகள், அவை எங்கு இருந்தாலும், அவற்றைத் தாக்க உங்களுக்கு உரிமை இருக்கிறது. உங்களுக்குத் தெரிந்திருக்கும், பல போராட்டங்களில் உதாரணமாக அமெரிக்க அரசு குவைத்தை விடுவிப்பதற்காக ஈராக் நாட்டின் இராணுவ இலக்குகள் மீது குண்டு போட்டது. இது முறையா இல்லையா என்பது, இது குவைத்தின் முறையான தற்பாதுகாப்புக்கு அவசியமா இல்லையா என்பதைப் பொறுத்தது.

நீதிபதி: ஐயா, உங்களை மீண்டும்... நியாயவாதி அரசுகளுக்கிடையிலான மோதல் பற்றிப் பேசவில்லை. நீங்கள் வரைவிலக்கணம் செய்தவாறு ஒரு தேசிய விடுதலை இயக்கத்திற்கும் அரசுக்கும் இடையிலான மோதலைப் பற்றிக் கேட்கிறார்.

சாட்சி: ஆம், கனம் நீதிபதி அவர்களே—

நீதிபதி இரண்டும் ஒன்றென்றால், நீங்கள் இரண்டும் ஒன்றுதான் என்று சொல்லலாம்.

சாட்சி: நான் நினைக்கிறேன் இதனை நான் சரியாகத் துலக்கவில்லை என்று. இரண்டுக்கும் விதிகள் ஒரேமாதிரியானதுதான். அதாவது விதி 1, பந்தி 4— நீங்கள் விதி 1, பந்தி 3 ஐ வாசித்தால், அது பின்வருமாறு சொல்கிறது.

"ஜெனிவா மரபுகளை நிறைவு படுத்தும் (Supplement) இந்த மேலதிக ஒப்பந்தம் இந்த மரபுகளுக்குப் பொதுவான, விதி 2 இல் குறிப்பிடப்படும் நிலைமைகளுக்கு உபயோகப்படுத்தப்படும்...." இதன் அர்த்தம் சர்வதேச ஆயுத மோதலாகும்.

ஆனபடியால் இங்கே என்ன சொல்லப் படுகிறது என்றால் இதன் பின்பு ஒரு தேசிய விடுதலை இயக்கம் நடாத்தும் போர் இரண்டு நாடுகளுக்கிடையிலான ஒரு சர்வதேச போரைப் போன்றே ஒரு சர்வதேச ஆயுதப் போராட்டம் போன்றே கணிக்கப்படும். இரண்டுக்கும் ஒரேவிதமான விதிகள் தான் ஒப்பந்தம் ஒன்றை நிறைவு செய்யும் விதிகளே புறநடையாகும்.

எனவே அவர்கள் ஒப்பந்தம் 1ம் சேர்ந்து நான்கு ஜெனிவா மரபுகளையும் முற்றாக அமுல் செய்கிறார்கள்.

திரு. Villaincourt

கேள்வி: சரி நடைமுறை பற்றிப் பேசுவோம்— 'அ' என்னும் தேசியவிடுதலை இயக்கம், 'இ' என்னும் அரசோடு ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ளது. 'இ' அரசு கனடாவோடு இராசதந்திர உறவு வைத்திருக்கிறது. தேசிய விடுதலை இயக்க உறுப்பினர்கள் கனடாவுக்கு வந்து 'இ' அரசின் தூதுவராலயத்துக்கு குண்டு வீசுகிறார்கள். உமது சாட்சியத்தை நான் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறேன் என்றால் அது சரியெனக் கொள்ளப்படும். காரணம் அச்செயல் அந்தத் தூதுவராலயம் ஒரு முறையான இராணுவ இலக்கு எனக்கொள்வோமேயானால் அதனை சர்வதேச ஆயுத மோதலின் ஒரு அங்கமாகக் கணிக்கப்படும். அது போர்க் குற்றமாகவும் அமையலாம்.

பதில்: கனடாவில் உள்ள ஒரு தூதுவராலயம் முறையான இராணுவ இலக்கு என்று நிச்சயமாக நான் சொல்லமாட்டேன். நிச்சயமாக இல்லை.

கேள்வி: மெத்தச்சரி. அது நியாயம்தான்.

பதில்: நான் முன்பே குறிப்பிட்டது போல, நியூயோர்க் மரபு இராஜதந்திரிகளுக்கும் தூதுவராலயங்களுக்கும் பாதுகாப்பளிக்கிறது.

நீதிபதி: ஆகவே ஒரு இராஜதந்திரி முறையான இராணுவ இலக்கு அல்ல?

சாட்சி: அவர் போர்முனைப் பகுதியில் இருந்துகொண்டு செயற்பட்டால் அங்கிருந்துகொண்டு போர் முயற்சிக்கு உதவினால், போர் முயற்சியில் அவர் ஈடுபட்டால், அது வேறு கதை.

நீதிபதி: போர்க்களத்துக்கு வெளியில், போர் நடைபெறும் இடத்துக்கு வெளியில்.... உண்மையான சண்டை நடைபெறும் இடத்தில்.... அந்த நிலையில் இராஜதந்திரி முறையான இராணுவ இலக்கு— அல்லது நீர் இப்போது மனதை மாற்றிக் கொள்கிறீரா?

சாட்சி: இல்லை. நான் சொல்கிறேன். ஒரு இராஜதந்திரி வேறு ஒரு நாட்டில் இருக்கிறார். அவர் கனடாவை எனக்கு உதாரணம் காட்டினார்.

எனவே இங்கு ஒரு தமிழ் புலி வந்து



பேராசிரியர் பிரான்சிஸ் பொயில்

சிறிலங்காவின் தூதுவராலயத்துக்கு குண்டு வைக்கிறார்.

இது கனேடிய சட்டத்தை மீறியதாகும், நியூயோர்க் மரபையும் மீறியதாகும். இந்த மரபுக்கு நான் நம்புகிறேன் கனடாவும் ஒரு கட்சியாகும்.

திரு. Villaincourt

கேள்வி: ஆனால் அது ஜெனிவா மரபின் ஒப்பந்தம் 1 இன் பிரகாரம் நியாயப் படுத்தப்படும்.

பதில்: இல்லை. எனது எண்ணப்படி இல்லை.

கேள்வி: அது பற்றிப் பின்னர் ஆராய்வோம். ஆனால் சிலருக்கு, எந்த வரைவிலக்கணம் உபயோகிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து, பயங்கரவாதச் செயலாகக் கருதப்படலாம்? எனக்குத் தெரியும் உமக்கு அந்தவார்த்தை பிடிக்காது என்பது எனக்குத் தெரியும்... அதைப் பற்றிப் பேசுவோம். ஆனால் சிலருக்கு அது பயங்கரவாதச் செயலாகப் படலாம்... அமெரிக்காவுக்கு...

பதில்: அல்லது கனடா விரும்பும் பட்சத்தில் ஒப்பந்தத்தின் கீழ் அந்தத் தமிழ்ப்புலி மீது போர்க்குற்றத்துக்கு வழக்குத் தொடரலாம். அப்படிச் செய்வதா இல்லையா என்பது கனடாவின் விருப்பத்தைப் பொறுத்தது.

கேள்வி: நீர் சொன்னீர் அது முறையான இராணுவ இலக்கு அல்லவென்று.

பதில்: அது சரி.

கேள்வி: ஐயா, அப்படியென்றால் அது போர்க்குற்றமாகக் கருதப்படமாட்டாது?

பதில்: இல்லை. முறையற்ற இலக்குத் தாக்கப்பட்டால், நீங்கள் போர்க்குற்றம் இழைக்கிறீர்கள். ஆம் ஆனபடியால் கனடா விரும்பினால் அந்த நபரை மூன்றில் ஒரு குற்றம், அல்லது எல்லாவற்றிற்கும் அவர்மீது வழக்குத் தொடரலாம். தூதுவராலயத்தைத் தாக்கியதற்கு, ஒப்பந்தம் 1ஐ மீறியதற்கு அல்லது நியூயோர்க் மரபை மீறியதற்கு. இதில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது கனடாவின் விருப்பத்தைப் பொறுத்தது. ✷

தொடரும்....

# சிறுபடையான் செல்லிடம் சேரின்

# உறுபடையான் ஊக்கம் அழிந்துவிடும்

- நக்கீரன் -

> **தக்க இடத்தில் (தமிழீழத்தில்) உள்ள சிறுபடையை (விடுதலைப்புலிகளை) உடைய அரசனை (பிரபாகரனை) அணுகினால் பெரும் படையையுடைய மன்னன் (சந்திரிகா) அவன் இருக்கும் இடம் சென்றால் அழிந்து விடுவான்.**

"சிங்கள மோடய, கவுண் காவ யோதய" என்பது ஒரு சிங்களப் பழமொழி.

"சிங்களவர் மூடர்கள், பணியாரம் தின்பதில் விண்ணர்கள்" என்பது இதன் அர்த்தமாகும்.

கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த கட்டுரையில் இந்தப் பழமொழி கையாளப் பட்டிருந்தது.

எனக்கு இந்தப் பழமொழி சம்மதமில்லை. கடந்த அறுபது ஆண்டுகால வரலாற்றை ஊன்றிப் படிப்பவர்களுக்கு, சிங்களவர்கள் மூடர்கள் என்ற முடிவுக்கு வருவது கஷ்டமாக இருக்கும்.

சேர். பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன்னம்பலம் அருணாசலம் தொடங்கி அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வரை சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் அரசியல்வாதிகளை ஏமாற்றியிருக்கிறார்கள்.

காலம் காலமாக காற்றில் பறக்க விடப்பட்ட உறுதிமொழிகள் கிழித்தெறியப் பட்ட ஒப்பந்தங்கள் இதற்குச் சான்று பகரும்.

1918ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் எழுத்தில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ்ப்பாண மகாசபைக்கும், சிங்களவர் களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தேசியசபை (Ceylon National Association), இலங்கை சீர்திருத்த முன்னணி (Ceylon Reform League) இவற்றுக்கிடையேதான் இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டது.

இலங்கை தேசியசபை சார்பாக அதன் தலைவர் பீரிஸ் என்பவரும், இலங்கை சீர்திருத்த முன்னணி சார்பில் அதன் தலைவர் சமரவிக்கிரமாவும் கையெழுத் திட்டார்கள்.

மேற்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு ஒரு விசேட தேர்தல் ஆசனம் (Special seat) ஒதுக்க வேண்டும் என்ற யாழ்ப்பாண மகாசபையின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளும் இரண்டு சிங்கள அமைப்புக்கள் குறிப்பாக இலங்கை தேசிய காங்கிரஸின் தலைவரும், சலாகம (Sala gama) வகுப்பைச் சேர்ந்தவருமான பிரான்சிஸ் டி சொய்சா எதிர்ப்புத் தெரிவித்தார். உயர்சாதிச் சிங்களவர்களும் தமிழர்களும் கரையோரச் சிங்களவர்களின் செலவில் தங்களுக்குள் 'அப்பத்தை' விகிதாசார அடிப்படையில் பிரித்துக் கொண்டார்கள் என்று டி. சொய்சா ஒப்பந்தத்தைக் கண்டித்தார்.

இதனால், "சிங்களவர்-தமிழர்" ஒப்பந்தம் கைகழுவப்பட்டது.

1944இல் சிங்களமும்-தமிழும் அரசகருமமொழிகள் எனப் பிரகடனப்படுத்த தீர்மானம் சட்டசபையில் நிறைவேறியது.

இந்தத் தீர்மானத்தை சட்டசபையில் முன்மொழிந்த S.W. R. D பண்டாரநாயக்கா, 1956இல் தனிச் சிங்களச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றினார்.

1945ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு அடங்கிய வெள்ளை அறிக்கை சட்டசபையில் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து டி. எஸ். சேனநாயக்கா பின்வரும் உறுதி மொழியைச் சிறுபான்மை இனத்தவர் களுக்கு அளித்தார்.

"Do you want to be governed from london or do you want as Ceylonese to help govern Ceylon?... On behalf of the Congress (Ceylon national Congress) and on my own behalf I give the minority Communities the sincere assurance that no harm need you fear at our hand in a free Lanka."

"நீங்கள் இலண்டனிலிருந்து ஆளப் படுவதை விரும்புகிறீர்களா? அல்லது இலங்கையர் என்ற வகையில் இலங்கையை ஆள விரும்பு கிறீர்களா?........ காங்கிரஸ் (இலங்கை தேசிய காங்கிரஸ்) சார்பாகவும் என் சார்பாகவும் சிறுபான்மை இனத்த வருக்கு மனப்பூர்வமான உறுதி மொழியை அளிக்க விரும்புகிறேன். ஒரு சுதந்திர சிறிலங்காவில் எங்களால் உங்களுக்கு எந்தவித தீங்கும் ஏற்படும் என்ற பயம் இருக்கத் தேவையில்லை."

டி. எஸ். சேனநாயக்காவின் இந்த மனப்பூர்வமான உறுதிமொழி 1948இல், இலங்கை சுதந்திரம் பெற்ற அதே ஆண்டு காற்றில் கரைந்தது.

பத்து இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமை இரவோடு இரவாகக் களவாடப்பட்டது.

1949இல் அவர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டு அரசியல் அநாதைகளாக ஆக்கப்பட்டார்கள்.

இதே டி. எஸ். சேனநாயக்காதான் கிழக்கிலும்-வடக்கிலும் பாரிய சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத் தவர்.

பட்டிப்பளை (கல்ஓயா), அல்லை, கந்தளாய் குடியேற்றங்கள் மூலம் இலட்சக்கணக்கான சிங்களவர்கள், தமிழர்களின் சொந்த மண்ணில் குடி யேற்றப்பட்டார்கள்.

சேனநாயக்காவிற்குப் பின் ஆட்சிக் கட்டில் ஏறிய சிங்கள இனவாத அரசியல்வாதிகள் பதவியா, முதலிக்குளம் (Morawewa), மதுருஓயா, மணலாறு (வெலிஓயா) போன்ற சிங்களக் குடியேற்றங்களை முடுக்கிவிட்டார்கள்.

இந்தக் குடியேற்றத்தின் விளைவாக, திருமலை மாவட்டத்தில் அரைவாசி நிலப்பரப்பு சிங்களவர்களுக்குச் சொந்த மாகிவிட்டது. மட்டக்களப்பு மாவட் டத்தில் புதிதாக தனிச் சிங்கள மாவட்டமும் (அம்பாறை) 1963இல் உருவாக்கப்பட்டது.

இந்தச் சிங்களக் குடியேற்றங்களின் அறுவடையே அம்பாறை, சேருவலை தேர்தல் தொகுதிகள் ஆகும்.

1958இல் கிழித்தெறியப்பட்ட பண்டார நாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம், 1965இல் எழுதி, 1968இல் கைவிடப்பட்ட



டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம், சிங்கள அரசியல்வாதிகள் எப்படியெல்லாம் தமிழர்களை வஞ்சித் தார்கள், ஏமாற்றினார்கள், பேய்க்காட்டி னார்கள் என்பதற்கான சாட்சியங்களாகும்.

1987இல் எழுதப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசியல் இராஜதந் திரத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

அந்த ஒப்பந்தத்தில் காணப்படும் வாசகங்கள் ஒவ்வொன்றிலும் ஜெயவர்த் தனாவின் அரசியல் சாணக்கியம் பளிச்சிடுகிறது.

வடக்கும் - கிழக்கும் தமிழர்களின் பரம்பரை பூமி என்பது ஒப்புக் கொள்ளப்படவில்லை. வதிவிடம் (habitat) என்று மட்டுமே குறிக்கப்பட்டது.

வட - கிழக்கு தற்காலிகமாகவே இணைக்கப்பட்டது. ஒப்பந்தம் எழுதப்பட்ட மை காயுமுன், அந்தத் தற்காலிக இணைப்பை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யப்போவதாக ஜெயவர் த்தனா அறிவித்தார்.

சிங்களமே ஆட்சிமொழி. ஆனால், தமிழும் ஆங்கிலமும் ஆட்சிமொழிகளாக இருக்கும் என்றே எழுதப்பட்டது.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆட்சி மொழிகள் என அறிவிக்கப்படவில்லை.

இந்த ஒப்பந்தம் மூலம், மாகாண ஆட்சியோ, சுயாட்சியோ கோராத சிங்களவர்களுக்கு எட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

இன்னும் சொல்லப்போனால், தமிழ் மக்களுக்கு எதிரான போரில் தமிழினத் துக்குள் முளைத்த எட்டப் பர்களையும் காக்கைவன்னியர்களையும் சிங்கள அரசியல்வாதிகள் கச்சிதமாகப் பயன் படுத்தினார்கள்.

மலையகத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சட்டத்திற்கு ஆதரவாக அப்போது, அமைச்சர் பதவியை சேனநாயக்காவிடம் யாசித்துப் பெற்றுவிட்ட திருவாளர் ஜி. ஜி. பொன்னம்பலம் ஆதரவாக வாக்களித்தார்.

1972இல் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்புக்குத் தமிழர்களான அருளம்பலம், தியாகராசா, குமாரசூரியர், சுப்பிரமணியம் போன்றோர் ஆதரவாக வாக்களித்தார்கள்.

இன்றும் பணத்துக்காகவும் பதவிக் காகவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தர்மலிங்கம் சித்தார் த்தன், டக்லஸ் தேவானந்தா போன்றோர் எதிரியுடன் சேர்ந்து காட்டிக் கொடுக்கிறார்கள்.

எனவே, "சிங்களவர்கள் மூடர்கள், பணியாரம் சாப்பிடுவதில் மட்டும் விண்ணர்கள்" என்பதை சிங்கள அரசியல்வாதிகள் இதுவரை காலமும் பொய்ப்பித்து வந்திருக்கிறார்கள். அரசியலில் தமிழர்களை ஒடுக்கு வதிலும் ஓரங்கட்டுவதிலும் ஒழித்துக் கட்டுவதிலும் வெற்றி பெற்று இருக்கிறார்கள்.

ஆனால், சிங்கள அரசியல்வாதிகள் போட்ட கணக்குகள், வகுத்த வியூகங்கள், தீட்டிய திட்டங்கள் ஒரேயொரு தமிழ் தலைவனிடம் மாத்திரம் செல்லுபடியாகாது போய் விட்டன. அவர்களது அரசியல் சாணக்கியம் மாத்திரமல்ல, இராணுவ அணிவகுப்புக்களும் அந்தத் தமிழ் தலைவனிடம் தோல்வி கண்டுவிட்டன.

அந்தத் தமிழ் தலைவன் பிரபாகரன் என்ற மாமனிதன், புறநானூற்று கரிகால் பெருவளத்தான் முதற்கொண்டு நவசீனத் தின் சிற்பி மாவோ வரை ஒப்பிட்டுப் பேசப்படும் மாவீரன்.

பிரபாகரன் என்ற ஒரு மாவீரன், தமிழினத்தில் தோன்றுவான் என்று சிங்களவன் மட்டுமல்ல, எவருமே கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

**அடித்தால் திரும்பிப்பார்க்காமல் அடியை வாங்கிக்கொண்டு பின் னங்கால் பிடரியில் பட ஓடிய தமிழர்கள் மத்தியில், அடித்தால் திரும்பிக் கன்னத்தில் அறையும் ஒரு பிரபாகரன் தமிழினத்தின் மாவோவாக ஓங்கி நிற்பாரென எந்தச் சிங்களவனும் பகற்கனவு கூடக் கண்டது கிடையாது. ஆன காரணத்தால்தான், பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் வெற்றி கொள்ள சிங்கள அரசியல் இராணுவ வெறியர்கள் தீட்டும் திட்டங்கள், பின்னும் வலைகள், தோண்டும் பொறிக் கிடங்குகள், போடும் கணக்குகள் பிழைத்து விடுகின்றன.**

கடந்த பதினான்கு ஆண்டுகளாக பிரபாகரனையும் அவர் உருவாக்கிய வீரவேங்கைகளையும் ஒழித்துக்கட்ட சிங்கள ஆட்சியாளர்கள் எடுத்த அத்தனை முயற்சிகளும் அழிக்கப் பட்டுள்ளன. அடிக்குப் பதிலடி கொடுத்து பாடம் படிப்பிக்கப்பட்டு வருகிறது.

**பரந்தன், ஆனையிறவு சிங்கள இராணுவத் தளங்கள் மீதான விடுதலைப் புலிகளின் துணிகரத் தாக்குதல்கள், அந்தத் தாக்கு தல்களில் எதிரிக்கு விளைவிக் கப்பட்ட ஆள், ஆயுத இழப்புக்கள், "பிரபாகரன் வெல்ல முடியாத போர்ப்படையின் புகழ்வாய்ந்த தளபதி" என்பதை உலகத்துக்கு நிரூபித்துக் காட்டியுள்ளது.**

தொடர்ச்சி 19ம் பக்கம்...

# 'சத்ஜய' படையெடுப்பும் புலிகளின் எதிர்ச் சமரும்

வன்னிப் படையெடுப்பிற்கான பிரதான போருதராங்கத்தை சிங்களம் ஆனையிறவுத் தளத்திலிருந்து திறந்துவிட்டது.

சத்ஜய நடவடிக்கை அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் முல்லைத்தீவில் புலிகள் பெற்ற எண்ணுதற்கரிய வெற்றியையும், தம்மீது சுமத்தப்பட்டு விட்ட அவமானகரமான தோல்வியையும் சடுகட்டிச் சமப்படுத்துவதாகவே இருந்தபோதும் இப்போது புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் இறுதி அத்தியாயம் என்ற வடிவத்தை சிங்களத்தலைமை அதற்குக் கொடுத்துவிட்டது.

70 நாட்களாக மூன்று கட்டங்களில் நகர்த்தப்பட்ட, சத்ஜய படையெடுப்பு, 12 கிலோமீற்றர்கள் முன்னேறி கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதுடன் அடுத்த நகர்விற்கான தயார்ப்படுத்தலுக்காக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

சத்ஜய நடவடிக்கைத் தொடரின் முதலாம் கட்டம் ஆடி 26ம் திகதி ஆரம்பித்தது.

உப்பளப் பகுதியிலிருந்த ஆனையிறவுத் தளத்தின் தென்புற முன்னரங்க நிலைகளிலிருந்து, பரந்தனை நோக்கிய முன்னேற்றத்தை சிங்களத் துருப்புக்கள், இருள் கலையும் அதிகாலையில் ஆரம்பித்தனர்.

பிரதான வீதிக்கும் புகையிரதப்பாதைக்கும் அருகே நகர்ந்து, புலிகளின் தொடர் காப்பரண் பகுதியை உடைத்து முன்னேறும் எதிரியின் ஆரம்ப முயற்சி கைகூடாமல் போன அதேபொழுதில்

மாற்று வழியாக, பிரதான வீதிக்குக் கிழக்கே 2 கிலோ மீற்றர் தூரத்தில் தட்டுவன்கொட்டிப் பகுதியூடாக முன்னேற எடுத்த முயற்சி அவனுக்கு சாத்தியமானதாகியது.

பெருமெடுப்பில் நகரும் படையினரை மிகச்சில படைப்பிரிவுகள் கொண்டு வழிமறித்து மோதுவது சாத்தியமற்றது என்பதாலும், சாதகமற்ற அந்தக்களத்தில் கடும் எதிர்த்தாக்குதலில் இறங்குவது பெரும் அழிவுக்கே வழிவகுக்கும் என்பதாலும்

மட்டுப்படுத்தப்பட்ட வகையான ஒரு சண்டையை நடாத்திய வண்ணம், தந்திரோபாயப் பின்வாங்கலொன்றை புலிகள் செய்யவேண்டியிருந்தது.

தனக்கெதிராகச் தீவிரம் குறைந்த மோதலையே புலிகள் நடாத்தியதன் காரணமாகச் சுலபமாக முன்னேறிய எதிரியால் அன்றைய பகற்பொழுது முடிவதற்குள்ளாகவே

6 கிலோமீற்றர் தூரம் நகர்ந்து பரந்தன் சந்தியைக் கைப்பற்றவும், அதுவரையான இடைத்தூரத்தில் பிரதான வீதிக்கு மேற்கே 1 கிலோமீற்றருக்கும், கிழக்கே 2 கிலோ மீற்றருக்கும் அகன்று நிலைகொள்ளவும் முடிந்தது.

அன்றய சண்டையில் தனது 16 துருப்புக்கள் கொல்லப்பட்டதாக சிறிலங்கா அரச தெரிவித்தது. எமது 16 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

தொடர்ந்து எட்டு நாட்களாக புதிதாகக் கைப்பற்றிய பிரதேசத்தில் காப்பு நிலைகளைப் பலப்படுத்தியதுடன், தன்சண்டையணிகளை மீளொழுங்கு செய்து தயார்ப்படுத்திக்கொண்ட எதிரியுடன் நடந்த மோதல்களில் மேலும் 5 போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஒன்பதாம் நாள்

ஆவணி 4ம் திகதி, 'சத்ஜய' வின் 2ம் கட்டத்தை எதிரி ஆரம்பித்தான்.

பரந்தனைச் சிரமமின்றிக் கைப்பற்ற முடிந்ததனால், முல்லைத்தீவில் புலிகளின் ஆட்தொகை வெகுவாகப் பலவீனப்பட்டு விட்டதாகக் கருதிவிடுத்த சிங்களத் தலைமை, புலிகளின் [illegible] தவறான கணிப்பீட்டினை [illegible] சத்ஜய வின் 2ம் கட்டத்தின் மீது பெரு நம்பிக்கை வைத்து, கிளிநொச்சி நோக்கிய இறுதி நகர்வு எனப் பிரச்சாரம் செய்தது.

சிங்களத்தின் புகழ்பூத்த போரணியான, 'சிறப்புப்படை'க் 'கொமாண்டோ'க்கள் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவின் வழிநடாத்தலின் கீழ் களத்தைத் திறந்தனர்.

பரந்தனிலிருந்து நகரத்தொடங்கிய துருப்புக்கள், ஒரு கிலோமீற்றருக்கும் மிகக் குறைவான தூரத்திற்குள் பிறைவடிவில் தம்மை வளைத்து நட்ப வியூகமிட்டுக் காத்திருந்த புலிகளைச் சந்தித்தபோது வெடித்தசமர் அசாதாரணமானது.

எதிரி பலமுனைகளூடு முன்னேற முயன்றான். புலிகளின் அரண்களை உடைத்தெறிய தன்னால் இயலுமான வரைக்கும் எத்தனித்தான். ஒவ்வொரு முனையும் முறியடிக்கப்படும்போது இன்னொரு முனையைத் திறந்து முயன்றான். விடிந்ததிலிருந்து இருளும் வரை பகற்பொழுது முழுவதுமே பரந்தன் பகுதி பெரியதொரு போர்க்களமாக மாறியிருந்தது.

பிரதான வீதிக்குக் கிழக்குப்பக்கமாக முன்னேறியவர்களைப் புலிகள் இரு முனைகளில் மறித்தனர். ஒருமுனையில் இரு 'ராங்'குகள் தாக்கியெரிக்கப்பட, மேலும் ஒன்று சேதமாக்கப்பட்டது. மறுமுனையில் ஒரு 'ராங்' தாக்கியழிக்கப்பட மேலும் இரண்டு சேதப்படுத்தப்பட்டன. இதே சமயத்தில் பிரதான வீதிக்கு மேற்குப்பக்கமாக முன்னேறியவர்களைப் பூநகரி வீதிக்கு வலது புறமும், இடதுபுறமும் இரு முனைகளில் எதிர் கொண்டு தடுத்தனர்.

முதல் நாள் சண்டைகளில் மட்டும் 75 படையினர் கொல்லப்பட்டதையும், தொடர்ந்து மூன்று நாட்களாகக் கடும்முயற்சி எடுத்த எதிரியை முறியடித்த சண்டைகளில் மேலும் 75 வரையான படையினர் கொல்லப்பட்டதையும் களச் செய்திகள் ஊர்ஜிதப்படுத்தின. இந்தச் சண்டைகளில் எமது 89 போராளிகள் வீரச்சாவடைந்தனர். அதைத் தொடர்ந்த நாட்களில் 'சத்ஜய'வின் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கும் வரை எதிரியின் முன்னரங்கப் பகுதிகளில் நடந்த மோதல்களில் மேலும் 11 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

'சத்ஜய'வின் இரண்டாம் கட்டத்தை முனையிலேயே முறியடித்த புலிகளின் சமர், பகைத் தளபதிகளைத் திகைப்பில் ஆழ்த்தியது. யாழ்ப்பாணச் சமரிலேயே இல்லாத விதமாக வான்படையையும் களத்தில் இறக்கியதோடு, 'றிவிரச' வில் பிரயோகித்ததைவிடவும் மிகக்கூடுதலான

**தி. இனியவன் – (தமிழீழம்)**

வளங்களை ஒருங்கு திரட்டிய போதும் ஏன் தம்மால் முடியாமல் போனது என்பதே அவர்கட்கு ஆச்சரியம். புலிகளின் பெரும் படைக்கலப் பிரயோகம் நமக்கு அதிக சேதத்தைத் தந்ததனால், அவர்களை விட அதிகமான படைக்கல சக்தியைத் தாம் பிரயோகித்தபோது புலிகளுக்கும் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்க வேண்டும். அத்தோடு, முல்லைச்சமரில் ஏற்கனவே புலிகளின் ஆட்பலம் பெருமளவில் பலவீனப் பட்டிருக்கக் கூடிய சாத்தியப்பாடும் இருக்கையில் எப்படிப் புலிகளால் எதிர்த்து நிற்க முடிந்தது. 'றிவிரச' வை விடவும் உக்கிரமான தாக்குதலை நிகழ்த்தியபோதும் ஏன் துருப்புக்களால் வெல்ல முடியவில்லை?

இந்தக் கேள்விகளுக்கு விடை தேட முனைந்த சிங்களப் படைத்துறைத் தலைமை, முல்லைத் தளத்திலிருந்தும் வேறுபாதிகளிலும் புலிகள் பெற்றிருக்கும் ஆயுதக்கருவிகள் காரணமாக கிளிநொச்சிப் படையெடுப்பிற்கான தன் போர்முறைத்திட்டத்தில் முழுமையான மாற்றம் செய்யவேண்டியதை மட்டுமல்ல

தமிழீழப்போரில் தனக்கு ஒரேயொரு வாய்ப்பாக இருந்த மரபுவழிச் சமர் முறையும் சிக்கலுக்குரியதாக மாறுவதையும் உணர்ந்தது.

இரண்டாம் கட்டத்தில் சறுக்கிய சத்ஜயவை மூன்றாம் கட்டத்திலாவது நிமிர்த்த சிங்களத் தளபதிகள் ஒன்றரை மாதமாகச் சிந்தித்தனர். பரந்தன் சண்டைகளில் பெற்ற பாடங்களிலிருந்து, அடுத்த நடவடிக்கையில் புதிய வழிமுறைகளைக் கையாளுவது பற்றி ஆலோசித்தனர்.

பரந்தன் பகுதி முன்னரங்க நிலைகளுக்கு அப்பால் கிளிநொச்சி வரையான நேர்ப்பாதையை மையப்படுத்தி அடுக்கடுக்கான போர் வியூகங்களை இட்டிருக்கும் புலிகளின் மரணப்பொறிகளுக்குள் சிக்கிவிடாமல் கிளிநொச்சியை அடையும் மார்க்கத்தை எதிரி தேடவேண்டியிருந்தது.

'சத்ஜய' வின் இரண்டாம் கட்டம் அந்த வியூகங்களுக்குள் சிக்கியே சின்னாபின்னமானது. முழு வளங்களையும் ஒருங்கு திரட்டி நாட்கணக்கில் முயன்றபோதும் உடைத்தெறிய முடியாத இறுக்க வியூகங்களாகவே அவை இருந்தன. 'கிபிர்' உந்துவிசைப் போர்விமானங்கள் புக்காரா, சியாமசெற்றி, 'எம் ஐ 24' தாக்குதல் வானூர்திகள் கொண்டு அவற்றை நொருக்க வந்த சிங்கள வான்படை எதையுமே சாதிக்கவில்லை. ஆட்டிலறிகள், பீரங்கி கவசவண்டிகள், 120 மில்லி மீற்றர் மோட்டார்கள், மற்றும் சிறுரக மோட்டார்கள், ஏவுகருவிகள் சகிதம் சிறப்புக் கொமாண்டோக்கள் கையாண்ட ஒரே சமயத்தில் பல முனைகளூடு நகரும் தந்திரோபாயமும் துளியளவு பயனையும் தரவில்லை.

எனவே அந்த, அழிவு வலயத்தை ஊடறுத்து நுழையும் விஷப்பரீட்சையில் மீண்டும் முயற்சிக்காமல் அதனை விலக்கி மேவி வளைத்து பரந்தன் சந்தியிலிருந்து 5 கிலோமீற்றர் தூரத்திலிருந்த கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கு, 15 கிலோமீற்றர் நீளமான ஒரு அரைவட்டச் சுற்றுப்பாதையில் படையை நகர்த்த எதிரி தீர்மானித்தான். அதில் அவனுக்கு வேறு இலாபங்களும் இருந்தன. சுற்றுப்பாதையொன்றில் நகர்வதன்மூலம் சமராங்கை விரித்து பல கிலோமீற்றர்களுக்கு அகட்டும்போது குறிப்பிட்ட சில மையங்களில் ஒருங்கு திரட்டப்படுவதற்குப் பதிலாக புலிகளின் பலம் ஐதாக்கப்படும். அப்போது தீவிரம் குறைந்த ஒரு எதிர்த்தாக்கத்தையே தனக்குப் புலிகளால் கொடுக்கக்கூடியதாயிருக்கும். அத்தோடு -

திட்டமிட்ட ரீதியில் ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருக்கும் பாதுகாப்பான சண்டையரண்களுக்குள்ளிருந்து புலிகளை வெளிக்கொண்டு வந்து, பேரிக்கு அரண் செய்யப்பட்ட




சத்ஜய கட்டம் 1, கட்டம் 2 — படைநகர்வுகளும் எதிர்ச்சமர்களும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



புதுப்பிரதேசங்களில் சண்டைக்கிழுத்து முல்லைத்தீவுக்கு ஈடான உயிரழிவையும் கொடுக்கலாம் என்ற கணக்குகளையும் எதிரி போட்டான்.

அவ்வாறான ஒரு சுற்றுவளைவு நீள்பாதையைத் தேர்வதற்கு, எதிரிக்கு இரண்டு வழிகள் இருந்தன.

முதலாவது, கிழக்குப்புறத்தில் முரசுமோட்டைப் பகுதியூடாக கனகராயன் ஆற்றை எல்லையாகக் கொண்ட பரப்பினூடு நகர்ந்து, திருவையாறின் வழியாகக் கிளிநொச்சியை அடைவது.

இரண்டாவது மேற்குப்புறத்தில் குஞ்சுப்பரந்தன் பகுதியூடாக உருத்திரபுரம் ஜெயந்திநகர் பிரதேசத்தை எல்லையாகக் கொண்ட பரப்பினூடு நகர்ந்து, டிப்போ வீதிவழியாகக் கிளிநொச்சியை அடைவது.

இவற்றில் இரண்டாவது வழியில்தான் எதிரி நடவடிக்கையைச் செய்து முடித்தான். ஆனால், முதல் நகர்வை அவன் முதலாவது வழியிலேயே எடுத்தான்.

புரட்டாதி 22ம் திகதி, 'சத்ஜய' வின் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

முன்பு 'றிவிரச' வை விடவும் கூடுதலான வளங்களோடு 'சத்ஜய' வின் இரண்டாம் கட்டம் முயற்சிக்கப்பட்டது. இப்போது இரண்டாம் கட்டத்தை விடவும் கூடுதலான வளங்களோடும், சுற்றுப்பாதையில் நகர்ந்து புலிகளைச் சண்டைக்கிழுத்து கொல்லும் புத்திசாலித்தனமான தந்திரோபாயங்களோடும் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரியாவின் நெறிப்படுத்தலில், பிரிகேடியர் வசந்த பெரேரா களத்தை வழிநடத்தினார்.

பரந்தன் பகுதியில் யாழ். வீதிக்குச் சமாந்தரமாக கிழக்கே 2 கிலோமீற்றர் தூரத்திலுள்ள தமது முன்னரங்க நிலைகளிலிருந்து, முல்லைத்தீவு வீதிக்கு வடக்கே ஒரு கிலோமீற்றர் தூரத்தில் வெளியேறி -

முரசுமோட்டைப் பகுதியை நோக்கி நகர முயன்ற சிங்களத்துருப்புக்களை 2ம் கட்டைக்கு வடபுறத்தில் இடைமறித்த புலிகள், உக்கிர எதிர்த்தாக்குதலை நடாத்தி வழிமறித்து நிறுத்தினர்.

மீண்டும் மறுநாள் விடியற் பொழுதில் அதே திசையில் தொடர்ந்து நகரத் தொடங்கிய படையினரை, 3ம் கட்டைக்கும் முரசுமோட்டைக் குளத்துக்கும் இடையால் வியூகமிட்ட புலிகள், கடுமையான எதிர்ச்சண்டையை நிகழ்த்தி இடைமறித்துத் தடுத்தனர்.

கிழக்குத்திசையில் இரண்டு நாட்களாக நடந்த இந்தப் பெருஞ்சண்டைகளை அடுத்து, இரண்டாம் நாள் நள்ளிரவு வேளை திடீரென, மேற்குத்திசையில் மிகவேகமான இரவு நகர்வொன்றைச் செய்ததுடன், முதலிரண்டு நாளாய் முரசுமோட்டைப் பகுதியில் தான் முன்னேறியிருந்த இடங்களிலிருந்து எதிரி பின்வாங்கவும் செய்தான்.

முரசுமோட்டைப் பகுதியூடான நகர்வை இடைநிறுத்தியமைக்கு அல்லது மேற்கொள்ளாமைக்கு, மூன்று காரணங்கள் கூறலாம்.

ஒன்று மறைவுகளும் காப்புகளுமற்ற, வயல் நிலங்களாலான ஒரு வெளியான பிரதேசமாகவே அந்த வழி இருந்தமை.

இரண்டு புலிகளின் கவனத்தை திசைதிருப்புவதற்கான ஒரு தந்திரோபாய நகர்வாகவே, அது மேற்கொள்ளப்பட்டமை.

மூன்று புலிகள் கடுமையான எதிர்ச்சண்டைகளை நிகழ்த்தியமை.

இந்தக் காரணங்களுள் ஒன்றுக்காக அந்த முனையிலிருந்து பின்வாங்கிய எதிரி உண்மை நகர்வை, அடுத்த முனையில் இரவில் செய்தான்.

யாழ் வீதிக்குச் சமாந்தரமாக ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள தனது மேற்குப்பகுதி முன்னரங்க நிலைகளிலிருந்து, பூநகரி வீதிக்கு வடக்கே 2 கிலோமீற்றர் தொலைவில் புறப்பட்ட எதிரித் துருப்புக்கள்

குமாரபுரம், பெரியபரந்தன் பகுதிகளுக்கு வடபுறத்தால் நகர்ந்து குஞ்சுப்பரந்தனூடாக வளைந்து, உருத்திரபுரம் பிரதேசத்தை அடைந்தனர்.

அந்த இரவு நகர்வுக்கு எதிராக தீவிரத்தன்மையற்ற ஒரு சண்டையிலீடுபட்டபடி புலிகள் பின்வாங்கலைச் செய்யவேண்டித்தான் இருந்தது. முடியுமான அளவுக்கு எதிரியைத் தாமதப்படுத்துவதைத் தவிர, முழுமையான ஒரு எதிர்ச்சண்டையை நடாத்த அது சாதகமான களம் அல்ல. சனங்களையும் குண்டுகளையும் அள்ளியிறைத்தவண்ணம் முன்னேறும் படை நகர்வை இடைமறிப்பதென்பது, மட்டுப்படுத்தப்பட்ட படைக்கல வளத்தினையே கொண்ட புலிகளுக்கு சாத்தியமற்ற காரியம்.

அவதானித்து, இனங்கண்டு, குறிவைத்துச் சண்டையிட்டு, படைக்கல வளங்களைத் தேவைக்கு அளவாக மட்டுமே பயன்படுத்துவது என்பது பகல் சண்டைகளிலேயே சாத்தியமானது. இரவிலெனில், எதிரியின் நிலைகள் அசைவுகள் பற்றிய தெளிவான வேவுத்

"எதிரி எதை விரும்புகின்றானோ அதை நீ செய்யாதே" என்பது ஒரு போரியல் அறிவுரை. புலிகளும், எதிரி விரும்பிய புத்திசாலித்தனமற்ற அந்த முடிவை எடுக்கவில்லை.

தகவல்கள் இருந்தாலே அது முடியும். எங்கு வருகிறான்? என்ன செய்கிறான்? எப்படி அசைகிறான்? எவ்வித வியூகத்தை இடுகிறான் என்பதை அறிய முடியாத இருளுக்குள் நகரும் துருப்புக்களைத் தடுத்து மறிக்க நினைத்து எதிர்கொள்வது, அழிவைத் தருகின்ற ஒரு களமாகவே முடியும்.

அந்த இரவு நடவடிக்கையில், மேற்குத்திசையில் 6 கிலோ மீற்றர்கள் வளைந்து நகர்ந்த துருப்புக்கள், விடியும் பொழுதில் உருத்திரபுரம் கட்டுக் குளத்தருகில் நிலைகொண்டனர்.

இரண்டாம் கட்டப் படையெடுப்பில் மிகக் கடுமையாகச் சண்டையிட்டு வழிமறித்து மோதிய புலிகள், மூன்றாம் கட்டத்திலும் அதே வகையான முறியடிப்புச்சமரை நிகழ்த்துவர் என்பதைத்தான் ஏற்கனவே எதிரி எதிர்பார்த்திருந்தான். சண்டைக்கு அரண் செய்யப்பட்டிருக்கும் காப்பு மிகுந்த பிரதேசத்தில் மட்டுமின்றி, சண்டைக்குத் தயார்செய்யப்படாத காப்புகளற்ற பிரதேசத்திற்கு சண்டையரங்கு மாற்றப்பட்டாலும் கூட அதேவகையான முறியடிப்புச்சமரை உக்கிரமாக நிகழ்த்துவர் என்றும் அவன் நம்பினான். அப்படி நடக்கவேண்டும் என்றுதான் விரும்பினான். அப்போது அவர்கட்கு வாய்ப்பற்ற பிரதேசத்தில் தமக்கு முட்டாள்தனமாக முகம் கொடுக்கும் புலிகளுக்கு, பாரிய உயிரழிவை வழங்கலாம் எனத் திட்டமிட்டான்.

"எதிரி எதை விரும்புகின்றானோ அதை நீ செய்யாதே" என்பது ஒரு போரியல் அறிவுரை. புலிகளும், எதிரி விரும்பிய புத்திசாலித்தனமற்ற அந்த முடிவை எடுக்கவில்லை.

போரரங்கை வழிநடாத்திக்கொண்டிருந்த தளபதிகள் பானு, தீபன் ஆகியோர்

மாற்றமடைகின்ற களநிலவரங்களுக்கு ஏற்ப உடனுக்குடன் அறிவுறுத்தல்களை வழங்கிக் கொண்டிருந்த தலைவர் அவர்களின் ஆலோசனைகளுக்கிணங்க, சமர்க்களத்தில் மாற்றத்தைச் செய்தனர்.

தம்மை அழிப்பதற்கென்றே திட்டமிட்டுக் கவர்ந்திழுக்கப்படும் அந்தப் பாதகமான மாபுவழிச்சண்டைக் களத்துக்குள் ஈர்க்கப்படாமல் புலிகள் விலகிக் கொண்டனர். ஆட்பல, படைக்கல வளங்கள் பற்றாக்குறையான உள்ள வளத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய புலிகளைப் போன்ற ஒரு கெரில்லா இயக்கத்திற்கு, அத்தகைய விலகல் அத்தியாவசியமானது.

எதிரியின் தந்திரோபாயப் போர்முறை நகர்வுக்கு ஏற்ப, தமது போர்முறையின் தந்திரோபாயத்தையும் புலிகள் உடனடியாக மாற்றினர்.

எதிரியை இடைமறித்து தடுத்துச் சமரிடுவதற்குப்பதிலாக

அவனது நகர்வுக்கு எதிராக மட்டுப்படுத்தப்பட்ட சண்டையொன்றை நடாத்தியபடி அவனை முன்னேற அனுமதித்துவிட்டு

வெற்றிக்கு வாய்ப்பான, சாதகமான களநிலைமைகளில் ஊடுருவல் தாக்குதல்களை நடாத்தி அவனுக்கு இழப்பை உண்டுபண்ணும் போர்முறைக்குப் புலிகள் மாறினர்.

புலிகளைச் சண்டைக்கிழுத்துக் கொல்லும் நுட்பமான திட்டம் தவிடுபொடியானது. மட்டுமல்ல, எதிரிடையாக -

தம் வரலாற்றில் என்றுமே சந்தித்திராத ஒரு முறியடிப்புத் தாக்குதலுக்கும் சிங்களப்படை இலக்கானது.

2ம் நாள் இரவு உருத்திரபுரம் கட்டுக்குளம் வரை நகர்ந்து நிலைகொண்டிருந்த படையினர், 3ம் நாள் காலை அங்கிருந்து ஊடாம் வாய்க்கால் பகுதியை நோக்கி முன்னேறியபோது




சத்ஜய கட்டம் 3 படை நகர்வும் அதற்கெதிரான புலிகளின் சமரும்

தொடர்ச்சி 12ம் பக்கம்...

# 'சத்ஜய' படையெடுப்பும்........



துருப்புக்களின் முன்னணித் தாக்குதல்படைப் பிரிவின் நகர்வினுள், சிறியளவான ஒரு திடீர் ஊடுருவற் தாக்குதலை புலிகள் நடாத்தினர்.

2 அல்லது 3 யுத்த 'ராங்கு'களைச் சேதப்படுத்தியதுடன், ஜி.பி.எம்.ஜி, எல்.எம்.ஜி கள் உட்பட 12 ரைபிள்களைக் கைப்பற்றினர்.

இந்தச்சண்டையை அடுத்து மறுநாள் எதுவித நகர்வையும் மேற்கொள்ளாது சிப்பாய்கள் அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என்பது உறுதியானது. 190 படையினர் கொல்லப்பட்டதாக 'சண்டே ரைம்ஸ்' தனது 29.09.96 ஆம் திகதிய இதழிலும், 206 படையினர் கொல்லப்பட்டதாக 'மிட்வீக் மிறர்' தனது 16.10.96 இதழிலும் குறிப்பிடுள்ளன. 32 ஆயுதக் கருவிகளை புலிகள் கைப்பற்றினர். புலிகளின் 42 வீரர்கள் அந்தக் களத்தில் வீழ்ந்தனர். கரும்புலிகளின் அணியெதுவும்

**கெரில்லாப்போருபாய யுத்த முறையில் புலிகள் பெற்றுவிட்ட பூரணப்பட்ட வளர்ச்சி நிலைக்கு, முல்லைத்தீவுத் தாக்குதல் ஒரு குறியீடு. மரபுவழி யுத்தமுறையில் ஈடுபட புலிகள் பெற்றுள்ள புதிய போர்வலுவுக்கு, கிளிநொச்சிச் சமர் ஒரு அடையாளம் இதனை தமிழீழ யுத்தக்களத்தில் வருங்காலத்தில் நிகழப்போகும் பெரும் மாற்றங்களின் எதிர்வுகூறல் என்றுதான் சொல்லவேண்டும் !**

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

அமைதியாக இருந்த எதிரி அதற்கடுத்த நாள் வேறொரு புதுவழி மூலம் நகரத் தயாராகிக் கொண்டிருந்த போது

5ம் நாள் 26ம் திகதி வியாழக்கிழமை 'சத்ஜய' துருப்புக்களுக்கு அழிவுக்குரிய நாளாகவே விடிந்தது.

அன்றுதான் பேரழிவு மிக்க அந்தப் பெரும் தாக்குதலை அவர்கள் எதிர் கொண்டனர்.

உருத்திரபுரம் புனித பற்றிமா கல்லூரிக்கருகில் நிலை கொண்டிருந்த 'சத்ஜய' துருப்புக்களின் முன்னணிப் பகுதிக்குள் மூன்று முனைகளில் ஊடறுத்து நுழைந்த புலிகள், எதிரிக்கு மரண அடியைக் கொடுத்தனர். அந்த முன்னரங்க நிலைகளில் நிறுத்தப்பட்டிருந்த சிறப்புக் 'கொமாண்டோ'ப் படையணிகளைச் சிதறடித்தனர்.

காலை 5.30 மணியிலிருந்து 3 மணி நேரம் அந்த உக்கிரமான அதிரடித் தாக்குதலை புலிகள் நிகழ்த்தினர். வான்படையின் போர் விமானங்கள், 'ஆட்டிலறி'கள் யுத்தராங்குகள் மற்றும் கனரக சிறுரக போர்க்கருவிகள் சகிதம் அந்தத்தாக்குதலை முறியடிக்க பகைவன் எடுத்த உச்சக்கட்ட முயற்சியை முறியடித்த புலிகள், தாக்குதலை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தபின்பு களத்திலிருந்து வெளியேறினர்.

குறைந்தது 200 வரையான சிங்களச் தாக்குதலில் பங்கேற்கவில்லை. ஆனால், சிங்கள அரசு, தாக்குதலைத் தாம் முறியடித்ததாகவும், அதில் புலிகளின் தற்கொலைப் படையினர் உட்பட 450 புலிகள் கொல்லப்பட்டதாகவும், அவர்களில் 136 பேரின் சடலங்களை தாம் மீட்டுள்ளதாகவும் அப்பட்டமான பொய்ப் பிரச்சாரங்களை செய்தது. எனினும், இந்தத் தாக்குதலின்போது எமது 17 வீரர்களின் உடல்கள், களத்திலிருந்து மீட்டுவரப்பட முடியாமல் விடுபட்டு விட்டன என்பது உண்மையாகும். களப்பிரதேசத்தில் ஆங்காங்கே வயல் வெளிகளிலும், வீதியோரங்களிலும் தாம் பொறுக்கியெடுத்த 100 வரையான புலிகளின் உடல்களை ஒப்படைத்ததாக சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கமூலம் சிங்கள அரசு அறிவித்தது. எமது மாவீரர்களின் உடல்களைப் பெறுவதற்குச் சம்மதம் தெரிவித்துக் காத்திருந்தபோதும், பின்னர் உடல்களை அரசு வழங்கவில்லை.

6ஆம் நாள் சண்டையின் பிரதான மையமும் புலிகளின் கணிசமான சண்டையணிகளும் உருத்திரபுரம் பகுதியில் நிலைகொண்டிருந்தவேளை திடீரென, அதிகாலையில், பரந்தன் முன்னணி நிலைகளிலிருந்து காடிப்போக்குச் சந்தியை நோக்கி, பிரதான வீதிக்கு மேற்குக் கரையால் நகர முற்பட்ட பகைவனை ஏற்கனவே அரண் செய்யப்பட்டிருந்த காப்பான நிலைகளிலிருந்து உக்கிர எதிர்த்தாக்குதலை நிகழ்த்திய புலிகள், பலத்த இழப்பைக் கொடுத்து வழிமறித்து நிறுத்தினர்.

7ம் நாள் மீண்டும் உருத்திரபுரப் பகுதியிலிருந்து, ஜெயந்திநகருடாக நகர்ந்த துருப்புக்கள் மீது, குருகுலத்திற்கு அருகில் புலிகள் ஒரு அதிரடியைக் கொடுத்தனர். யுத்த 'ராங்க்' ஒன்று முழுமையாக அழிக்கப்பட்டது.

8ம் நாள் குருகுலப்பகுதியிலிருந்து திருநகருடாக ஒரு அணியும், பரந்தனிலிருந்து இன்னொரு அணியும் கிளிநொச்சியை நோக்கி நகர்ந்தபோது

திருநகருடாக நகர்ந்த அணி கிளிநொச்சி மருத்துவ மனையையும், பரந்தனிலிருந்து நகர்ந்த அணி காடிப்போக்கு புனித திரேசா கல்லூரியையும் அடைந்தன. இந்தச் சண்டைகளில் 2 ரைபிள்கள் கைப்பற்றப்பட்டன.

9ம் நாள் 'சத்ஜய' 3ம் கட்டத்தின் இறுதி நாள் புரட்டாதி 30ம் திகதி, ஜெயந்திநகர்ப் பகுதியிலிருந்து தென்திசையால் நகர்ந்த அணி, அம்பாள் குளம் சந்தியூடாக வளைந்து, டிப்போ வீதிவழியாக பிரதான வீதியை அடைந்தது.

'சத்ஜய' படையெடுப்பின் 3ம் கட்டம் முடிவடைந்து விட்டது.

இப்போது ஆனையிறவுத் தளத்திலிருந்து, கிளிநொச்சி மத்தியகல்லூரி வரை பிரதான வீதியை மையப்படுத்தி 3.5 கிலோமீற்றர் அகலத்தில் சிங்களப்படைகள் நிலை கொண்டிருந்தன.

'சத்ஜய' 3ம் கட்டச்சமரில் தனது 269 படையினர் உயிரிழந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் கூறியது. எனினும், களத்திலிருந்து கிடைத்த செய்திகள், 500க்கும் குறையாத படையினர் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்துகின்றன. " 'சத்ஜய' வில் உயிரிழந்த படையினரின் தொகையை அரசு அரைப்பங்காகக் குறைத்தே வெளிப்படுத்தியது", என்று திருரணில் விக்கிரமசிங்கா, ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டத்திலும், "கொழும்பு மாவட்டத்திற்கு மட்டும் 300 படையினரின் சடலங்கள் வந்தன. ஏனைய மாவட்டங்களுக்கு எத்தனை எத்தனையோ தெரியாது" என கொழும்பு மாவட்ட



உறுப்பினர் அல்ஹாஜ் எம்.எச் முகமட் நாடாளுமன்ற உரையிலும் தெரிவித்திருப்பது இங்கு கவனத்திற்குரியதாகின்றது. 'சத்ஜய' 3ம் கட்டச்சமரில் எமது 133 வீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

கிளிநொச்சிச் சமரின் போரியல் பரிமாணத்

வித்தியாசமானது; வழமை மாறுபட்டது; தமிழீழப்போரி கட்டமொன்றைப் புலப்படுத்துவ யுத்த சரித்திரத்தில் முதற்த விடுதலைப்புலிகளின் படைத்து மரபுவழிச் சமர் ஒன்றை வெ கையாண்டுள்ளது. ஒப்பீட் 'றிவிரச' படையெடுப்புக்கு சமரைவிடவும் 'சத்ஜய' படை எதிரான சமர் முன்னேற்றகரமான சொல்லலாம். முன்னய கிடைத்த அனுபவங்களும், புதிதாக களத்திலிறக்கிய போரா இந்த மேம்பாட்டில் பங்கு வ புலிகளின் கைகளிற்கு 120 மோட்டார்களினதும் மற்று குறிப்பிட முடியாத கடுகருவி வருகை, மரபுவழிச்சமர் எதிரிக்கு முதற்தடவையாக குரியதாக்கியுள்ளதுடன், மரபு ஒன்றை சந்திக்கவல்ல போர் ஆரம்பக்கட்டத்தை புலி வழங்கியுள்ளது.

'சத்ஜய' வின் 2ம் கட் கட்டமும், புலிகளது போ இருவேறு பரிமாணங்களை கின்றன.

நிலத்தை இழந்துவிடாமல் துக்கொள்ள வேண்டுமென்ற பாட்டுடனும், அதற்காக உயிர்விலையைக் கொடுக்கவு நிலையுடனும் இருந்தால், பல நடவடிக்கை ஒன்றை மு தடுத்து முறியடிக்கலாம் என் கட்டச் சமர் சான்று.

ஆட்பலத்தைத் தக்க கொள்வதற்காகத் தந் பின்வாங்கலொன்றை செய்ய விருந்து. ஆனால் அதற்காக, தற்காலிகமாக இழக்க விட் நேர்ந்தாலும் கூட பல நடவடிக்கை ஒன்றை எதிர்கொ குறைந்த சேதத்துடன் மிகக்கூடிய அழிவைக்கொடுக் என்பதற்கு, 'சத்ஜய'வின் 3ம் சான்று.

கெரில்லாப்போருபாய யுத்த புலிகள் பெற்றுவிட்ட பூரணப்பட நிலைக்கு, முல்லைத்தீவுத் தா குறியீடு. மரபுவழி யுத்தமுறை

புலிகள் பெற்றுள்ள புதிய போ கிளிநொச்சிச் சமர் ஒரு அ இதனை தமிழீழ யுத் வருங்காலத்தில் நிகழப்போ மாற்றங்களின் எதிர்வுகூறல் சொல்லவேண்டும் ! ❋

## சிறுகதை

# நியாயங்கள் தண்டிக்கப்படுகின்றன

**- நிலவன் -**

கொட்டாஞ்சேனை நகர்ப்பகுதி

பொலிஸ் நிலையம்.

லொக்கப் ரூம் நம்பர் த்திறீ.

நேரம் இரவு எழுமணி.

அந்தக் குறைந்த வலு மின்குமிழின் வெளிச்சத்தினால் அறை ஒளியூட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த மின்குமிழின் ஒளிர்வையே பார்த்த வண்ணம் யோசனையில் ஆழ்ந்திருந்த என்னைக் கலைத்தான் ஒரு இளைஞன்.

"உங்களைப் பொலிஸ் கூப்பிடுது" என்தோள் தொட்டு அவன் சொல்ல, நான் திடுக்கிட்டு எழுந்து நின்றேன்.

இரும்புக்கதவு திறக்கப்பட்டது.

"வா வெளியே". அதட்டலுடன் ஒரு சிங்களக் கான்ஸ்ரபிள் அழைத்தான். பீதியுடனும் சோர்வுடனும் வெளியேறி, அவனைப் பின்தொடர்ந்தேன். அந்தக் கான்ஸ்ரபிள் என்னை இன்ஸ்பெக்ரர் அறையினுள் செல்லும்படி சொல்ல, நான் மட்டும் அறையினுள் நுழைந்தேன்.

இன்ஸ்பெக்ரரின் முகம் இறுகிப் போயிருந்தது.

"உனக்குச் சிங்களம் தெரியுமா?" ஆங்கிலத்தில் என்னிடம் கேட்க, நான் தெரியாதென தலையாட்டினேன். தமிழே தெரியாத அந்த இன்ஸ்பெக்ரர் என்னிடம் ஆங்கிலத்தில் கேட்கத் தொடங்கினான்.

"ஏன் நீ கொழும்பு வந்தாய்?"

அவனின் இக்கேள்வி எனக்கு எரிச்சலை ஊட்டியது. "நான் கொழும்பு வருவேன், போவேன் உனக்கென்ன? எத்தனைதரம் திருப்பித்திருப்பி ஒரே கேள்வியையே கேட்டு எரிச்சலூட்டுவாய்." மனதிலே தோன்றிய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டேன்.

நேற்றும் இப்படித்தான்—— ஏன் வந்தாய்



என்று அவன் கேட்க, நானும் கடந்த இரண்டு வாரமாக ஒரே பதிலைச் சொல்லிச்சொல்லி அலுப்பின் நிற்க—— இந்த இன்ஸ்பெக்டர் பாவி அறைந்ததனை கன்னத்தில் ஒரு அறை—— அம்மா! அந்த ஞாபகத்தில் பவ்வியமாக நின்று பதில் சொல்லத் தொடங்கினேன்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறியது முதல் கொழும்பில் வந்து மறுநாளே கைதானதுவரை நிகழ்ந்ததையும், வந்த காரணத்தையும் சொல்லி முடித்து, பெரிதாக மூச்சு வாங்கினேன்.

"உன்னுடைய பெயரென்ன" என்று கேட்க, உண்மையிலேயே எனக்குப் பொறுமையிழந்து போனது. "சும்மாதானே கேட்கிறாய்! இந்த இரண்டுவார காலமாக மூன்று வேளையும் முறைதவறாமல் உன்முன் வந்து பெயர், ஊர் என்று எல்லாமே சொல்லி விட்டேனே! பெயர் சொல்லி அழைத்துவரச் சொல்லிவிட்டு இப்போது பெயரென்ன என்கிறாய்! என்ன செய்வது? இவனிடம் அடிவாங்கிச் சாவதிலும் பதிலைப் பத்து முறையேனும் சொல்லுவது மேல்!"

"ராம்குமார்" என்றேன்.

"ஏய்! ராம்குமார். நீ புலிக்குச் சப்போட்தானே"

அப்பாடா....... இனித்தான் இருக்கிறது வேடிக்கை. அங்கே சுற்றி, இங்கே சுற்றி இப்போதுதான் விசயத்திற்கு வந்திருக்கிறான். இனித்தான் எல்லாம் இருக்கிறது! மனதிலே தோன்றிய சிரிப்பை அடக்கிக் கொண்டு,

"இல்லை" என்றேன்.

"டேய், பொய் சொல்லாதே. நீ படிப்பதாகச் சொல்வது பொய். நீ ஒரு புலி, இங்கே குண்டு வைக்கத்தானே வந்தனீ" என்று அதட்டலுடன் இன்ஸ்பெக்டர் கத்தினான்.

வார்த்தைகள் சுவரில் மோதித் தெறித்தன.

"ஓ......... கேடு கெட்டவனே இப்பிடி எத்தனை நாளைக்குத்தான் கட்டாயப் படுத்தி அப்பாவிகளைப் புலிகளாக்குவாய்! உனக்கு 'மெடல்' எடுப்பதற்கும், பதவி உயர்விற்கும் எங்கள் வாழ்க்கைதானா கிடைத்தது. கட்டாயப்படுத்தினால் நான் உண்மையில் குற்றவாளி ஆகிவிடுவேனா"

"என்ன சொல்லுகிறாய்....... நான் புலியா........? ஓ இந்த வருடத்திற்கு இந்தப்பகிடி போதும்! என்னை அறிந்தவர்கள் இதைக்கேட்டால் நிட்சயம் சிரிப்பார்கள். யாழ்ப்பாணத்தில் இத்தினை நாள் இருந்தாலும் புலிபற்றியும், ஆயுதப்புரட்சி பற்றியும் யோசித்தவனா நான். எனக்குத் தெரிந்ததெல்லாம் வீடும் படிப்பும்தான். எந்த ரியூட்டரியில எத்தினைமணிக்குக் கிளாஸ்—— யாருடைய நோட்ஸ் படித்தால் A எடுக்கலாம்—— யாரிடம் தனிப்பட்ட வகுப்பு எடுக்கலாம்......... என்னென்ன புத்தகங்களை எடுத்து மேலதிக வாசிப்புச் செய்யலாம்—— இவைகள்தான் தெரியும். முடிவில் நான்கு A கள் எடுத்துப் பல்கலைக்கழகம் தெரிவானேன்."

அப்போதுதான் ஒருமுறை கண்ணைச் "செக்" பண்ணிக் கண்ணாடி எடுப்போம் என்ற நோக்கத்துடன் கொழும்பு வந்தேன். இப்ப நீ புலியா? என்றால் என்ன சொல்வேன்.

"என்ன மௌனம், நீ புலிதானே"

"இல்லை—— நிச்சயமாக இல்லை" ஆங்கிலத்தில் என்னையும் மீறிக் கத்தினேன். என் கண்கள் கலங்கத் தொடங்கின.

அப்போது இன்ஸ்பெக்டரின் மேசையிலிருந்து தொலைபேசி மணி அடித்தது.

"ஹலோ........ ரஞ்சித்குமார ஹத்தாகரன்னே" எனப் பேசத் தொடங்கியவர் என்னை வெளியே போகும்படி கையால் சைகை செய்தார்.

நான் மீண்டும் அறையினுள் அடைக்கப்பட்டேன்.



என் நெஞ்சம் வேதனையால் மிகவும் கலங்கியிருந்தது. என்ன நிர்ப்பந்தம் இது! செய்யாத குற்றத்திற்கு இப்படி ஒரு தண்டனையா——?

சுவரில் சாய்ந்து இருக்கப்போன நான், முதுகில் பலமான வலியை உணர்ந்து "ஆ" என்று வாய்விட்டு அலறினேன்.

நான் அலறியதைக் கேட்ட அந்த இளைஞன்......... அவன் பெயர் சொக்கலிங்கம் என்று சொன்ன ஞாபகம். "நல்லா நோகுதே" என்று கேட்டான்.

"ம்" என்று ஈனஸ்வரத்தில் முனகினேன்.

"பாவியள்! நேற்று உங்களுக்கு என்ன அடி அடிச்சுப் போட்டாங்கள்.........! நெஞ்சும் நெஞ்சம் கதைக்காமல் இருந்திருக்கலாம்.......... "என்றவனைப் பார்த்துச் சொன்னேன்——

"உந்த இன்ஸ்பெக்டர் கதைச்ச கதைக்கும்......... படுத்திய பாட்டிற்கும் ஊரில எண்டால் கொலைதான் செய்திருப்பன்——"

சொக்கலிங்கம் அதன்பின் என்னுடன் எதுவும் பேசவில்லை.

எனக்கு நேற்று நடந்த அந்தச் சம்பவம் கண்முன் நிழலாடியது.

வழமையைப்போல் என்னை விசாரணைக்கு அழைத்த இன்ஸ்பெக்டர்-

**"நான் ஒரு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவன். எனக்குக் கண் கோளாறு. சிகிச்சைக்காகவே வந்தேன். என் தந்தையும் விரைவில் வருவார். எனக்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை—— என்னை—— நம்புங்கள்!" கெஞ்சினேன்.**

"நீ ஒரு புலிதானே" என்றான்.

"இல்லை"

"திரும்பத் திரும்பப் பொய்சொல்லாதே! தமிழ் நாயே! நான் சொல்லுறன்—— நீ இங்கே மருத்துவ சிகிச்சைக்காக வரவில்லை. ஒரு உள்நோக்கத்துடன் உனது மேலிடத்தினால் அனுப்பப் பட்டவன் நீ! இன்னும் பலர் உன்னோடு வந்து பிரிந்து சென்று—— ஒரு தீய நோக்கத்திற்காகச் செயற்படுகிறீர்கள். ஆனா நீ அவற்றையெல்லாம் எங்களுக்கு மறைக்கிறாய்! அழகாகப் பொய் சொல்லித் தப்பிவிடலாமெனத் தப்புக்கணக்குப் போடுகிறாய். எனக்குத் தெரியும்—— உன் பேச்சும், நடை பாவனையெல்லாம் நீ ஒரு "எல்.ரி.ரி" என்பதைத்தான் நிரூபிக்கின்றன—— இனியும் மறைக்காமல்—— மறுக்காமல் ஒத்துக்கொள்!" ஆக்ரோஷத்துடன் பேசிவிட்டு என்னைப்பார்க்க, நான் மறுத்தேன்.

"நான் ஒரு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவன். எனக்குக் கண் கோளாறு. சிகிச்சைக்காகவே வந்தேன். என் தந்தையும் விரைவில் வருவார். எனக்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை—— என்னை—— நம்புங்கள்!" கெஞ்சினேன்.

"ஏய்! திமிர் பிடிச்ச கழுதை. நீங்கள் எல்லாம் சரியான விசுவாசிகள். எப்படித்தான் கேட்டாலும் உண்மையைச் சொல்லமாட்டீர்கள். முட்டாள்! திருப்பித்திருப்பி ஒன்றையே சொல்லுவதுதான் உங்கள் குணம், எனக்கு அது தெரியும். முடிவாகக் கேட்கிறேன்—— ம்—— சொல்—— நீ புலிதானே——"

"இல்லை நான் சொல்ல மாட்டேன்."

"மாட்டாயா—— சொல்லடா——" என்று கத்திய இன்ஸ்பெக்டர், இரண்டு கான்ஸ்ரபிள்களை அழைத்து என்னை அரை நிர்வாணமாக்கினான்—— பின்னர் கைகளை இழுத்துப் பின்னுக்குக் கட்டினான்.

"சொல்லடா நாயே"

"பேசாமலா நிற்கிறாய்!"

என்றவன் ஆத்திரத்துடன் சப்பாத்துக் காலால் ஓங்கி உதைத்தான்.

அப்பாடா—— என்ன உதை—— சந்ததி விருத்தியே இருக்காது என நம்பவைத்தது அந்த உதை.

அலறியபடி விழுந்து மயக்கமானேன்.

நினைவுகள் இன்னும் வலித்துக் கொண்டிருந்தன.

சொக்கலிங்கமும் பாவம், பத்து நாளாக இந்தச் சிறைவாசம் அனுபவிக்கிறான். குடும்பத்தில் மூத்தபிள்ளை, நாலு தங்கைகள். கடன்பட்டு மாமாவின் உதவியுடன் கனடா போவதற்கென வந்தவன். இப்போது விசா, ரிக்கற் எல்லாம் கனடா போக அவனுக்குக் காத்திருக்கின்றன. ஆனால்—— இவனோ அவசரகாலச் சட்டத்தின் கீழ் காவல் காக்கப்படுகின்றான்.

நான் பலமும் யோசிக்கலானேன்.

நான் தனிய கொழும்பு வந்தது பிசகோ? அல்லது இது தமிழன் என்பதால் நான் அனுபவிக்கும் கஷ்டமோ? எப்படியாயினும் இப்படியான அவலங்களை என் வாழ்வில் என்றும் அனுபவித்திராதவை.

இன்று நான் குற்றம் செய்யாமலே தண்டனையை அனுபவிக்கிறேன் நான் இங்கேயும் துன்பங்கள். வேதனைகளை அப்பா அம்மா அறிந்தால்—— எவ்வளவு வேதனைப் படுவார்கள்! என் தங்கை நிர்மலா—— அண்ணா என்று கதறி அழுவாளே! நான் என்ன செய்வேன் கடவுளே! எப்படி இந்தச் சிக்கலில் இருந்து விடுபடுவேன். நினைக்க நினைக்க அழுகைதான் வந்தது. நான் அழத்தொடங்கினேன்.

திடீரென கதவு திறக்கப்படும் ஓசைகேட்டு கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தேன்.

உள்ளே நுழைந்த இரு பொலிஸ்காரர்கள் எனக்குச் சற்று தள்ளிப் படுத்திருந்த சொக்கலிங்கத்தை உதைத்து எழுப்பினர்.

தொடர்ச்சி 19 ம் பக்கம்...

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பன்னிரெண்டு

(தொடர்ச்சி)

அவள் தலையை அசைத்துத் தனக்கும் அது விருப்பமே என்று தெரிவித்தாள்.

"நல்லது. கரேன் ஹான்சன் என்று உன் பெயர் இருக்கும்." ஒவ்வொரு நாளும் செய்வது போல் அன்றும் அவள் கையைப் பிடித்து அவளது அறைக்கு அழைத்துச் சென்று, படுக்கவைத்து, மெலிதாக விளக்கை எரிய வைத்தனர்.



அங்கே, அவளுக்கு 'கிச்சுக்கிச்சு மூட்டி' விளையாட்டுக் காட்டினர். மக்சிமில்லியனும் இந்த விளையாட்டிலே பங்கு கொண்டதால், அவள் தன்னால் முடியும்வரை சிரித்துக் கொண்டிருந்தாள். பின்பு படுக்கைக்குச் சென்று, தனது நாளாந்தப் பிரார்த்தனையைச் செய்தாள்.

"கடவுளே, அப்பாவையும், அம்மாவையும், ஹான்சனையும், எனது புதிய தம்பியையும், எனது உறவினர் எல்லோரையும் ஆசீர்வதியும். என்னை அன்பாக வைத்திருக்கிற ஹான்சன் தம்பதியினரையும் ஆசீர்வதியும். இரண்டு மக்சிமில்லியன்களையும் ஆசீர்வதியும்—

நான் கொஞ்ச நேரத்தில் உன்னோடு இருக்க வருகிறேன்." மேற்றா சொன்னார்.

"பரவாயில்லை, நீங்கள் இனிமேல் என்னோடிருக்க வேண்டிய தேவையில்லை. மக்சிமில்லியன் என்னைப் பார்த்துக் கொள்ளும்."

"உனக்கு நல்லிரவாகட்டும் கரேன்."

"ஆகே........" கரேன் பின்னாலிருந்து கூப்பிட்டாள்.

"என்ன கரேன்___"

"டென்மார்க்கர்களும் கூட, யூதர்களை வெறுக்கிறார்களா?"

எனது அன்பான டொக்டர் திருமதி கிளெமென்ற்,

கரேன் எங்களிடம் வந்து கிட்டத்தட்ட ஆறு வாரங்கள் ஆகிவிட்டதல்லவா? எப்படியான ஒரு அருமையான குழந்தை. அவள் தன் பாடங்களை நன்றாகப் படிப்பதாக, அவள் பாடசாலை ஆசிரியர் எங்களுக்குக் கூறினார். அவள் டென்மார்க் பாஷை கற்றுக்கொள்ளும் வேகம் எங்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவள் தன் வயதுள்ள பிள்ளைகளோடிருப்பதால் இது சாத்தியமாகிறது என்று நினைக்கிறேன். ஏற்கனவே அவள் ஏராளமான சினேகிதிகளைப் பெற்றுக் கொண்டு விட்டாள். பல் வைத்தியர், அவளது ஒரு பல்லை இன்னொரு பல் ஒழுங்காக வளர்வதற்காகப் பிடுங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அது ஒரு சின்ன விஷயம். அவளை இசைப்பயிற்சியில் ஈடுபடுத்த எண்ணியுள்ளோம். பின்பு அதைப்பற்றி விபரமாக எழுதுகிறேன்.

அவளது இரவுப் பிரார்த்தனையில்...... என்று தொடர்ந்தது கடிதம். முத்து முத்தான தனித்தனி எழுத்துக்களில் கரேனின் கடிதமும் இருந்தது. என் அன்பான அப்பா, அம்மா, ஹான்ஸ், மக்சிமில்லியன், என் புதிய தம்பி யாவருக்கும்! நான் உங்களுக்குச் சொல்ல முடியாத அளவுக்கு உங்கள் பிரிவுத் துயரம் என்னை வாட்டுகிறது—

முன்பனிக் காலத்தில் (Winter), உறைந்துவிட்ட லிம்ஜோர்டன் நதிக்கரைகளில், பனிச்சறுக்கல் (Ice-Skating) விளையாட்டு விளையாடவும், சறுக்கு வண்டியில் ஏறி விளையாடவும் (Sledging) நல்ல நேரமாகும். கொழுந்து விட்டெரியும் நெருப்புக்கருகே அமர்ந்திருக்க, ஆகே எனது குளிர்ந்து விட்ட பாதங்களைத் தேய்த்துவிடுவது ஒரு அனுபவமே.

ஹான்சன் [illegible] செலவழித்த நாட்கள் மிக நிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் கழிந்தன. அவளுக்கு "நல்ல" சினேகிதப் பெண்கள் நிறையவே கிடைத்திருந்தார்கள். மீன் பிடிச்சமெடுக்கிற மீன் சந்தையில் மேற்றா மீன் வாங்கும் போது பக்கத்தில் நிற்பதையும், சமையல் அறையில் நின்று அவள் பதார்த்தங்கள் தயாரிக்கும் முறையைக் கற்றுக் கொள்வதையும் அவள் மிக விரும்பினாள். தையற்கலை போன்ற எத்தனையோ விடயங்களில் திறமை பெற்றிருந்த மேற்றா, பாடங்களைப் படிக்க உதவுவதிலும், திடீரெனக் காய்ச்சல், தடிமன் வந்து அவதிப்படும்போது ஆறுதல் அளிப்பதிலும் கைதேர்ந்தவளாயிருந்தாள். ஹான்சும் அவளுக்காக எப்போதும் புன்னகையுடன் தன் கைகளை அகலத் திறந்தபடியே வைத்திருப்பார். அவளுடைய சொந்தத் தந்தையைப் போல மென்மையானவராகவும், அறிவுள்ளவராகவும் இருந்தார். சில சந்தர்ப்பங்களில் தேவைக்கேற்றபடி கடுமையானவராகவும் இருந்தார்.

ஒரு நாள் கரேன் நடன வகுப்புக்குச்

**லியோன் யூரிஸ்**

சென்றிருந்த போது, ஆகே மேற்றாவைக் காரியாலய அறைக்குள் வரும்படி சொன்னார். அவர் வெளிறிப்போய் பதற்றத்தோடிருந்தார்.

"இப்போதுதான் செஞ்சிலுவைச் சங்கத்திடம் இருந்து அறிந்து கொண்டேன்." அவர் மனைவிக்குச் சொன்னார் தொடர்ந்து.

"அவர்கள் எல்லோரும் காணாமல் போய் விட்டார்கள். முற்றாகவே எதுவிதத் தடயமும் இல்லாமல் முழுக்குடும்பமும் மறைந்துவிட்டது. ஜேர்மனியிலிருந்து எவ்விதத்தகவலும் என்னால் பெறமுடியவில்லை. எல்லா வழியிலும் நான் முயற்சித்தேன்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ஆகே?"

"நினைப்பதற்கு என்ன இருக்கிறது? அவர்களெல்லோரையும் பிடித்துச் சித்திரவதைத் தடுப்பு முகாம்களிற் போட்டிருப்பார்கள்........ அல்லது நிலைமை இன்னும் மோசமாக___"

"ஐயோ கடவுளே!"

அவர்கள், கரேனுக்கு அவளுடைய முழுக்குடும்பமும், காணாமல் போன செய்தியைச் சொல்ல மனம் வரவில்லை. ஜேர்மனியில் இருந்து கடிதங்கள் வருவது நின்றுவிட்டால், அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டாலும் கேள்விகள் கேட்க அவள் துணியவில்லை. அவள் ஹான்சன் குடும்பத்தவரை மிகவும் நேசித்ததோடு, அவர்களை முற்றாக நம்பினாள். அவளுடைய குடும்பத்தைப்பற்றி எதுவும் சொல்லாததில் இருந்து, ஏதோ விசேடமான காரணம் இருக்க வேண்டும் என அவள் உணர்வு சொல்லிக் கொண்டேயிருந்தது.

அப்படியும் கூட ஒரு புதிய விளைவு ஒன்று ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அவள் தனது குடும்பத்தைப் பிரிந்திருப்பதுபற்றி வருந்தினாலும், அவளது தாய் தந்தையரின் நினைவுகள் மெல்ல மெல்லக் குறைந்து சென்று கொண்டிருந்தன. ஒரு எட்டுவயதுப் [illegible] நீண்டகாலம் பெற்றோரிலிருந்து பிரிந்திருக்க நேரும்போது அவர்களை ஞாபகத்தில் வைத்திருப்பதும் கடினமே.

**தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட மக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக, அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம் என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.**

நன்றாக ஞாபகம் செய்ய முடியாததைவிட்டு அவளுக்கே சில வேளைகளில் தன்னில் கோபம் வரும்.

ஒரு வருடம் கழிந்தபோது, அவள் தான் கரேன் ஹான்சன் என்பதையும், தான் ஒரு டென்மார்க் நாட்டவள் என்பதையும் தவிர வேறெதையும் நினைக்க முடியாதவளாயிருந்தாள்.

கிறிஸ்மஸ் 1939. (Christmas 1939)

ஐரோப்பாவில் யுத்தம் நடந்து கொண்டிருந்ததோடு கரேன், ஹான்சன் வீட்டுக்கு வந்து ஒருவருடம் ஓடிவிட்டிருந்தது. அவளுடைய இனிமையான மணியோசை போன்ற குரல், மேற்றா இசைத்த பியானோ ஒலியோடு இசைந்து, பாட்டொன்றை இசைத்துக் கொண்டிருந்தது. பாடல் முடிந்ததும், கரேன் தன்னுடைய அறையில் ரகசியமாகப் பாடசாலையில் தயாரித்து ஒளித்து வைத்திருந்த பரிசுகளை அலுமாரியில் இருந்து எடுத்துவரப் போனாள். அவள் அவற்றை மிகுந்த பெருமையுடன் அவர்களிடம் கையளித்தாள். அவற்றின் மேல் அவள் கைப்பட எழுதியிருந்த வாசகம் இருந்தது.

"அப்பாவுக்கும், அம்மாவுக்கும் உங்கள் அருமை மகள் கரேன்___"

*சித்திரை 8, 1940*

அன்றைய இரவு துரோகத்தனத்தில் தோய்ந்தது. பனிமூட்டமான காலையில், அணிவகுக்கும் இராணுவத்தின் காலடி ஓசைகள் டென்மார்க் எல்லைகளில் நிறைந்தது. தட்டைப் படகுக்குப்பின் (Barge) தட்டைப்பட்டதாக சாம்பல் நிற இரும்புத்தலைக் கவசங்களை (Grey Helmet) அணிந்த போர் வீரர்கள், பனி படர்ந்திருந்த உள்வரும் வழிகள் ஊடாகவும், வாய்க்கால்கள் ஊடாகவும் படர்ந்து ஊர்ந்து வந்தனர். இயந்திர மனிதர்களைப் போன்ற செயற்பாட்டுடன் ஜேர்மனிய இராணுவம், டென்மார்க்கின் நீள அகலம் எங்கும் சத்தம் செய்யாமல் பரந்து கொண்டது.

*சித்திரை 9, 1940*

கரேனும் அவள் வகுப்புத் தோழிகளும் ஜன்னலுக்கோடிச் சென்று, வானத்தில் கருமையாக அடித்தபடி இரைச்சலிட்டுக்கொண்டு வந்த விமானங்களைப் பார்த்தனர். அவை ஒவ்வொன்றாக ஆல்போர்க் (Aalborg) விமானத்தளத்தில் இறங்கின.

*சித்திரை 9, 1940*

மக்கள் குழப்பத்தோடு வீதிகளை நிறைத்தார்கள். "இது டென்மார்க் அரச ஒலிபரப்பு நிலையம். இன்று 4.15 மணிக்கு ஜேர்மன் இராணுவம், எமது எல்லைகளைச் சாட் (Saed) டிலும், குறிசா (Krussa) விலும் கடந்து விட்டது.

பின்னலாம் நிகழ்ந்து விட்டதும் மிகத் திறமையோடு நிறைவேற்றப்பட்டதுமான இவ்வாக்கிரமிப்பால், திகைத்துப்போன டென்மார்க் மக்கள் தங்கள் அரசர் கிறிஸ்ரியனின் செய்திக்காக ரேடியோக்களை விட்டகலாமல் இருந்தனர். அவர்கள் எதிர்பார்த்திருந்த அறிவிப்பும் வந்தது. டென்மார்க் தனது சுயபாதுகாப்புக்காக ஒரு வெடிபோதும் தீர்க்காமல் சரணாகதி அடைந்தது. போரைந்து நசுக்கப்பட்டவிதம், அவர்களுக்கு எதிர்ப்பு எவ்வித பயனையும் அளிக்காது என்ற பாடத்தைப் புகட்டி இருந்தது.

மேற்றா ஹான்சன் கரேனைப் பாடசாலையில் இருந்து விலத்தி, எங்காவது தொலைதூரத் தீவுக்கு அல்லது போர்ன்ஹோம் (Born Holm) க்குச் செல்லப் பயணப்படுகளை ஆயத்தப்படுத்தினாள். ஆகே அவளை அமைதிப்படுத்தி, பொறுத்திருந்து பார்க்க வற்புறுத்தினார். ஜேர்மன் நிர்வாகம் இங்கு ஆரம்பிக்க வாரங்கள், ஏன் மாதக்கணக்காகக் கூட ஆகலாம் என அவர் கருதினார்.

ஸ்வஸ்திக்காவினதும் (Swastika) (ஜேர்மன் இராணுவ இலச்சினை) ஜேர்மனிய போர் வீரர்களினதும் தோற்றம், கரேனை ஒரு நினைவு வெள்ளத்தில் மூழ்கடித்தது. அத்தோடு பயமும் உருவாகிற்று.

தொடரும்...

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# போரும் பொருண்மியமும்

## தமிழீழ மீன்பிடித்துறை

### பரவைக் கடல் மீன்பிடித்தல்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வட தமிழீழக் கடற்பிரதேசங்களில் செய்யப்படுபவையே பரவைக் கடல் மீன் பிடித்தல் ஆகும். அதாவது ஆழம் குறைந்த கடற்பரப்பில் கற்பிட்டி, மன்னார் தொடக்கம் பருத்தித்துறை வரையிலான பகுதிகளில் செய்யப்படும் தொழிலாகும்.

இங்கே காலத்திற்குக் காலம் பருவப் பெயர்ச்சிக் காலங்களில் பிடிக்கப்படும் விளை மீன், முரல், ஒட்டி, ஓரா, பறவை மீன், சூடை, நெத்தலி, கீரை, தேறை என்பன எல்லோராலும் அறியப் பட்டவையே. இவை கல்சியம், பொட்டாசியம் மற்றும் நுண் மூலகங்கள் செறிவாகக் கொண்டவையாதலால் ஈழ மக்களின் புரத, மா, நுண் மூலகங்களின் தேவையை நிறைவேற்றக் கூடியதாயும் விளங்குகின்றன.

வாடைக்காற்றுக் காலங்களில் தீவுப் பகுதிகளிலும், மன்னார், தலைமன்னார் போன்ற பகுதிகளிலும், தமிழீழத்தின் மற்றைய பகுதி களிலிருந்து மக்கள் தற்காலிகமாகக் குடியேறி இப்பருவப் பெயர்ச்சிக் காலம் முடியும்வரை தொழில் செய்கிறார்கள். இங்கே பிடிக்கப்படும் பெரும் பான்மையான மீன்கள், கூடுதலாகக் கிடைக்கும் வசதிகளைக் கொண்டு ஐஸ் கட்டியிட்டு பெட்டியிலடைத்து கொழும்புச் சந்தைக்கு அனுப்பப்பட்டு வந்தது. எஞ்சியது அதாவது மூன்றிலிரண்டு பங்கு கருவாடாகப் பதனிடப்பட்டு சிப்பமாகக் கட்டிப் பத்திரப்படுத்தப்பட்டு கொழும்புச் சந்தைக்கே அனுப்பப்பட்டு வந்தது.

சோழகக் காற்று வீசும் காலங்களில் முல்லைத்தீவு, சுழைக்குளம், தாளையடி, பருத்தித்துறை தொடக்கம் மாதகல் வரையிலான பகுதிகளில் பிடிக்கப்படும் பெரிய மீன்களும், உள்ளூர் மீன்களும், நடுத்தரமான மீன்களும் உள்ளூர் மீனவர்களின் தொழிலுக்கு பெரிதும் வருமானத்தைக் கொடுக்கக் கூடியதாகவிருக்கின்றன. இவையும் உள்ளூர் தேவைக்கு போக மிகுதி கொழும்புச் சந்தைக்கே ஏற்றப்பட்டு தமிழீழ மீனவர்களின் பொருண்மியத்திற்கு வலுவூட்டு வதாகக் காலங்காலமாக இருந்து வந்திருக்கின்றது.

இந்தப் பருவப் பெயர்ச்சிக் காலங்களில் தமிழீழ மீனவர்கள் பெரும் பிரச்சனைகளைத் தொடர்ந்து எதிர் கொண்டு வந்தார்கள். அதாவது சிறீலங்கா மீனவர்கள் தெற்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வந்து ஈழத்தமிழர்களின் பாரம் பரிய பிரதேசங்களில் குடியேறி இராணுவ கடற்படைத்துணையோடு தமது அடாவடித்தனத்தால் மீன் வளங்களை அள்ளிச்சென்று ஈழத்தமிழ் மீனவர்களின் வயிற்றிலடிப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறன்து.

இப்பரவைக்கடல் பகுதிகளில் காலம் காலமாகப் பரம்பரை முறைகள் பாவிக்கப்பட்டு மீன் பிடித் தொழில் செய்யப்படுவதைக் காணக்கூடிதாக இருக்கிறன்து.

மீனவர்கள் சிறு கட்டுமரங்களில் சென்றும் சிறு தோணிகளில் சென்றும் வீச்சு வலை, தூண்டல் போடல் , கூடு, பொறி வைத்து மீன்பிடித்தல், கரைவலை இழுத்தல் என்பவற்றைத் தங்களின் அன்றாட நடை முறைச் செய் முறையாகக் கொண்டிருந்தனர். பிடிக்கப்படும் மீன்களை உணவுத் தேவைக்காக எடுத்துக் கொண்டு மிகுதியானதை உறவினர்க்கு கொடுத்தோ, அல்லது காலை மாலைச் சந்தைகளில் உள்ளூர் தேவைகளுக்கு விற்றோ வந்தார்கள்.

கண்ணாடி இழைப்படகுகள் அறிமுகப்படுத்தப்பட முன்னர் உறுதியான மரங்களால் செய்யப்பட்ட 3-3.5 தொன் வள்ளங்களில் இரவு நேர தொழிலுக்கும் தமிழீழ மீனவர்கள் சென்று வந்தார்கள். அதாவது மாலை இரண்டு, மூன்று மணிபோல சொந்த இடங்களில் இருந்து புறப்பட்டு நன்றாக ஓடி காற்று நீரோட்டம் மற்றும் காலங்காலமாக மீன் பிடிப்பகுதிகளில் பெற்ற தரவுகளைக் கொண்டு மீன்பிடிக்கும் இடத்தைத் தேர்ந்தெடுத்து விடுவலையை விரித்து (Drift Net) மீன்களைப் பிடிக்கிறார்கள். விடுவலையின் மிதப்பு, அது கடலில் அமிழும் தூரம், வலையின் தொய்வு என்பன இவ்வகையான தொழிலில் பிடிக்கப்படும் மீன்களின் தொகையை நிர்ணயிக்கின்றன. இதில் தமிழீழ மீனவர்கள் மிக மிக அனுபவ அறிவைப் பெற்றிருந்தார்கள். இந்த அனுபவ அறிவு அவர்களுக்குச் சந்ததி சந்ததியாகக் கிடைக்கப் பெற்ற ஒரு கொடையாகும்.

ஆக்கம் - தேவராஜன் -

(தொடரும்)

## Tamil Eelam Economic Development Organisation

*NOTIFICATION OF POSTPONEMENT OF SEMINAR IN LONDON*

**International Symposium**: 'Towards meeting the energy requirements of Tamil Eelam'
**Venue**: Imperial College, University of London, UK
**Date**: Sunday, 16th March 1997

TEEDOR regrets to announce the postponement of this seminar due to unavoidable circumstances. A seminar on the same theme is now envisaged for **Saturday 20th September 1997**. Arrangements will be notified in due course.

We apologise to the many speakers and registrants who have been in contact with us for any inconvenience caused as a result of the postponement. Those who have already paid the seminar fee may either request a refund or apply to carry over their payments towards the re-arranged seminar.

In planning for the new seminar, we are also calling again for papers from specialists and experts in various energy related topics, to reach us before **30th June 1997**.

Some of the major topics covered in this conference are:

### 1) Renewable Energy

- Wind power for localised pumping and milling
- Wind power electrical generation
- Biomass
- Synthetic fuels
- Solar power
- Hydro
- Wave

### 2) Fossil Fuel

- Thermal power generation using fuel oil, coal, tar sands, Shale oil, orimulsion or geothermal energy. The range of optional generating capacities, location, environmental, considerations and investment and production economics.
- Consolidation and assessment of existing geological and geophisical studies for hydrocarbon bearing structures in the onshore and offshore areas of Tamil Eelam.
- The long-term case for economics and financing for further exploration, drilling and feasibility studies and consideration of joint venture partnerships.

**For further enquiry please contact;**
The Conference Co-ordinator, TEEDOR, Eelam House, 202 Long Lane, London SE1 4QB
Tel: ++(0)181 365 0249
E-mail: sri@swanmews.demon.co.uk

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அபிவிருத்திச் சேவைகளுக்குக் கடல் கடந்து வாழும் தமிழ் மக்களின் பங்களிப்பு

ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டுச் சட்டதிட்டங்களுக்கேற்ப தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்தந்த நாட்டு அரசாங்கங்களின் ஒத்துழைப்புடனும் செயற்பட வேண்டிய தேவைகள இருக்கின்றன.

தமிழீழ மக்களின் தேவைகள் இன்றைய போர்க்கால சூழ்நிலையில் அதிகரித்த வண்ணமே உள்ளன. இத்தருணத்தில் வெளிநாடுகளில் வாழும எமக்கு இரண்டு முக்கிய கடமைகள் இருக்கின்றன. தங்குநிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் எமது மக்களின் நிலையை சுயசார்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு எமது பங்களிப்பையும், எம்மைச் சுற்றியிருப்போரது பங்களிப்பையும் வளர்ப்பதற்கு நாம் கூடிய முயற்சிகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இரண்டாவதாக தமிழீழத்தில் மக்கள் படும் அவலங்கள் வெளியுலகுக்குத் தெரியாவண்ணம் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கும் நிலையை எதிர்கொண்டு எமது மக்களின் கஷ்டங்களையும் நியாயமான தேவைகளையும் வெளியுலகுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். இவ்விரு விடயங்களில் பங்களிப்புச் செய்யும் தேவையை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

தமிழீழப் பகுதிகளில் அகதிகளின் நிலை எப்போதையும் விட மிகக் கவலைக்கிடமாக மாறியுள்ளது. "சூரியக்கதிர்" "சத்ஜய" இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து அகதிகளின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துள்ளதுடன் அவர்களுக்குச் சென்றடையும் அத்தியாவசிய உணவு, மருந்துப் பொருட்களும் சென்றடையாத சூழ்நிலையே நிலவி வருகிறது. உதாரணமாக வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் மக்களுக்குத் தேவையான உணவில் பாதியேனும் அப்பகுதிக்கு எடுத்துச் செல்வதில் தடைகள் இடப்பட்டிருக்கிறது. சிலநேரங்களில் அரச மட்டத்தில் உணவுகளை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டால் கூட, தமிழீழத்தின் எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவ முகாங்கள் அனுமதி வழங்குவதில்லை. இன்றைய சூழ்நிலையில் உணவுப் பற்றாக்குறையினால் ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்களில் கணிசமான தொகையினர் உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் குன்றிய நிலையில் உள்ளார்கள். இவர்களுக்குப் போதிய சத்துணவு உடனடியாக கொடுக்கப்பட வேண்டியுள்ளது. மருந்துப் பற்றாக்குறையும் எமது மக்களின் சுகாதார நிலையை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. மலேரியா, மஞ்சள் காமாலை, செப்டீமியா போன்ற நோய்கள் பயங்கரமாகப் பரவியுள்ளன என அறிய வருகிறோம்.

மேலும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளின் காரணமாக இடம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனாலும் இவர்கள் தொடர்ந்தும் தங்குநிலையில் இருப்பதனால், இவர்களை பராமரிக்க கணிசமான நிதி தேவைப்படுவதனாலும் எமக்கு தொடர்ச்சியாக பெருமளவு நிதி தேவைப்படுகிறது. அதே நேரத்தில் நீண்ட நாள் அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கும் திட்டங்களுக்கு தடங்கலகள் ஏற்படும் அபாயமும் உள்ளது.

தற்போது, எமது திட்டங்களில் உடனடி நிவாரணப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் தங்கு நிலையில் இருக்கும் மக்களை இடைக்கால, நீண்ட காலத்திட்டங்களின் மூலம் ஓர் சுயசார்பு நிலைக்கு மாற்றுவதே எமது நோக்கமாகவுள்ளது. இதன் அடிப்படையில் பல இலட்சக்கணக்கான மக்கள் விரைவாகப் பயனடைய வேண்டும் என்ற நோக்கோடு, சென்ற நவம்பர் மாதம் முதல் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தமிழீழப்பகுதிகளில் துரித புனர்வாழ்வுச் சேவைத்திட்டமொன்றை ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களும், சமூக நலன்புரி அமைப்புகளும் இணைந்து செயற்படுத்தக் கூடிய முறையில் முன்வைத்துள்ளது. சுகாதாரம், கல்வி, விவசாயம், வீடமைப்பு, புனர்வாழ்வு, தொழில், பொதுவிடயம் என்று ஏழு பிரதான அம்சங்களின் கீழ்ப் பல திட்டங்களை முன்வைத்து, குறிப்பாக வெளியூரில் வாழும் மக்களின் உதவியுடன் நிர்மாணிக்கத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்பட்டு வருகிறது. நாம் செயற்படுத்தும் திட்டங்கள் பல ஆய்வுகளின் அடிப்படையில் முடிவெடுத்து அமுலாக்கப்படுவதனால் அவை முற்றாக எமது மக்களுக்கு பலன்களை அளிக்கின்றது. இங்கு முக்கியமாகக் கூறப்படவேண்டிய இன்னுமோர் விடயம் என்னவென்றால், எமது செயற்திட்டங்களை அமுலாக்க அரசாங்க அதிபரின் ஒத்துழைப்பும், ஏனைய வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பும் கிடைக்கின்றது.

நாம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்திட்டங்களுக்கு திட்ட அடிப்படையிலேயே உதவியை நாடுகின்றோம். இவ்வாறு மக்களின் உதவியை நாடும்போது, அவர்களின் பங்களிப்புக்கள் எமது மக்களை எவ்வாறு சென்றடைகின்றது என்பதை அவர்கள் கண்கூடாகக் காண முடிகிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டங்கள் உடனடி, இடைக்கால, நீண்டகால அடிப்படையில் அமைந்துள்ளன. தமிழீழப் பகுதிகளில் திடீர் இடப்பெயர்வுகளோ அனர்த்தங்களோ நடைபெறும் போது, உடனடி நிவாரணப் பயிற்சிகளுக்கு பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன. சிறுவர்களின் போஷாக்கு, பெண்கள் அபிவிருத்தி, முன்பள்ளி போன்ற இடைக்கால திட்டங்களுக்கும் குடியமைப்பு, கல்வி, தொழில்வாய்ப்பு, பலதுறை பயிற்சியகம் போன்ற நீண்டகாலதிட்டங் களுக்கும் கலை கலாச்சார, விளையாட்டு பழைய மாணவர்கள் சங்கங்கள் மற்றும் சமூக நலன்புரி அமைப்புக்கள் தொடர்ந்து உதவிகளை வழங்குகின்றனர்.

புலம் பெயர்ந்து சர்வதேச ரீதியில் பல நாடுகளிலும் வாழும் தமிழீழ மக்கள் தமிழீழத்தில் எம்மக்களின் உண்மை நிலையுணர்ந்து அவர்களின் துயர் துடைக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எடுத்துவரும் பணிகளுக்கு பங்களிப்பை அதிகரிக்க வேண்டும். எம்மக்கள் படும் வேதனைகளை வெளியுலகத்தின் எந்தவொரு தொடர்பு சாதன ஊடகமும் எடுத்துச் சொல்ல முடியாதிருக்கும். தற்போதைய சூழ்நிலையை மாற்றுவதற்கு முயற்சிகளை எடுத்து எமது சொந்தங்களின் அவலத்தை தயங்காமல் எந்தவொரு இடத்திலும் எடுத்துரைக்க வேண்டும். இவ்விடயங்களில் நாம் எமது பங்கை அளிப்போமானால் எமது மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒரு பகுதியினையாவது பூர்த்தி செய்ய முடியும்.

## செய்திச் சிதறல்

*** சத்துணவு நிலையம் திறப்பு**

மன்னாரில் உள்ள முருங்கன்பிட்டியில் 5 வயதிற்கு உட்பட்டோரைப் பராமரிக்கும் சத்துணவு நிலையமொன்றைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திறந்து வைத்துள்ளது.

*** தாண்டிக்குளத்தில் மருந்து உணவுகளை கொண்டு செல்லத்தடை**

தாண்டிகுளத் தடைமுகாமில் மருந்து உணவு வகை கொண்டு செல்லத் தடைசெய்யப்பட்டுள்ளது. கடந்த 04.02.97 அன்று தாண்டிகுளத்தினூடு தனது மருந்துப் பொருட்களைக் கொண்டு சென்ற வயதான மூதாட்டியின் மருந்துகளை இராணுவம் பறித்து எல்லா மருந்துகளையும் உடைத்து ஒன்றாகக் கலந்து விட்டு அவற்றை உட்கொள்ளுமாறு வற்புறுத்தியது.

*** தொடர்ந்தும் இடம்பெயர்வு**

வவுனியா, மன்னார் எல்லைப்புறங்களில் இராணுவத்தின் பலத்த எறிகணைத் தாக்குதல்களால் இடம்பெயர்ந்து அகதிகள் மடு அகதி முகாமை நிறைத்துள்ளனர். மேலும் இடம் பெயரும் மக்கள் அகதிமுகாமில் இடம் இன்மையால் மரங்களின் கீழும் வீதி ஓரங்களிலும் தமது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர்.

*** முகாங்களை நோக்கி எறிகணை**

தமிழ் மக்கள் தஞ்சமடைந்துள்ள அகதிமுகாங்களை இலக்கு வைத்து இராணுவம் எறிகணைத் தாக்குதல்களை நடாத்துவது குறிப்பிடப்பட்டுள்ளது.

*** நெல்வயல்கள் அழிப்பு**

வவுனியாவில் தமிழர்களின் 12,000 ஏக்கர் நெல் வயல்கள் இராணுவத்தால் தீ வைத்தும் எறிகணைத் தாக்குதல்களாலும் அழிக்கப்பட்டுள்ளது.


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

**தமிழர் புனர்வாழ்வுக்கழகங்களின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்**

TRO Botswana:Ph/Fax: (267) 309 139
TRO Canada: Ph: (1416) 661 6933
TRO Denmark: Ph: (4597) 223 647
TRO France: Ph((331 46) 489 850
TRO Germany: Ph/Fax: (4921) 665 8508
TRO U.K. Ph: 44181 520 5876
TRO Italy: PH: (39 91) 636 1454
TRO Holland Ph: (3172) 644 442
TRO New Zealand :Ph: (649) 537 0258
TRO Norway Ph: (47 22) 646 592
TRO South Africa Ph: (27 471) 310 213
TRO Sweden Ph: (4686) 870 649
TRO Switzerland Ph: (41 41) 260 8398
TRO U.S.A. Ph: (0 1 301) 937 3097
TRO Australia:Ph:/Fax: (613) 9800 3899


முதன்முதலாக

ஐரோப்பா தழுவிய

**குறும்படம் போட்டி**

**கலைஞர்களே ! உங்கள் 'கமரா' கண்களைத் திறவுங்கள். உங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள் !**

சமூகத் துடிப்புள்ள உங்கள் கலைப் பார்வை உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும்.

- 15 இல் இருந்து 20 நிமிடங்கள் மாத்திரமே திரையில் ஓடக்கூடிய "குறும்படம்" மாத்திரமே உங்களிடமிருந்து போட்டிக்காக எதிர்பார்க்கப்படுகின்றது.
- இந்தப் போட்டியில் தமிழீழப் பிரஜைகள் எவரும் பங்குபற்றலாம்
- உங்களை வளர்ப்பதன் மூலம் தேசத்தை வளருங்கள்.

மேலதிக விபரங்கட்கு :
தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் ☎ 01 43 58 11 42

# தமிழீழ தேசியப்பணியில் அனைத்துலகத் தமிழ் மக்கள்

## அவுஸ்திரேலிய தினம் ! தமிழ் மக்களும் பங்கேற்பு

அவுஸ்திரேலிய தினம் கடந்த மாதம் 26ஆம் திகதி கொண்டாடப்பட்டது. மெல்பேர்ன் நகரிலும் பலவிதமான நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் இடம்பெற்ற பல்லின, கலாச்சார மக்களும் கலந்து கொண்ட மாபெரும் பேரணியில் தமிழீழ மக்களும் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டனர். இப் பேரணியில் தமிழ்ப் பாரம்பரியக் கலாச் சாரத்தின் எடுத்துக் காட்டாக, திருமணக் கோலத்தில் மண மகன், மணமகள் மற்றும் தோழன், தோழி ஊர்வலமாகச் சென்றனர். மேலும், தமிழீழத் தேசியக் கொடியின் நிறங்களில் சிவப்பு, மஞ்சள் நிறத்தில் கொடிகள் பிடித்துச் செல்லப் பட்டதுடன் கலந்து கொண்ட தமிழ்ப் பெண்களில் பலர் அதே நிறத்தில் சேலை அணிந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



விக்டோரியா பாராளுமன்றத் தருகில் ஆரம்பித்த இப்பேரணி மீண்டும் அதே இடத்தில் மாபெரும் கூட்டத்துடன் முடிவுற்றது. ✳

## தமிழர் கலைபண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளை நடாத்தும் அன்னை பூபதி நினைவுக் கவிதைப்போட்டி 1997

### விண்ணப்பப்படிவம்

1) விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:- ------------------------------

2) பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயர்:- ------------------------------

3) முகவரி:- ------------------------------

4) தொலைபேசி இலக்கம்:- ----------------- 5) விண்ணப்பதாரரின் பிறந்தநாள்:

6) பங்குபற்றவிருக்கும் பிரிவு:- ------------------------------

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

மேலே குறிப்பிட்டுள்ள பெயருடைய விண்ணப்பதாரராகிய நான் அன்னை பூபதி நினைவுக் கவிதைப் போட்டியிற் பங்கேற்க விரும்புகிறேன் என்றும் நடுவரது தீர்ப்பை முழுமனதுடன் ஏற்பேனென்றும் உறுதி கூறுகிறேன்.

**பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம் திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்**

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழக யேர்மனிக்கிளை வருடாவருடம் நடாத்திவரும் அன்னை பூபதி நினைவுக்கவிதைப் போட்டிகளின் 1997ம் ஆண்டிற்கான போட்டியை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

**கவிதைப் போட்டிக்கான விதிகள்:**

போட்டியில் பங்குபற்றுவோர் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து கவிதையின் பிரதியொன்றையும் இணைத்து கீழே குறிப்பிட்டுள்ள தொடர்பு முகவரிக்கு 01-04-1997 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பரிசுக்குரியவராக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில், வயதை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கேட்கப்படுவர்.

அனைத்துப்பிரிவுகளும் 'அன்னைபூபதி' எனும் தலைப்பிலேயே கவிதைகளை எழுதி அனுப்புதல் வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கவிதைகளுக்குரிய போட்டியாளர்கள் பின்னர் அழைக்கப்பட்டு பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**போட்டியாளர்கள் கவிதை படிப்பதற்கான நேரஎல்லை:**

| | | | |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு - | மூன்று நிமிடங்கள் | நடுப்பிரிவு - | ஐந்து நிமிடங்கள் |
| மேற்பிரிவு - | ஏழு நிமிடங்கள் | அதிமேற்பிரிவு - | பத்து நிமிடங்கள் |

**பிரிவுகளுக்கான வயதெல்லைக் கணிப்பு:**

| | |
|---|---|
| கீழ்ப்பிரிவு | 01-01-1987 அன்றும் அதற்குப்பின்னரும் பிறந்தவர்கள். |
| நடுப்பிரிவு | 31-12-1981 ற்கும் 01-01-1987 ற்கும் இடையில் பிறந்தவர்கள். |
| மேற்பிரிவு | 31-12-1977ற்கும் 01-01-1982 ற்கும் இடையில் பிறந்தவர்கள். |
| அதிமேற்பிரிவு | 31-12-1977 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள். |

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

Kulturelle Organaization der Tamilien e.V
Postfach 1160 , 37441 Bad Sachsa

தமிழர் கலைபண்பாட்டுக்கழகம், யேர்மனிக்கிளை

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

## இத்தாலி அரச அதிகாரிகளுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் சந்திப்பு

சர்வதேச ரீதியாக புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்திட்டங்களை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனைத் துலக ஒருங்கிணைப்பாளர் கலாநிதி. ஜெ. மகேஸ்வரன் அவர்கள், தை மாதம் 30 ஆம் திகதி இத்தாலி நாட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு பலெர்மோ நகரில் மூன்று நாட்கள் தங்கியிருந்து இத்தாலி நாட்டின் அரச அதிகாரிகள், முதல்வர்களைச் சந்தித்து தமிழீழத் தாயக மக்களின் தற்போதைய அவல நிலைமைகளை விளக்கமாக எடுத்துக்கூறி உதவியும் ஆதரவும் கோரியுள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், இத்தாலிக் கிளையினர் ஒழுங்கு செய்திருந்த செயற்திட்டத்தின்படி சிசிலித் தீவின் மாநில, மாவட்ட, மாநகர முதல்வர்களையும், சில அரச அதிகாரிகளையும் சந்தித்த அவர், தமிழீழத்தில் சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடை, மருந்துத் தடைகளினாலும் மற்றும் சிறிலங்காவின் முப்படைகளினால் தமிழ் மக்கள் மீது நடாத்தப்படும் இனவெறித் தாக்குதலாலும் அல்லலுறும் மக்களின் துன்ப நிலை பற்றியும், இதற்கான நிவாரண உதவிகள் வழங்க வேண்டிய தேவைகள் குறித்தும் எடுத்து விளக்கினார். முதல்வர்களது உதவியையும் ஆதரவையும் கேட்டார்.

30-01-1997 அன்று மாவட்ட முதல்வர் கலாநிதி பூச்சோ பியெத்திரோ (Don Pucci Pietro) அவர்களை அவரது செயலகத்தில் ( Pallazzo Comitini) சந்தித்து மேற்படி நிலையைத் தெரிவித்தார். அதற்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி கவனத்தில் எடுப்பதாக முதல்வர் உறுதியளித்துள்ளார்.

பின்னர் அதே நாளன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பலெர்மோ வாழ் தமிழ் மக்களுடன் கலந்துரையாடினார். தாயகத்தில் எமது மக்களுக்களின் நிவாரணப் பணிக்கான நிதித் தேவையின் அவசியத்தை தெளிவாக விளக்கி, அதற்கான பங்களிப்பைப் பற்றி யும் கேட்டுக் கொண்டதோடு - தற்போது வன்னி மண்ணில் தமிழர் புனர்வாழ்வுக் கழகச் செயற்பாடுகளையும் விளக்கினார். இக் கூட்டத்தில் இத்தாலி நாட்டில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் புதிய பொறுப்பாளர் திரு. கணேசகுமாரன் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

மறுநாள் மாநில முதல்வர் திரு. புறவின்சானோ யூசேப்பே (Provienzano Giuseppe) அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார். அதேதினம் பிற்பகலன்று பலெர்மோ மாநகர சபைச் தலைமைச் செயலகமான Palazzo Delle Aquilie இல் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



இதில் மாநகர சபை முதல்வர் திரு. லெயோ லூக்கா ஓர்லாந்தோ (Leo Lucca Orlando) அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார். கலாநிதி ஜெ. மகேஸ்வரன் அவர்கள், அங்கு வந்திருந்த பத்திரிகையாளர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் இத்தாலிய மக்களுக்கு, தமிழீழத்தின் தற்போதைய நிலைபற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்.

இறுதியாக, வத்திக்கான் நகரில் ஒலிபரப்பப்படும் வானொலிச் சேவையின் தமிழ்ப் பகுதிக்கு விசேட செவ்வி ஒன்றும் வழங்கினார். தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் நம் நாட்டு மக்களின் அவலத்தைப் போக்க சிறிதளவாவது உதவுக்க வேண்டும் என அவர் வேண்டிக் கொண்டார். ✳

# நந்திக் கடலோரம் முந்தைத் தமிழ் வீரம் வந்து நின்று ஆடியது நேற்று!

சிங்கள ஆதிக்கத்தின்
சிம்மாசனத்திற்கு என்ன பெயர்?
"சந்திரிகா அரச"
வேரறுத்து தமிழினத்தை விழுத்தி
கொளுத்தி எரிப்பவர்களுக்குத் தளபதி யார்?
"அனுருத்த ரத்வத்த"
துரோகத்தின் உச்சத்துக்கு சமகால உதாரணம் சொல்க.
"லக்ஷ்மன் கதிர்காமர்"
கையிலுள்ள எலும்புத் துண்டுக்காக
காலைச்சுற்றிவரும் அவமானத்திற்கு
மனிதப் பெயரென்ன?
"டக்ளஸ் தேவானந்தா"
கடல்வற்றக் காத்திருந்து
குடல்வற்றிச் செத்த கொக்குக்கு
புதிய உவமை கூறுக?
"நீலன் திருச்செல்வம்"
நாளையெம் தலைமுறையின்
இன்றைய வரலாற்றுப் பொது-அறிவுப் போட்டிக்கு
இதுவே கேள்வியும் பதிலும்.
என்னபாவம் செய்தது ஈழத்தமிழினம்?
கண்ணீரோடு இன்னும் எத்தனை காலத்தைக் கழிக்குமோ?
மூச்சை ஆசுவாசப்படுத்த முடியாத துயரப்பயணத்தில்
தமிழீழம், தேற்ற ஒருவரற்ற தேசமா?
உயிர் மூட்டையான உடலில் உரப்பை மூட்டையைச் சுமந்தபடி
பகலில் மரத்தின் கீழும,
இரவில் மதவின்கீழும்
வாழும் எச்சில் வரலாறு எவன் கொடுத்தது?
ஈழத்தமிழனுக்கு இந்த விதியை எழுதியவன் யார்?
கடவுளா?
அவன் கடவுளெனினும் கழுவிலேற்று.
இப்போது மழைகாலம்
ஊரின் முகடு பிரிந்து ஒழுகுகிறது.
சூரியன் எரிக்கிறது,
மாரி மழை நனைக்கிறது,
கூதற்காற்றோ கொடுகுகிறது,

## ஈழத்து உலைக்களம்

**- வியாசன்**

நுளம்பிற்கும் தமிழன் குருதியே குழம்பு
ருசித்துப் புசிக்கிறது.
வானக்கூரையின் கீழே
ஈழத்தமிழரெல்லாம்
சபிக்கப்பட்ட பாவ மக்களாக....
இங்குமங்குமாக எங்கெங்கோ அலைந்துவிட்டு
மரத்தடியையே மாளிகையாக்கி
இப்போ குளிகட்டிக் கொண்டனர்.
அதற்குள்ளே ஆனந்தமாகத் துயில்கிறது
ஏதுமறியா எம்பினத்தின் குருத்து.
சந்திரிகா அரசு தமிழரின் வாழ்வை
கொத்திக் குதறிச் சடலமென வார்த்தியபோது

எழுந்த ஒப்பாரிகளும் கூக்குரல்களும்
இன்று வெந்து தணிந்து வெறும்
முனகல்களாகிவிட்டன.
ஐயோ பாவம் எனச் சொல்லிய பல்லிகளும்
வாயடங்கி மௌனித்துவிட்டன.
உலகத்துக்கும் பல சோலிகள்
ஈழத்தமிழனைப்பார்க்க எங்கே நேரம்?
தன்னைத்தானே சுற்றியபடி
சூரியனையுமல்லவா சுற்றிவரவேண்டும்?
அழுகின்ற தமிழனுக்கு ஆறுதல் சொல்ல முடியாது
பூமியும் பேசாமற் சாமியிடம் விட்டுவிட்டது.
சாமியும் இப்போது ஆமியிடம் கொடுத்துவிட்டு
பன்றிக்குப் பால்கொடுக்கப் போய்விட்டார்.
தாயுமானவருக்கும் தமிழரைப் பார்க்க நேரமில்லை
ஓய்வு தேடி உறக்கத்தில் கிடக்கின்றார்.
கவிஞர்களின் பேனாக்களும் களைத்துப்போய்விட்டன.
எத்தனை கவிதைகளைத்தான் எழுதுவது?
மூக்கிலும் விழிகளிலும் ஒழுகும் வெண்ணீரை
எத்தனை வரிகளிற்தான் ஒத்தியெடுப்பது?
கவிஞர்களும் கண்ணயர்ந்துவிட்டனர்.
ஈழத்தமிழன் வாழும் தமிழனாக
இன[illegible]
என்கையிற் பிள்ளை எனக்கே அடைக்கலமென்று
தமிழர்களை அவலமே தத்தெடுத்துவிட்டது.
துன்பத்தில் திரிபோட்டு கண்ணீரே விளக்கெரிக்கிறது.
ஈழத்தமிழன் பேரிற்தான் எத்தனை வியாபாரம்?
நடாளுமன்றுக் கதிரைகளில் சில பச்சோந்திகள்.
இடைக்கால அரசை எம்மிடம் தாருங்களென்று
படைநடத்தப் புறப்பட்ட சில பழைய "தளபதிகள்"
"வெள்ளைவான்" வெறியர்களாகச் சிலர்.
தலையாட்டும் தஞ்சாவூர் பொம்மைகளாக இன்னும் சிலர்.
போராட்டம் சிலருக்குப் பெரிய வியாபாரமானது.
தெருப்பெரியும் நிலமாகத் தாயகம்,
தெருத்தெருவாக உறவுகள்,
கல்லறைகளுக்குள்ளே வல்லமைகள்.
இப்படி எத்தனை விதமான விலைகொடுப்பு
விடுதலை உயிர்ப்பின் வேரின் அடியில்
உயிரையே உரமாக்கும் சுதந்திரப் புலிகள்.
கண்ணீரைச் சுமக்கும் விழிகளெனினும்
உள்ளே பார் தீயின் நாக்குகள் சுடர்கின்றன.
சொல் பகையே!
ஊராக எம் உறவுகளைக் கலைக்கின்றாய்
கலைத்துவிடு.
அகதியென்று உலகத்திசையெங்கும்
தமிழனை அவதியுறக் கலைக்கின்றாய்
கலைத்துவிடு.
உறக்கத்தில் கிடக்குமா எம்மினம்?

பக்கவிளைவைப் பார்.......உனக்கது அச்சமூட்டும்.
மட்டக்களப்பிலிருந்து....
திருகோணமலையிலிருந்து.....



மன்னாரிலிருந்து.....
யாழ்ப்பாணத்திலிருந்து.....
இன்று வன்னியிலிருந்து......
கலைக்கின்றாய்
கலைத்துவிடு.
ஈழத்தமிழனின் இளைய தலைமுறைக்கு
கோபம் கொப்பளிக்கட்டும்.
வாழும் உரிமையைப் பறித்தாயே பாவி என்று
தேகம் கொதிக்கட்டும்.
போராடி என்றும் புகுவேன் என
நம்பிக்கை உதிக்கட்டும்.
இலவம் பஞ்சு வெடிப்பது இனத்தை விருத்தி செய்யவே.
மரங்கள் விதையுதிர்ப்பது புதிய தளிர்களுக்காகவே.
பகையே சொல்!
ஈழத்தமிழனை என்ன செய்யப் போகிறாய்?
கூழாகக் காய்ச்சிக் குடிக்கப்போகிறாய்?
குடித்து முடி
வயிறு வெடித்துக்கிடப்பாய்.
உனக்கு அழிவில்லையென்றா வரம் பெற்றாய்?
எம் இளைய தலைமுறை "நரசிம்ம அவதாரம்" எடுத்துள்ளது.
சந்ததியின் சக்தி வலுப்பெற்று வருகிறது.
முல்லைத்தீவு..... அதற்கு முன்னுதாரணம்.

*நந்திக் கடலோரம் முந்தைத் தமிழ் வீரம்*
*வந்து நின்று ஆடியது நேற்று.*
*[illegible]*
*இங்கு வந்து [illegible].*



# உங்கள் கருத்துக்கள்

**மதிப்பிற்குரிய களத்தில் ஆசிரியர் குழுவிற்கு!**

தமிழீழ விடுதலைப் போராட்ட நிகழ்வுகளையும் தாயகத்து உண்மைச் செய்திகளையும் சுமந்து பணிபுரியும் 'களத்தில்' இன்றும் என்றும் எல்லாத் திசைகளிலும் கால் பரப்ப எனது வாழ்த்துக்கள்.

**எவ். பிறேமானந்தன் - யேர்மனி.**

**ஆசிரியர் அவர்கட்கு,**

நான் 'களத்தில்' பத்திரிகையை ஐந்து வருடமாக சுவைக்கும் தமிழீழ வாசகன். இருந்தும் ஒரு மனக்குறை. கவிதைக் களத்தில் ஒரு சிலரே கவிதை எழுதுகிறார்கள். புதியவர்களின் கவிதைகளையும் பிரசுரித்தால் இன்னும் ஆரோக்கியமான கவிஞர்கள் தோன்றுவார்கள். அத்துடன், கவிதைகள் - மரபுக் கவிதைகள் மற்றும் புதுக் கவிதைகள் ஒரு சிலருக்கே புரிகிறது. சாதாரண பாமர மக்களுக்கும் போராட்ட உணர்வை ஊட்டக்கூடிய கவிதைகளைப் பிரசுரிப்பது வரவேற்கத்தக்கது.

அடுத்து, என்னைப் போன்ற இளைஞர்களை நாளை மலரப்போகும் தமிழீழத்தில் சிறந்த தொழில் வல்லுநர்களாக ஆக்குவதற்குகந்த சிறுதொழில் - கணனி சம்பந்தப்பட்ட விடயங்களையும் ஒரு பகுதியாக சேர்த்துக்கொள்வீர்களா? இதனால், நம் தேசியத் தலைவர் உருவாக்கும் தமிழீழத்தை அவருடன் சேர்ந்து நாமும் உறுதியாக்கலாம்.

**தங்கள்,**
**பொன் சிவகுமார் - குவைத்.**

**கனம் தங்கிய ஆசிரியர் அவர்கட்கு,**

இன்று எம் மண்ணில் நிகழும் நிகழ்வுகளையும் எம் போராட்டத்தின் தேவைகளையும் புலம்பெயர்ந்து வாழும் எம் மக்களுக்கு தெரியப்படுத்துவது பத்திரிகைகளின் பெரும் பணியாகும். இவ்வகையில், 'களத்தில்' பத்திரிகையின் பணி போற்றுதற்குரியதே! மேலும் 'நக்கீரன்' கட்டுரை விறுவிறுப்பானதாகவும் பயனான விடயங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது. உண்மைக்கதை, மாவீரர்களின் தியாகம், வீரம் என்பன நீண்ட காலமாக தாயகத்தைப் பிரிந்து புலம்பெயர் நாடுகளில் இருக்கும் தமிழ் மக்களை எம் விடுதலைப் பணியில் புதிய உற்சாகத்துடன் செயற்பட வழி வகுக்கும் என நம்புகின்றேன்.

**இப்படிக்கு,**

**களத்தில் வாசகன் ச. ஆனந்த் - நெதர்லாந்து.**

**ஆசிரியர் குழுவினர்க்கு!**

தாயகத்து நினைவுகளோடு பணிவுடன் எழுதிக்கொள்வது.

01-01-97ல் வெளிவந்த பத்திரிகையில் எனது ஆக்கத்தினைப் பிரசுரித்தமைக்கு மிக்க நன்றி.
தாயகத்தின் விடியலில் நிச்சயம் எல்லோரும் ஏதாவது ஒரு வகையில் தத்தம் பங்களிப்புக்களைச் செய்யவேண்டும் தவறினால் வரலாறு கூட மன்னித்தாலும் எமது சந்ததி ஒருபோதும் மன்னிக்காது.

**என்றும் அன்புடன்**
**ஏ.சிறிஸ்கந்தராஜா (துறையூரான்) - சவுதிஅரேபியா.**

**ஆக்கங்கள், கடிதங்கள் அனுப்பியோர்: லோகன் சின்னத்தம்பி -பிரான்ஸ், திலீபன் செல்வகுமாரன் -ஜேர்மனி, சி. சுகுமார் -பிரித்தானியா.**

# நியாயங்கள் ......

"எழும்படா....... தமிழ் நாயே" சிங்களத்தில் இன்னும் கெட்ட வார்த்தைகளால் திட்டியபடி அவனைப் பொலிஸ் நிலையத்திற்கு வெளியே இழுத்துச் சென்றனர்.

சற்று நேரத்தில் 'ஜீப்' ஒன்று சத்தத்துடன் வெளியே போகும் ஓசை கேட்டது. இதில் நிச்சயம் சொக்கலிங்கத்தை எங்கோ கொண்டு போகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்.

என்னில் இனம் புரியாத ஒரு திகில் உணர்வு தொற்றிக் கொண்டது. நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது.

எனது அறைக்குள் கள்ளச்சாராயக் 'கேசில்' பிடிபட்டிருந்த இருவர் ஏதோ சிங்களப் பாடல்களைப் பாடி....... தமிழில் செக்ஸ் ஜோக்ஸ்செல்லாம் சொல்லிச் சிரித்துவிட்டு........ நித்திரையாய்க் கிடந்தனர்.

நான் இரவு முழுவதும் யோசித்து...... யோசித்து........ அதிகாலையில்தான் நித்திரையானேன்.

மறுநாள் விடிந்தது.

நான் காலைக் கடன்களைச் சிரமத்துடனும் பாதுகாப்புடனும் முடித்துக் கொண்டேன். அந்தக் கள்ளச்சாராயக் கேஸ்கள்...... யாரோ ஒரு வசதியான பெரியமனிதரின் தயவினால் பிணையில் சென்றனர்.

நான் மனதில் பெருமூச்சு விட்டுக் கொண்டேன். 'நாங்கள் மட்டும்தானா அவசரகாலச் சட்டத்தில் குற்றவாளிகள். அவசரகாலச் சட்டத்தில் கைதாகும் ஒருவனுக்கு முக்கியமாக இரண்டு தகைமைகள் இருக்கவேண்டும். ஒன்று, அவன் இந்நாள்வரை எதுவிதகுற்றமும் செய்யாத அப்பாவியாக இருக்க வேண்டும். மற்றையது, தமிழனாக இருத்தல் வேண்டும்...... இந்த நினைப்பு கவலையிலும் எனக்கு மனதில் சிரிப்பை ஏற்படுத்தியது.

ஏதோ உடலில் உயிர் இருக்க வேண்டும் என்பதற்காக, கொடுக்கப்பட்ட உணவை உண்டு முடித்தேன்.

அப்போது அறையினுள் [illegible] பொலிஸ் ஒருவன் இன்னும் ஒரு மணிநேரத்தில் நீ இடம் மாற்றப்படுவாய் என்றான்.

நான் திடுக்கிட்டேன்.

என்னையும் எங்கோ கொண்டுபோகப் போகிறார்கள். சொக்கலிங்கத்தைக் கொண்டுபோன இடத்திற்கா? மனதில் ஏதேதோ கேள்விகள்? எதிர்காலமே சூனியமானதை உணர்ந்தேன்.

என்னை வான் ஒன்றிலே, ஒருமணி நேரம் கழித்து ஏற்றினார்கள். அதற்குள் என்னைப்போல சுமார் 50 இளைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் என்னைப் பரிதாபத்துடன் பார்ப்பது போல இருந்தது.

அதிலே ஒருவன் என்னுடன் பேசினான்.

"இன்று அதிகாலை வெள்ளவத்தை கடற்கரையோரமாக ஒரு பிணம் கண்டெடுக்கப்பட்டதாம். இறந்தவர் நீலநிறச் சேட்டும் கறுப்பு ரவுசரும் அணிந்திருந்தாராம்........ விடுதலைப் புலியாக இருக்கலாம் என பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றனவாம்......

"சொக்கலிங்கம்" நீலசேட், கறுப்பு ரவுசர்....... அப்பாவி....... அநியாயமாகக் கொல்லப்பட்டு விட்டாயே!" மனதில் அவனுக்காக அழுதேன். கண்ணீர் கன்னத்தில் கோடிட்டது.

கதைத்த இளைஞன்........ எதுவுமே புரியாமல் என்னை ஆதரவுடன் பார்த்தான்.

வானின் வேகம் கூடியிருந்தது. ✳

# சிறுபடையான் செல்லிடம்.....

பரந்தன், ஆனையிறவு சிங்கள இராணுவத் தளங்கள் மீது விடுதலைப் புலிகள் பாய்ந்து அங்குள்ள வானொலித் தொடர்புகளை வெட்டியபோது, கிளிநொச்சி இராணுவமுகாம் முல்லைத்தீவு இராணுவ முகாம் போல் தகர்க்கப்பட்டு விட்டதாக [illegible] இராணுவத் தலைமையகம் நம்பியது. இதனால், அங்கு மரணஅமைதி நிலவியதாகக் கொழும்பு பத்திரிகை விமர்சகர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பயத்தினால் உறைந்துபோன சந்திரிகா, பதறியடித்துக்கொண்டு இராணுவத் தலைமையகத்துக்கு ஓடிப்போயிருக்கிறார்.

**தமிழ் மண்ணும், மண்ணுளயாவையும் எங்களுக்குச் சொந்தமானவை. அந்த மண்ணை சிங்கள இராணுவம் போன்ற அந்நியப்படை வந்து ஆக்கிரமிப்பதும் அதில் நிலைகொள்வதும் முடியாத காரியம்.**

'தன் ஊருக்கு யானை, வெளி ஊருக்குப் பூனை' என்பார்களே, அந்தப் பாடத்தைத்தான் சிங்கள ஆட்சியாளர்களும் சிங்கள இராணுவமும் படிக்க மறுக்கிறது.

துப்பாக்கி முனையில் தமிழ் மக்களை அடக்கி ஆளலாம் என்று, சிங்களப் பேரினவாதம் கனவு காண்கிறது.

இந்த ஒருவிடயத்தில் மட்டும் சிங்களவர்கள் மூடர்களாகவே இருக்கிறார்கள். தமிழ் மண்ணில் நூற்றுக்கணக்கான இராணுவ முகாம்களை நிறுவுகிறார்கள். பின் விடுதலைப் புலிகளிடம் செமத்தியாக அடிவாங்கிக் கொள்கிறார்கள். வட-கிழக்கு தமிழீழத்தில் விடுதலைப் புலிகளிடம் அடிவாங்காத நாட்களே இல்லையென்பது போல், ஒவ்வொருநாளும் அடிவாங்கி ஆள், ஆயுத இழப்புக்களைச் சந்தித்த வண்ணம் உள்ளார்கள்.

சிங்கள இராணுவம் தமிழ் மண்ணை ஆக்கிரமிக்க அங்கு நிலை கொண்டிருக்கும் வரை, விடுதலைப் புலிகளிடம் அடி வாங்குவது தவிர்க்க முடியாது போய்விடும்.

இப்படிச் சொல்வதால், சிங்கள இராணுவத்தினர் கோழைகள் என்று அர்த்தமில்லை.

சிங்கள இராணுவத்தினர் பிழையான இடத்தில், பிழையான நேரத்தில், பிழையான காலத்தில், பிழையான காரணங்களுக்காகப் போராடுகிறார்கள்.

சிங்கள இராணுவத்தினர், ஆழமான நீரைவிட்டு வெளியே வந்த முதலைகளுக்கு ஒப்பானவர்கள். அந்த முதலையை மற்ற உயிரினங்கள் எளிதில் வென்றுவிடும். வேங்கைகள் அதைமிக எளிதாக வென்று விடுவார்கள். இதனை, தமிழ்மறை தந்த வள்ளுவப் பெருந்தகை அழகாகச் சொல்லியிருக்கிறார்.

**நெடும் புனலுள் வெல்லும் முதலை**
**அரும்புனலின் நீங்கின் அதனைப் பிற**
(திருக்குறள் 495)

இன்னும் ஒரு அருமையான குறளை, பொருத்தமான குறளை திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

**சிறுபடையான் செல்லிடம் சேரின்**
**உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும்**
(திருக்குறள் 498)

தக்க இடத்தில் (தமிழீழத்தில்) உள்ள சிறுபடையை (விடுதலைப்புலிகளை) உடைய அரசனை (பிரபாகரனை) அழிக்கப் பெரும் படையுடைய மன்னன் (சந்திரிகா), அவன் இருக்கும் இடம் சென்றால் அழிந்து விடுவாள்.

தமிழ் மறையின் இந்தத் தீர்ப்பு எந்நாளும் பொய்க்காது என்பதை, சிறிலங்காவை ஆட்சி செய்யும் சிங்கள ஆக்கிரமிப்புக்காரர்கள், ஏகாதிபத் தியவாதிகள், சிங்களப் பேரினவாதிகள் மிகவிரைவில் பாடம் படித்துக் கொள்வார்கள். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை விடுதலைப் புலிகளின் பரந்தன், ஆனையிறவுத் தாக்குதல்கள் உறுதிப் படுத்துகின்றன. ✳

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# உலகத்தமிழினமே இன்னுமா உறக்கம் ?

இது வினோத உடைப் போட்டிக்கான கோலமல்ல. தொடரும் தமிழின அழிப்பின் அவலங்களே இவை. பேரினவாதி சந்திரிகாவின் அமைதிப் பொதி தந்த பரிசுகளே இவை. உலகத்தமிழினமே! புரிந்து கொள்வாயா இதை?





## யாரிவர்கள் ?

புழுதி மண்ணில்
புழுதி விளையாடிய
இளைய பரம்பரை....
வறுமையின் பசு
வயிற்றில் கோடு...
வயலில் பணி செய்த
[illegible] பரம்பரை....
[illegible] தறிந்து
[illegible] சக்கரத்தை
[illegible]
[illegible]ஓட்டியவர்கள்
[illegible] இவர்களெல்லாம்
[illegible] படையினரின்
[illegible] குறிகள்!
[illegible]
[illegible]
[illegible]
[illegible]!
தமிழனென்றால் போதும்
தலையெடுக்கத்
தேவையில்லை
தண்டனைகள் பல விதம்
கையிழந்தும் காலிழந்தும்
மெய்யிழந்து பேதலித்தும்
[illegible]
துன்பமெல்லாம்
தொடர்ந்துவரும்
என் செய்வோம்?
காய்ச்சல் குளிசைக்கே
கன்றியழும் 'தேசம்' இது!
நோய்ச் சகதியால்
நலிந்துவரும் தேசமதை
[illegible]
தோள்வேண்டும்
தொண்டுகள் பலவேண்டும்
பாரினிலே பரந்திருக்கும்
பைந்தமிழினமே...
ஏனின்னும் மௌனம்
எழுந்துவா!

- தமிழொளி

எங்கள் கோலங்களின் அவலங்கள்
புரியவில்லையா? ஏன் இந்த
மௌனம்? இன்னும் உறக்கமா?
தொப்புள் கொடி உறவும்
தொலைந்து போனதா?
மனிதாபிமானமும் மௌனம்

கால் இழந்து, கை இழந்து, உரிய
மருத்துவ வசதியின்றி ஏதிலிகளாக
சொந்த மண்ணிலேயே அலைபவர்கள்
இவர்கள் யார்? என்று
[illegible]
அன்னையின் குழந்தைகளே நாங்கள்
உங்கள் இரத்த உறவுகளே நாங்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





எம் உறவுகளே ! மௌனம் கலைந்து,
உறக்கம் நீங்கி எம் திசை நோக்கி
வீறுடன் எழுவீர்! இணைந்து குரல்
கொடுப்பீர்! இன உணர்வுடன்
உதவிக்கரம் தருவீர்!

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 5179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach : 340281
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katharine Rd.
London E6 1BU, UK
Tel: 0181 - 503 4294
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1030 Vika
0115 Oslo - 1, Norway

W.T.C.C
[illegible]

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK
Tel/Fax: 97-166299

T.C.C
Dr. Heliogenen - 106
2517 EL Den Haag, Nederland

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France

T.C.C
Vikingagatan 11 1TR
15384 Spanga, Sweden

T.C.C
P.O.Box 528, Preston
Victoria 3072, Australia